
# செம்மணி

நிலம் 1 துகள் 26 வள்ளுவர் ஆண்டு 2051, 09 - 15 தை 2021 வாரமலர் பக்கங்கள் 24 விலை ரூபா 50/-


# இருட்டுக்குள் தடுமாறும் தடுப்பு மருந்துத் திட்டம்



■ ஸூடோ ஸ்வாமி ■

கொரோனாவைப் பற்றி அலட்டிக் கொண்டிருந்த உலகம் இப்போது மெதுவாக அதிலிருந்து விடுபட்டு கொரோனாவிற்கான தடுப்பூசி பற்றி கதைக்க ஆரம்பித்திருக்கிறது. குறித்த ஒரு சாராருக்கு மட்டுமன்றி, உலகம் முழுவதும் நம்பிக்கையைத் தோற்றுவித்துவரும் இந்த விவகாரமே தற்போதைய நம் நாட்டு தினசரிகளின் வெளிநாட்டுச் செய்திகள் பக்கத்தை நிரப்பி வருகின்றன. ஆமாம், அது வெளிநாடுகளுக்குரிய செய்தியாகவே அமைந்திருந்தாலும் தடுப்பூசி தொடர்பில் உள்நாட்டிலும் இப்போது கதை அடிபடத் தொடங்கியிருக்கிறது.

அபிவிருத்தியடைந்த நாடுகள் எல்லாம் போட்டிபோட்டுக்கொண்டு தமது குடிமக்களுக்கான தடுப்பூசி வழங்கல் திட்டம் தொடர்பில் சுறுசுறுப்பாக இருக்கின்றன. ஆனால், வைத்தியர் தம்மிக்கவின் பாணியை ருசி பார்ப்பதிலும் மத்திரித்த நீர் கொண்ட கலத்தினை ஆற்றில் விட்டெறிவதிலும் நம்நாட்டு சுகாதார அமைச்சர் சுறுசுறுப்பாயிருந்தமை எரிச்சலை கிளப்பியிருந்த நிலையில், கொரோனா தொற்றுக்கான தடுப்பூசியை பெற்றுக்கொள்வது தொடர்பான அவர் முன்மொழிந்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக தெரியவருகிறது.

கொரோனா பெருந்தொற்றுக்கான தடுப்பூசியைப் பெறுவதற்கு உற்பத்தியாளர்களுடன் செய்யப்படவேண்டிய ஒப்பந்தங்கள் தொடர்பிலான யோசனைக்கே கடந்த திங்கட்கிழமை அதிபர் கோட்டாபயவின் செயலகத்தில் இடம் பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் இந்த அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. இலங்கைக்கு கொரொனா தடுப்பூசி கொவக்ஸ் திட்டத்தினூடாக கிடைப்பதற்கு சாத்தியமுள்ள நிலையில்,

# செம்மணி

வாரப் பத்திரிகை


551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781


உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்

**ஆசிரியர்: தே.பிரேமானந்த்**


## நிபுணர் குழாமின் அவசியம்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் எதிர்வரும் மார்ச் மாதம் நடக்கவிருக்கின்ற 46ஆவது அமர்வின்போது ஈழத்தில் நடந்த போர்க்குற்றங்கள் தொடர்பில் இலங்கை அரசைப் பொறுப்புக் கூற வலியுறுத்துவதற்குத் தமிழ் அரசியல்வாதிகள் தரப்பில் முயற்சிகள் எடுக்கப்பட்டுவருகின்றன. வருடம்தோறும் மனித உரிமைகள் குறித்த இந்த அமர்வு நடக்கிறது.

அதற்கான பருவம் நெருங்கிவரும்போது அது குறித்து விவாதிப்பதும் பின்னர் அதைக் கிடப்பில் போடுவதும் வழமையாகவே இருக்கின்றன. ஆகவே இது ஆச்சரியத்துக்குரியதல்ல. ஆனால், இம்முறை தமிழ்க் கட்சிகளைச் சேர்ந்த மூவர் இணைந்து அரசைப் பொறுப்புக்கூற வைப்பதற்கான பொதுக் கொள்கையைத் தயாரிக்கு் முயற்சியில் இறங்கியுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த எம்.ஏ.சுமந்திரன், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் சார்பில் சி.வி. விக்னேஸ்வரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் இந்த விடயத்தில் இணைந்து செயற்படுவதற்கு முன்வந்துள்ளனர். ஒற்றுமையாக இவர்கள் இவ்வாறு இணைந்து செயற்படுவது என்பது வெளிப்படையாக ஏற்றுக்கொள்ளப்படுவதாக இருந்தாலும், சரியான புரிந்துணர்வுடனோ, ஒற்றுமையான திட்ட வரைபுகளுடனோ, ஒருமித்த கருத்தூட்டத்துடனோ இவர்கள் மூவரும் இந்த விடயத்தில் இணைந்துள்ளார்களா என்பது கேள்வியே.

இதற்கு முன்னர் இதுபோன்றதொரு முயற்சியை சுமந்திரன் எடுத்தபோது அவர் இலங்கை அரசுக்கு கால அவகாசம் வழங்க எத்தணிக்கிறார் என்று மற்றைய இரு கட்சிகளினது தலைவர்களும் விமர்சித்தனர். இப்போதும்கூட வெவ்வேறான அணுகுமுறைகளையும் அரசியல் நோக்குகளையுமே தமக்குரியதாக வரிந்துள்ளனர் இந்த மூவரும். எனவே இவர்கள் மூவருமே ஒருவரை மீறி ஒருவர் தமது கொள்கை நிலைப்பாட்டை, அரசியல் இலாப நோக்க அணுகுமுறையை இந்தப் பொதுக் கொள்கைத் தயாரிப்பதில் திணிக்க முயற்சிப்பார்கள்.

இன்னும் விளக்கமாகச் சொல்லப்போனால் ஒருவர் காலை மற்றவர் வாரி விடுவதன் மூலம் அரசியல் இலாபத்தைச் சம்பாதித்துக்கொள்ள அவர்கள் முயற்சிப்பார்கள் என்பதே வரலாற்று உண்மை. எனவே இவர்களிடமிருந்து இன நன்மைக்கான தெளிந்த முடிவுகள் கிடைப்பது அரிதிலும் அரிதாகவே நடக்கக்கூடியது.

போர் முடிவுக்கு வந்து 12வருடங்களை எட்டுகிறது. இப்போதும்கூட இலங்கை அரசைப் பொறுப்புக்கூற வைப்பதான செயற்றிட்டம் ஒன்றை நேர்த்தியாகவும் திறம்படச் செயலாற்றத் தகுந்த மூளைப் பலமுள்ளதாகவும் கட்டமைக்காதது இந்தத் தமிழ்த் தலைவர்களின் பலவீனமே. மாறாகத் தத்தமது அரசியல் போக்கில் இந்த விடயத்தை நகர்த்துவது காலத்தை வீணடிப்பதாகவே இருக்கும். கடந்த தசாப்தம் முழுதும் நடந்ததும் அதுவே. எனவே இந்தப் பொறுப்புக்கூறல் விடயம் மாத்திரமன்றி நீண்டகாலமாகப் புரையோடிப்போயிருக்கின்ற இனப்பிரச்சினை மற்றும் தீர்வுத் திட்ட விடயங்களைக் கையாள்வதற்கு எனத் தனியான மூளைசாலிகளைக்கொண்டதும் சிறப்பு நிபுணர்களைக் கொண்டதுமான குழு ஒன்றை உருவாக்குவதே பயனளிக்கக்கூடியது. கட்சி அரசியல் மற்றும் அரசியல்வாதிகளைத் தவிர்த்தவர்களைக்கொண்டு இந்தக் குழுவை அமைத்து பொறுப்புக்களை அதன் வசம் ஒப்படைக்க வேண்டும். தன்னிச்சையாக அதை இயக்கும்போது இந்த விடயத்தில் நல்லதொரு முன்னேற்றகரமான முடிவை எட்ட முடியும். தமிழர்கள் தொடர்பான அயலுறவைக் கையாள்வதாகவும் இந்தக் குழுவே இருக்கவேண்டும். இதற்கான அரசியல் வழிகாட்டல்களை வழங்கும் ஓர் அமைப்பாக இந்த அரசியல்வாதிகளின் கூட்டு இயங்கினால் போதுமானது.

இனப்பிரச்சினை, இறுதிப்போர்க்குற்றம் தொடர்பான சந்திப்புகள், பேச்சுகள், மற்றும் இதுசார்ந்து இந்தியத் தரப்பினரோடான அணுகுமுறைகளைப் பேணுதல் என எல்லாவற்றையும் கையாள்கின்ற திறனும், வழியும் மிக்கதாக அந்த நிபுணர் குழாம் அமையும்போது தீர்வு துரிதமாகவும் முடிவைப்பெற்றுக்கொடுக்க வழியேற்படுத்தும் வகையிலும் அமைவதற்கான வாய்ப்புக்கள் அதிகமுள்ளன. தவிர்த்து வெவ்வேறு கோணங்களில் கட்சி அரசியல் நோக்கத்தோடு பயணிக்கின்ற அரசியல் கட்சிகள் மற்றும் அரசியல்வாதிகள் இந்த விடயத்தைக் கையாளும்போது அது மேலும் மேலும் கால நீட்சிக்குட்பட்டதாகவே இருக்கும்.

அதற்குரிய தொடக்கப்படிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

**இராஜாங்க அமைச்சு நியமனம்**

கொரோனாவிற்கான தடுப்பு மருந்தை கொள்வனவு செய்வதிலும் பதிவு செய்வதிலும் ஏனைய ஆட்சிகள் ஆர்வம் காட்டிய நிலையில், இலங்கை அசிரத்தையான போக்கினையே காட்டி வந்திருந்தது. குறிப்பாக, 2021ஆம் வருடத்திற்கான பாதீட்டின் மீதான விவாதத்தில்கூட கொறொனா தடுப்பு நடவடிக்கைக்குப் போதுமான ஏற்பாடுகள் ஒதுக்கீடுகள் செய்யப்படவில்லை என எதிர்க்கட்சித் தரப்பினர் குற்றஞ் சாட்டியிருந்தனர்.


பெருந்தொற்றின் அலை ஓங்கி அடிக்கத் தொடங்கிய பின்னர் அரசு எடுத்த நடவடிக்கைகளில் ஒன்றாக, கொரோனா தடுப்பு நடவடிக்கைகளுக்காக இராஜாங்க அமைச்சு ஒன்று நிறுவப்பட்டது. தொடக்க சுகாதார, தொற்றுநோய் மற்றும் கொரோனா தடுப்பு இராஜாங்க அமைச்சராக சுதர்ஷினி பெர்னான்டோபுள்ளே பதவியேற்றுக் கொண்டார்.

இராஜாங்க அமைச்சரான விசேட வைத்திய நிபுணர் சுதர்ஷினியின் கருத்தின்படி, எதிர்வரும் மார்ச் மாதமளவில் இலங்கைக்கு கொறொனா தடுப்பூசி கிடைக்கச் சாத்தியமிருக்கிறது. அந்தச் செய்தியை அண்மையில் மீண்டும் உறுதிப்படுத்தியிருக்கிறார் அரச தலைவரின் முதன்மைச் செயலாளரான லலித் வீரதுங்க.

**அனைவருக்கும் கிடைக்குமா?**

உலகளாவிய ரீதியில் கொவிட் தடுப்பு மருந்திற்கு அதிக கேள்வி நிலவி வருகையில் இலங்கை போன்ற நாடுகளுக்கு அது கிடைப்பது தொடர்பில் சில சந்தேகங்கள் இருக்கவே செய்கின்றன. அந்தச் சந்தேகம், தடுப்பு மருந்து எப்போது கிடைக்கும் என்பது தொடக்கம் எல்லாருக்கும் கிடைக்குமா என்பது வரை நீடிக்கிறது.

காரணம், தடுப்பு மருந்துக்கான தொடக்கப்படிகளே தற்போது இலங்கையில் எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்தப் பத்திக்கு வரி வடிவம் தரப்படும் வரைக்கும் இலங்கை எந்த தடுப்பு மருந்தினை விரும்பிக் கோர இருக்கிறது என்னும் விவகாரம் வெளிச்சத்திற்கு வரவில்லை. அப்படிக் கிடைக்கும் தடுப்பூசியும் முழு இலங்கையருக்கும் ஒரே தடவையில் கிடைக்கும் வகையில் அமையும் என்பதும் நிச்சயமற்றதாகவே இருக்கிறது. 20 வீதம் இலங்கையருக்கே தடுப்பூசி வழங்குவதற்கான ஏற்பாடுகளை கொவக்ஸ் நடைமுறை கொண்டிருக்கிறது.




**விவரம் கோரும் ஐ.தே.க.**

கொவிட்-19இற்கான தடுப்பு மருந்து கொள்வனவு மற்றும் விநியோகம் தொடர்பில் ஆட்சியாளர்கள் தமது திட்டத்தினை வெளிப்படுத்த வேண்டுமென ஐ.தே.கவின் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஒருவர் கோரிக்கை விடுத்திருக்கிறார். கடந்த புதன்கிழமை ஐ.தே.கவின் தலைமையகத்தில் நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே சாந்தினி கொன்கஹகே என்னும் உறுப்பினர் இந்தக் கேள்வியை எழுப்பியிருக்கிறார்.

கொவக்ஸ் நடைமுறையினூடாகத் தடுப்பு மருந்தினை கொள்வனவு செய்ய ஒப்பந்தப் படிமுறைகள் இடம்பெற்று வருகையில் அது தொடர்பான தகவல்களை குறிப்பாக எவ்வளவு மருந்தளவுகளை அரசு கொள்வனவு செய்ய இருக்கிறது அவற்றை எவ்வாறு களஞ்சியப்படுத்தப் போகிறது மற்றும் முன்னுரிமை பெறும் தரப்பினருடைய விவரங்களை அரசு பகிரங்கப்படுத்த வேண்டுமெனவும் அவர் கேட்டிருக்கிறார்.

> “எதிர்வரும் மார்ச் மாதமளவில் இலங்கைக்கு கொரொனா தடுப்பூசி கிடைக்கச் சாத்தியமிருக்கிறது. அந்தச் செய்தியை அண்மையில் மீண்டும் உறுதிப்படுத்தியிருக்கிறார் அரச தலைவரின் முதன்மைச் செயலாளரான லலித் வீரதுங்க.”

**இந்தியாவிடமிருந்தும் தடுப்பு மருந்து எதிர்பார்ப்பு**

கடந்த புதன்கிழமை இலங்கைக்கு வருகை தந்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெயசங்கர், கொரோனா தடுப்பு மருந்து ஏற்றுமதியின்போது இலங்கைக்கு முதலிடம் தர இந்தியா தயாராக இருப்பதாக தெரிவித்திருக்கிறார். இந்தியா ஒக்ஸ்போர்ட் ஃஅஸ்ராஷெனிகாவினுடைய கொவிஷீல்ட் என்னும் தடுப்புமருந்தினையும் இந்தியாவின் சொந்தத் தயாரிப்பான கொவக்சினையும் உற்பத்தி செய்கிறது. எனினும் தடுப்பு மருந்து வழங்கும் திட்டம் இன்னும் இந்தியாவில் தொடங்கப்படவில்லை.

இந்தியாவின் பயன்பாட்டிற்கென முதலில் 100 மில்லியன் மருந்தளவுகள் உற்பத்தி செய்யப்பட இருக்கின்றன. பின்னர் கொவக்ஸ் திட்டத்திற்காக 400 மில்லியன் மருந்தளவுகள் தயாரிக்கப்பட வேண்டியிருக்கிறது. இந்தப் பின்னணியிலேயே இலங்கைக்கு முதலிடம் தர இந்தியா தனது தயார் நிலையை வெளிப்படுத்தியிருக்கிறது.


பல்வேறு தடைகளைத் தாண்டிச் சந்தைக்கு வந்திருக்கும் கொவிட்-19 தடுப்பூசிகள் தொடர்பிலான நம்பிக்கை வெளிச்சமாகவே இருக்கிறது. இலங்கைக்கு தடுப்பூசி கிடைக்கும் என்பதும் இப்போது வரைக்கும் மிகவெளிச்சமாகவே இருக்கிறது. ஆனால், அது தொடர்பாக நகர்த்தப்ப டும் விடயங்கள் தொடர்பில் அரசு பல வற்றை வெளிப்படுத்த வேண்டியிருக்கிறது. காரணம், உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என்பவற்றின் கடனுதவியுடனேயே தடுப்புமருந்தினைக் கொள்வனவு செய்யவேண்டிய இக்கட்டில் இலங்கை இருக்கிறது.

இந்தப் பின்னணியில், கொவிட்-19 தாக்கத்திலிருந்து அனைத்து இலங்கையரும் விடுதலைபெறும் வகையில் தடுப்பு மருந் தேற்றல் திட்டம் எப்போது நடந்தேறும் என்பது இதுவரைக்கும் இருட்டாகவே இருக்கிறது. ■

# 20 ஐ ஏன் ஆதரித்தோம்?

நேர்காணல்: அகில்

## மௌனம் கலைக்கிறார் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ்



இம்சைக்குள்ளாக்கப்பட்டிருக்கும் முஸ்லிம் சமூகத்தின் நலன் ஒன்றை நோக்காகக்கொண்டே எமது செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளோம். நாம் ஓடி ஒளியவில்லை. எரிந்துகொண்டிருக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது தொடர்பாகவே அல்லும் பகலும் சிந்தித்துக்கொண்டிருக்கின்றோம் என்கிறார் முஸ்லிம் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எச்.எம்.ஹரீஸ்.

அரசமைப்பின் 20ஆவது திருத்தத்திற்கு ஆதரவாக நாடாளுமன்றத்தில் வாக்களித்த பின்னர் முஸ்லிம் சமூகத்திற்குள் எழுந்திருந்த பல்வேறு விமர்சனங்கள் தொடர்பில் செம்மண் பத்திரிகையுடன் பேசினார் அவர்.

முஸ்லிம்களின் ஜனாஸாக்களை எரிக்கும் பிரச்சினையில் தாம் ஒதுங்கியிருந்துவிடவில்லை என்றும் அது தொடர்பான சந்திப்புக்கள், பேச்சுக்களில் தான் தொடர்ந்தும் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றார் என்றும் அவர் தெரிவித்தார்.

**கே:** 20ஆவது திருத்தத்தை முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரித்தமை தொடர்பில் எழுந்த மிகக் கடுமையான விமர்சனங்களுக்கு உங்கள் பதில் என்ன?

**ப:** உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்புக்களுக்குப் பின்னர் அப்பாவி முஸ்லிம்கள் மீது ஏவப்பட்ட பௌத்த அடிப்படைவாதமும் முஸ்லிம்கள் மீதான இம்சைகளும் தொடர்கின்றன. அதிலும் ஜனாஸாக்களை எரியூட்டி முஸ்லிம்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படுவது முஸ்லிம்களை அதிகம் காயப்படுத்தியுள்ளது.


உங்களுக்கான விடுமுறை வீடு ஒன்றை கட்டுவதற்கு
2 பரப்பு, 3 பரப்பு, 4 பரப்பு, 8 பரப்பு காணிகள்

நாவற்குழி நகரில்...!

யாழ் நகரில் இருந்து 12.9km
A9 இல் இருந்து 3.9km   A32 இல் இருந்து 1.2km

நெய்தல் கடற்கரை நகர்
Neithal Beach City

Conference Hall • Restaurant • Boating
Beach Volleyball • Fishing • Children Park
Archery Club • BBQ Corner • Indoor Games









தொடர்புகளுக்கு: 077 743 5557
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

இத்தகைய போக்குக்கு முடிவு கட்டவும் எதிர்காலத்தில் முஸ்லிம்கள் எதிர்நோக்கவுள்ள காதி நீதிமன்றம், மதரசா கல்வி நிலையங்கள், கலால், கபாயா போன்ற பிரச்சினைகளில் எமது பக்கத்து நியாயங்களை எடுத்துச் சொல்லவேண்டியிருப்பதால் ஒரு நல்லெண்ண சமிக்ஞையை வெளிப்படுத்தவேண்டிய தேவை ஏற்பட்டது. அதற்காகவே முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 7 பேர் 20ஆவது திருத்தத்தை ஆதரித்தோம்.

**கே:** இந்த முடிவுக்கு முன்னர் அரச உயர்மட்டத் தலைவர்களுடன் இதுகுறித்துப் பேசினீர்களா?

**ப:** ஆம் பேசினோம். பெரும் சவாலாக எழுந்துள்ள ஜனாஸா எரிப்பு, முஸ்லிம் தனியார் சட்டம், காதி நீதிமன்றம், மதரஸா விவகாரம், உட்படப் பல விடயங்கள் குறித்தும் பேசினோம். அதிபர் கோட்டாபய ராஜபக்ச, தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ச மற்றும் பசில் ராஜபக்ச உள்ளிட்ட அரசின் முக்கிய தலைவர்களுடன் பல சுற்றுப் பேச்சுக்கள் நடத்தப்பட்டன. அதன் பின்னரே 20ஆவது திருத்தத்தை ஆதரிக்கும் முடிவுக்கு வந்தோம். இவை தொடர்பில் எமக்கு உத்தரவாதங்கள் தரப்பட்டன.

**கே:** அந்தப் பேச்சுக்களின் பயன் என்ன?

**ப:** ஜனாஸா எரிப்புத் தொடர்பில் எமது நிலைப்பாட்டுடன் தலைமை அமைச்சர் மற்றும் பசில் ராஜபக்ச ஆகியோர் இணக்கமாகவே நடந்து கொண்டனர். தாம் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவார்கள் என்று தெரிவித்தனர். அதனடிப்படையில் இரண்டு அமைச் சரவைக் கூட்டங்களில் இது தொடர்பில் ஆராயப்பட்டு மன்னார் மறிச்சுக்கட்டுப் பகுதியில் ஜனாஸாக்களை அடக்கம் செய்வது தொடர்பில் முடிவும் எடுக்கப்பட்டது. இதனை நீதி அமைச்சர் அலிசஃபாரி வெளிப்படுத்தியுமிருந்தார்.

அதற்கு நன்றி தெரிவித்து தௌஹீத் ஜமாஅத் அமைப்பு அதிபர் கோட்டாபயவுக்கு கடிதம் எழுதியது. அந்தக் கடிதம் சிங்கள ஊடகங்களில் வெளியானதைத் தொடர்ந்து அது பெரும் சர்ச்சையாகி சிங்களக் கடும் போக்காளர்களின் கடும் எதிர்ப்பைச் சம்பாதித்தது. ஆனாலும் நாம் தளரவில்லை. பல மட்டங்களிலும் இது தொடர்பான முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றோம்.

அமைச்சர் அலி சஃபாரியும் இந்த விடயத்தில் எமக்கு முழு ஆதரவாகச் செயற்பட்டுப் பக்கபலமாக இருக்கிறார். அதிபருக்கு நெருக்கமானவர்கள், மூத்த அமைச்சர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள், எனப் பல தரப்பினரையும் சந்தித்து பிரச்சினை தொடர்பில் தெளிவுபடுத்தித் தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வருகின்றோம்.

**கே:** இதன் அடுத்த கட்டம் என்ன?

**ப:** வெண்ணெய் திரண்டு வரும்போது தாளியை உடைக்க முடியாது. இந்தப் பிரச்சினையில் எமது மக்களுக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுப்பதே எமது ஒரே நோக்கம். இதன் அடுத்த கட்டம் என்பது உறுதியான அரசியல் தீர்மானமாகும்.

ஜனாஸா எரிப்பு விவகாரத்தில் முஸ்லிம்களுக்கு ஒரு தீர்வைத் தரும்படி அதிபர் கோட்டாபயவுக்கும் தலைமை அமைச்சர் மகிந்தவுக்கும் உத்வேகம் கொடுப்பதற்கும் பேரினவாத பௌத்த அமைப்புக்களின் குரலை அமைதியடைச் செய்யவும் பசில் ராஜபக்சவினால் முடியும் என்று நம்புகின்றோம்.

இந்த வாரம் அவரைச் சந்திக்கவுள்ளோம். ராஜீய வழியில் இது எமது கடைசி முயற்சியாக இருக்கும்.

**கே:** உங்கள் முயற்சியில் நீங்கள் தோல்வியடைந்து விட்டால்....?

**ப:** சமூகத்தின் பிரதிநிதிகள் என்ற வகையில் மாற்று நடவடிக்கைக்கு வரத் தயங்கமாட்டோம். சமூகம் எடுக்கும் தீர்மானத்துடன் ஒன்றித்துச் செயற்படுவோம். தேவைப்பட்டால் மாற்றுத் தீர்மானங்களுக்கும் செல்வோம். போராட்டம் என்பது எனக்குக் கரும்பு தின்னுவதைப் போன்றது தான்.

**கே:** அண்மைக்காலமாக நீங்கள் எதுவும் பேசாமல் அமைதியாக இருக்கிறீர்கள் என்று விமர்சனங்கள் இருக்கின்றனவே?

**ப:** ஜனாஸா எரிப்பை உடன் நிறுத்தவேண்டும் என்பதே எமது முதன்மைக் கோரிக்கை. நாம் 20ஆவது திருத்தத்தை ஆதரித்தது தொடர்பில் கடும் போக்குவாத, பௌத்த பிக்குகளுக்குச் சந்தேகம் உள்ளது. அதனாலேயே எமது முயற்சிகள் தொடர்பில் செய்திகள் வெளிவராமல் பார்த்துக் கொண்டோம். இது தொடர்பான எந்தவொரு செய்தியும் தெற்கில் சிங்களக் கடும்போக்காளர்கள் மத்தியில் தேவையற்ற வகையில் பிரச்சினையை உருவாக்கும் என்பதால் நாம் அமைதியாக இருந்தோம். அதனாலேயே பொதுவெளியில் எதையும் வெளிப்படுத்தாமல் இரகசியமாகக் காய்களை நகர்த்தி வந்தோம்.

அதை மக்களை விட்டு ஓடி ஒளித்துக் கொண்டோம் என்று கூறுவது விசமத்தனமான பரப்புரை.

**கே:** எதிர்காலத்தில் பதவிகளைப் பெறவும் பணத்திற்காகவும்தான் 20 ஆவது திருத்தத்திற்கு ஆதரவளித்தீர்கள் என்னும் விமர்சனம் ஒன்றும் உள்ளதே?

**ப:** பணத்தின் மீதோ பதவிகளின் மீதோ ஆசை கொண்டவன் அல்ல நான். அவற்றுக்காக இனத்தைக் காட்டிக்கொடுத்துச் சோரம் போன வரலாறும் என்னுடையதில்லை. கடந்தகாலங்களில் பதவிகளைத் தூக்கி எறிந்தவன் நான். இது விடயத்தில் எவருக்கும் சந்தேகம் இருக்குமானால் உலாமாக்கள் முன்னில்லையில் சத்தியம் செய்வதற்கும் நான் தயார்.

நான் துளியும் அரசியல் இலாபம் தேடவில்லை. விமர்சனங்கள் கசப்பானவையாக இருப்பினும் அவற்றையும் தாங்கிக்கொண்டுதான் மக்களுக்கு வெற்றியைத் தேடிக் கொடுத்தாக வேண்டும். நாம் அமைதியாகிவிட்ட பிரதிநிதிகளல்லர் என்பதை சமூகத்திற்கு வெளிப்படுத்துவோம் - என்றார்.

தைப்பொங்கல் பரிசுப் பொதி $ 25

புலம்பெயர் உறவுகளே!
ஊரில் உள்ள உங்கள் உறவுகளுக்கு
பொங்கல் பொருள்களைப் பரிசளியுங்கள்!



மண்பானை, அகப்பை, அரிசி, சர்க்கரை, பயறு, தேங்காய், கயூ, பிளம்ஸ், ஏலக்காய், வெற்றிலை, பாக்கு, மஞ்சள் இலை, இஞ்சி இலை, பழங்கள், கரும்பு, ஊதுபத்தி, கற்பூரம், சாம்பிராணி, பட்டாசு அடங்கிய முழுமையான பொதி.

தைப்பொங்கலுக்கு
முதல் நாள் 13.01.2021
இந்தப் பரிசு உங்கள்
அன்புக்குரியவர்களுக்கு
கொண்டு சேர்க்கப்படும்.

கற்பகவனம் விற்பனை நிலையம்.
461, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(யாழ் முற்றம் - Yarl Muttam)
021 492 7778
+94773078799

01.01.2021 முதல்
குதூகல ஆரம்பம் ....!

நெய்தல் கடற்கரை நகர்
Neithal Beach City

NBC Club

நாவற்குழி நகரில்
021 492 7780



துப்பாக்கி சுடுதல் Rifle Shooting
படகோட்டம் Boating
அம்பு எய்தல் Archery




கதை 18


மஜீத் - புத்தளம்

# மீனுடன் தொற்றி வந்த பேய்

எனது அக்காக்களில் ஒருவர் யாழ்ப்பாணம் - பொம்மை வெளிப்பகுதியில் வசிக்கிறார். அவருக்கு இரண்டு பிள்ளைகள் உள்ளனர். 3ஆவது தடவையாக அவர் கர்ப்பம் தரித்திருந்தபோது நடந்த சம்பவம் இது.

அப்போது அக்காவும் அவரது அயல்வீட்டுப் பெண்களுமாக அங்குள்ள சந்தைக்கு மீன் வாங்கப் போனார்கள். மீனை வாங்கிக் கொண்டு வீடு திரும்பும்போது மதியத்தை அண்மித்துக் கொண்டிருந்தது. கடுமையான வெயில். வீட்டுக்கு வரும் வழியில் சுடலை ஒன்று இருந்தது. அதன் அருகில் வந்துகொண்டிருந்தபோது பந்து போல ஏதோ ஒரு பொருள் உருண்டு செல்வதைக் கண்டிருக்கிறார் அக்கா. அதைக் கடந்து அவர் வீட்டுக்கு வந்தபின் அவரில் நிறைய மாற்றங்கள்...! யாருடனும் கதைக்கவில்லை. ஏதாவது விவரம் கேட்டால் எந்தப் பதிலும் இல்லை. மற்றவர்களை முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தார். ''ஏன் இப்படி ஏறிட்டுப் பார்க்கிறாய்...?'' என்று அவரது கணவரான மச்சான் கேட்டபோது அவருக்கு அடிக்கப் போனார் அக்கா. அடிக்கப்போன அக்காவின் இரண்டு கைகளையும் மச்சான் இறுக்கப் பிடித்த போதும் அவரால் அக்காவைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அப்போது அக்காவின் உடலில் அசுர பலமிருப்பதைக் கண்டு மச்சான் பயந்துவிட்டார் அக்காவுக்கு விநோதமாக ஏதோ நடந்துவிட்டது என்பதைப் புரிந்துகொண்ட அவர், அக்காவைப் பார்வை பார்க்கின்ற ஓர் இடத்துக்குக் கூட்டிச் சென்றார். அங்கு சென்றும் பார்வை பார்க்கின்ற குருவால் அக்காவின் நிலையை மாற்ற முடியவில்லை.

சாதாரண நேரங்களில் சத்தம் போட்டுக்கூடக் கதைக்காத மென்மையான சுபாவம் கொண்ட அக்கா இப்போது ஒரு முரடனைப்போல கத்திக் கொண்டு மற்றவர்களை அடிக்கப் போவதை வழக்கமாக்கிக் கொண்டார். அதைப் பார்க்கும்போது மிகக்



கவலையாகவும் பயமாகவும் இருந்தது. பின்னர் பல இடங்களுக்கும் அவரை அழைத்துச் சென்று வைத்தியம் பார்த்தபோதும் அக்காவின் நிலையில் மாற்றம் ஏற்படவில்லை.

ஒரு கர்ப்பிணிப் பெண்ணாக அவரைப் பார்க்கவெ கஸ்ரமாக இருந்தது. பின்னர் வேறோர் முதியவரிடம் அக்காவைக் கூட்டிச் சென்றபோது அவர் முத்துப் போட்டுப் பார்த்துவிட்டு, ''சுடலைக்கு அருகில் இருந்த ஊத்தை ஆவி ஒன்று மாமிசத்துடன் சேர்ந்து அக்காவின் உடலுக்குள் புகுந்து அட்டகாசம் செய்கிறது'' என்று கூறிவிட்டு மந்திரங்கள் ஓதிக் கழிப்புக் கழித்தார். அதன் பின்னர் அக்கா மெல்ல மெல்லப் பழைய நிலைக்கு வந்தார்.

அதன் பின்னர்தான், மீன்வாங்கிக் கொண்டு சுடலைக்கு அருகில் வந்தபோது அவருக்கு வித்தியாசமான சம்பவம் ஒன்று நடந்தது என்று அவர் மூலம் முன்னர் நடந்த விடயத்தை அறிந்துகொண்டோம்.

நாங்கள் முஸ்லிம்களாக இருந்தபோதிலும் அக்காவின் நிலையால் இந்தச் சடங்குகளைச் செய்து சுகப்படுத்தினோம். அக்காவுக்கு நடந்ததை வைத்துப் பார்க்கும்போது பகல் பொழுதில்கூட அகால வேளையில் கர்ப்பிணிகள் வெளியே செல்வதால் கெட்ட ஆவிகள் தொற்றும் என்று நம்ப வேண்டியிருக்கிறது. ■

# பாயத் தயாராகும் காளைகள்!



தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டு என்று கருதப்படுகின்ற ஏறுதழுவுதலுக்குத் தயாராகி வருகின்றது இந்தியாவின் தமிழகம். எதிர்வரும் பொங்கல் பண்டிகையையொட்டிய இந்தத் தயார்ப்படுத்தலின் தொடக்கமாக அங்குள்ள மதுரை மாவட்டத்தில் ஏறுதழுவுதலுக்குப் பெயர்போன அலங்காநல்லூரில் போட்டிகளை நடத்தலாம் என்று தமிழக அரசு ஏற்கனவே அறிவித்திருந்தது. இந்தியாவில் ஏறுதழுவுதலுக்கு இடைக் காலத்தில் விதிக்கப்பட்டிருந்த தடைகளைத் தகர்த்து ஏறுதழுவுதல் முன்னெடுக்கப்பட்டுவரும் சூழலில் கொரோனாத் தொற்றுக்கு மத்தியில் வருவதால் இம்முறை ஏறுதழுவுதலுக்குத் தடை விதிக்கப்படலாம் என்று கருதப்பட்டிருந்தது.

அந்தக் கருத்துக்கு மாறாகத் தமிழக அரசு இதற்கு இம்முறையும் ஜல்லிக்கட்டு எனப்படும் ஏறு தழுவுதலுக்கு அனுமதி அளித்து அறிவித்துள்ளது. இந்த அறிவிப்புத் தமிழர்கள் பலரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளதையடுத்து தமிழகம் முழுதும் ஜல்லிக்கட்டு விழாவிற்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. அத்தோடு சம்பிரதாய பூர்வமாகவும் பெரும் ஏற்பாட்டுடனும் அலங்காநல்லூரில் நடைபெறவிருக்கிற இந்தப் போட்டிகளுக்கான விழா ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன.

இந்த விழாக்களைப் பொங்கலுக்கு அடுத்தடுத்த நாள்களில் (16ஆம் திகதி) தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி தொடக்கி வைக்கவுள்ளார் என்றும் தகவல்கள் கசியத் தொடங்கியிருக்கின்றன. கொரோனாவுக்கு மத்தியிலும் காளைகள் வீறு கொண்டெழுந்து களத்தில் சீறிப் பாய்வதைக் காண்பதற்கு இம்முறையும் தயாராகிறது தமிழகம்.



# கஞ்சாக் கதைகள்...!



நமசிவாயம் - கொட்டடி

“வர வர எங்கடை ஊர் படு மோசமாப் போட்டுது. சரியாக் கெட்டுப்போட்டுது. அதுக்குக் காரணம் ஊருக்குள்ள கள்ளச் சாராயம் விற்கிற ஆக்கள்தான். இதைப் பொலிஸ் காரங்களுக்கு அறிவிச்சும் பிரியோசனமில்லை. பிடிக்க வாற பொலிஸ்காரங்களுக்கும் சாராயத்தைக் குடுத்துச் சமாளிச்சுப்போடுறாங்கள். அவங்களுக்கும் சாராயம் விக்கிற ஆக்களுக்கும் நல்ல பழக்கமும் உண்டாகிப் போச்சுது... வருசத்தண்டு இஞ்சை ஒரே பிரச்சினை. ஏலாக்கட்டத்திலை எஸ்.ரி.எவ்புக்கு அறிவிச்சு அவங்கள் வந்துதான் அவையப் பிடிச்சது'' அல்லைப்பிட்டியைச் சேர்ந்த ஒரு பொதுமகன் இவ்வாறு தனது ஆதங்கத்தைக் கொட்டித் தீர்த்தார்.

இதைவிடவும் அவர் தனது ஊரில் பல முறைகேடுகள் நடக்கின்றன என்று விவரித்தார். தனது ஊரைச் சேர்ந்த மீனவர் ஒருவர் இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் அங்கிருந்து அவரைப் பிடித்து வந்து நீதிமன்றில் முற்படுத்துமாறு ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்குப் பிடியாணை வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் ஆதங்கப்பட்டார். இதற்குக் காரணம் கள்ளச் சாராயம் அல்ல. கஞ்சா....!

இது அல்லைப்பிட்டியில் மாத்திரம் தலையெடுத்துள்ள பிரச்சினையல்ல. தீவகம் உட்படக் கரையோரங்கள் நீளமும் தலையெடுத்துப் பெரு விருட்சமாகி விட்ட பிரச்சினை. அத்தோடு அல்லைப்பிட்டியில் இது முதல் சம்பவமும் அல்ல. யாழ்ப்பாணக் குடாநாட்டைச் சூழவுள்ள மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான், செட்டிபுலம், வேலணை, புங்குடுதீவு, காரைநகர் எனத் தீவுகளின் கரைநீளமும் மீனவர்கள் மத்தியில் பரவலாக நடந்தேறுகிறது.

### குருநகரில் பெரும் கடத்தல்

அல்லைப்பிட்டியைச் சேர்ந்த மேற்கண்ட நபரைப்போலவே குருநகரைச் சேர்ந்த நபர் ஒருவரும் ஆதங்கப்பட்டார். தனது ஊரில் உள்ள செல்வாக்கு மிக்க நபர் ஒருவர் அங்குள்ள மீனவர்கள் பலருக்குப் படகு உட்படத் தொழில் முயற்சிகளைச் செய்து கொடுத்துள்ளார் என்றும் அவர் சொல்லும்போது மாத்திரம் இந்தியாவிலிருந்து யாருக்கும் தெரியாமல் படகில் வருகின்ற கடத்தல் சாமானை நடுக்கடலில் சென்று அவரிடம் உதவி பெற்றவர்கள் வாங்கி வந்து உரிய இடத்திலோ, அல்லது கடலில் அமிழ்த்தி விட்டு ஜி.பி.எஸ் கருவியில் அந்த இடத்தைப் பதிவு செய்துவிட்டோ வந்தால்போதும் என்றும் தெரிவித்தார்.

இந்த வலைப் பின்னல் அதாவது அந்த நபரின் செல்வாக்குக்கு உட்பட்ட மீனவர்கள் தமது ஊரில் பலர் இருக்கிறார்கள் என்றும் தெரிவித்தார். அத்தோடு கஞ்சா கடத்துவதில் உள்ளூரில் பெயர் போன அவரைப் பொலிஸாருக்கும் நன்கு பரீட்சயம் என்றார். அவரைக் கையும் களவுமாகப் பிடிப்பதற்கு அவர் மாட்டுகிறார் இல்லை என்றும், தகுந்த சாட்சியங்கள் கிடைக்கவில்லை என்றும் பொலிஸ்தரப்பில் கூறப்படுகிறது...! அவருக்கும் காவல் துறையினருக்கும் இடையில் நல்லுறவு இருக்கிறதுபோல...! என்றெல்லாம் அந்த மீன்சந்தையில் கூடிநின்ற காலைப் பொழுதில் கரையோரங்களைச் சேர்ந்த மீனவர்கள் சிலர் கதைத்துக்கொண்டிருந்தனர்.

இந்தக் கஞ்சாக் கடத்தல் விவகாரம் தீவகம் உட்பட்ட கரையோரங்களைச் சார்ந்து வாழ்கின்ற மீனவ சமூதாயம் மத்தியில் மேலும் வளர்ந்து வருவதை மீனவர்களின் அந்தச் சந்தையடிப் பேச்சு உணர்த்தியது.

### ஏனிந்தக் கடத்தல்...?

கடலுடன் மாரடித்துத் தொழிலில் உழைப்பதைவிடவும் கஞ்சாவை ஒரு தடவை கடத்திவிடுவதால் அல்லது கைமாற்றுவதால் கிடைக்கின்ற அதிகளவு பணமே மீனவர்களுக்குப் பரவலாக இந்த உந்துதலை அளிக்கிறது. இதைக் கட்டுப்படுத்தும் தரப்பினரின் அசமந்தம் இதை ஒரு வகையில் வளர்க்கிறது. அதனால் அவர்கள் கஞ்சா கடத்துவதற்குப் பெரு முதலைகளால் ஊக்கப்படுத்தப்படுகிறார்கள்.

ஓரிரு தடவைகள் இந்தக் கடத்தலில் ஈடுபட்டு அதனால் தேடிய பணத்தைக் கொண்டு ஊர்களில் செல்வந்தர்களானவர்களும், பிள்ளைகளுக்குச் சீதனம் வழங்கி மணம் முடித்து வைத்தவர்களும், வெளிநாட்டுக்குப் பயணித்தவர்களும், சிறு தொழில் முயற்சியில் ஈடுபட்டுத் தேறியவர்களும், வாகனங்கள் - ஆடம்பரங்கள் எனச் சொத்துச் சேர்த்தவர்கள் எனப் பல ரகத்தில் இந்தக் கரையோரவாசிகள் பலர் இருக்கின்றனர்.

இவர்களுக்கு அடுத்தபடியாகத் தொடர்ந்தும் கடத்தலில் ஈடுபட்டு மாட்டியவர்களும், முதல் தடவையே கடத்தலில் ஈடுபட்டு மாட்டியவர்களும் எனப் பலரின் வாழ்க்கை சின்னாபின்னமாகியும் கிடக்கிறது. தீவுப் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் பலர் இந்தக் கஞ்சாக் கடத்தல் வழக்கில் சிறைவாசம் அனுபவித்துவருகிறார்கள். ஒரு சிலர் சிறையிலிருந்து மீண்டும் உள்ளனர். இன்றும் சிலரைப் பொலிஸாரும் புலனாய்வுப் பிரிவினரும் சந்தேகத்திலும், இனங்காணப்பட்ட குற்றவாளிகளாகவும் குறிப்பிட்டுத் தேடி வருகின்றனர். பொலிஸாரின் பிடியாணைக் காலம் வரையில் வெவ்வேறு ஊர்களில் தலைமறைவாக இருந்துவிட்டு அந்தக் காலம் முடிந்த பின்னர் ஊர்களை அடைந்த மீனவர்களின் கதைகளும் மீன்சந்தைகளில் பேசப்படாமல் இல்லை.


இதனால் இந்த மீனவர்களின் குடும்பங்களும், அவர்களில் தங்கி வாழ்வோரும் பெரும் பாதிப்புக்கு உள்ளாகின்றனர். இருப்பினும் இந்தக் கடத்தல் கரையோரங்களில் தொடர்ந்தும் நிகழ்ந்தே வருகிறது.

### தீவுப் பகுதியில் அதிகரிக்கும் கடத்தல்

பருத்தித்துறை, காங்கேசன்துறை ஆகிய கடற்பரப்புகளில் கடந்த காலங்களில் கஞ்சாக் கடத்தல் உச்சம் கண்டிருந்தது. அங்கெல்லாம் கடத்தப்பட்டிருந்த கஞ்சாக்களில் பெரும் பகுதியைக் கடற்படையினரும் பொலிஸாருமாகக் கைப்பற்றிய செய்திகளை அறிந்திருக்கிறோம். இவ்வாறிருக்க நாம் அறியாத செய்திகளும் உண்டு. குறிப்பாகத் தீவுப்பகுதிகளில் கடத்தப்படுகின்ற கஞ்சாவின் அளவு மேற்படியிடங்களூடாகக் கடத்தப்படுகின்ற கஞ்சாவைக் காட்டிலும் குறைவாக இருந்தாலும் அதனால் ஈர்க்கப்படுகின்ற மீனவர்கள் அதிகரித்துச் செல்வதாகவே பலரும் ஆதங்கப்படுகின்றனர். ''கிட்டடியிலை எங்கடை கடற்பரப்பில 40 கோர்ஸ் இஞ்சின் ரெண்டு பூட்டின போர்ட் ஒன்று நிண்டிருக்கு... நேவிக்காரன் கிட்டப்போனதும் அந்தப் போட் கசூரினா பீச்சைத் தேடி ஓடியந்து வந்த வேகத்தில கரையில சீறிப் பாய்ஞ்சுது...! போட்டில இருந்தவன் ஓடியிட்டான் போல... காரைநகர் முழுக்க இண்டைக்கு நேவியும் பொலிஸுமாக் கிடக்குது'' சந்தையில் மீனைப் போட்டுக் கூறி... விற்றுமுடித்துவிட்டுத் தனது கையை அங்கிருந்த குழாய் நீரில் கழுவிக்கொண்டு வந்த மற்றொருவர் இவ்வாறு கூறியபடி இந்தக் கூட்டத்துடன் வந்து இணைந்தார். மீன்வாங்கப்போன நான் இவ்வளவு கஞ்சாக் கதைகளையும் காவியபடி வீடு வந்து சேர்ந்தேன். ■

“ கஞ்சாக் கடத்தல் விவகாரம் தீவகம் உட்பட்ட கரையோரங்களைச் சார்ந்து வாழ்கின்ற மீனவ சமூதாயம் மத்தியில் மேலும் வளர்ந்து வருவதை மீனவர்களின் அந்தச் சந்தையடிப் பேச்சு உணர்த்தியது. ”

● நியூட்டன்



# ஜெனிவா: முக்கூட்டு மூலம் தீர்வு சாத்தியமா?

எதிர்வரும் மார்ச் மாதம் இலங்கை அரசுக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் தமிழர் தரப்பில் ஒற்றுமையாகக் களமிறங்குவதற்குக் கொழும்பை மையமாகக் கொண்ட, படித்த, பொருளாதார பலமுள்ள வழக்கறிஞர்கள் இருவரும் முன்னாள் மேல் நீதிமன்ற நீதியரசர் ஒருவருமாக மூவர் முன்வந்துள்ளனர். இவர்கள் மூவரும் தமிழர்கள், தமிழ்த் தேசியம் பேசுபவர்கள். ஆனால் ஆலயங்களில் நவக்கிரகங்கள் ஆளுக்காள் முகம் காட்டாது முதுகைக் காட்டுவது போன்ற நிலைப்பாடுடையவர்கள்.

இதில் கஜேந்திரகுமாரும் சுமந்திரனும் ஏற்கனவே ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் வெளி அரங்கு வரைக்கும் போய் வந்தவர்கள் (உள்ளே போக முடியாது - இவர்களை உள்ளே அனுமதிப்பதில்லை, கஜேந்திரகுமார் உள்ளே உரையாற்றியிருக்கிறார் என்றாலும் அவர் ஒரு தொண்டுநிறுவனப் பிரதிநிதியாகத்தான் உள்ளே போகிறவர், தமிழர்களின் உத்தியோகபூர்வப் பிரதிநிதியாக அல்ல - அப்படிப் போகவும் முடியாது ஏனெனில் ஐ.நா. என்பது அரசுகளின் சங்கமம். விக்னேஸ்வரன் இதுவரையில் ஐ.நாவிற்குச் சென்றதில்லை. இனிவரும் காலங்களில் செல்லக்கூடும்.)

சிறையிலுள்ள அரசியல் கைதிகள், காணமல் ஆக்கப்பட்டவர்கள், உறவுகளை இழந்தவர்கள், ஊனமுற்றவர்கள், விதவைகள் எனப் போர் காரணமாக நிர்க்கதிக்குள்ளானவர்களுக்குப் போர் முடிந்து இன்றைக்குப் பதினொரு வருடங்களாகியும் இவர்கள் எந்தவொரு தீர்வையும் ஐ.நா. ஊடாகவும் பெற்றுக் கொடுத்துவிடவில்லை.

**சி.வி.விக்னேஸ்வரன்**

இவர் கொழும்பில் பிறந்து கல்வி கற்று நீதிபதியாகப் பணியாற்றிச் சிங்களவர்களுடன் மிக நெருங்கிய உறவுகளைக் கொண்டிருப்பவர். நீதிபதியாக இருந்த காலத்தில் மட்டுமல்லாது வடக்கு மாகாண முதலமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர் என்று பதவிகள் வகிக்கும் போதும் அரசின் முழுச் சலுகைகளையும் பெற்றுக் கௌரவமாக வாழ நினைப்பவர்.

முதலமைச்சராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தயவில் வந்திறங்கி அன்றைய அதிபர் மகிந்த ராஜபக்ச முன்னிலையில் பதவியேற்றவர். அப்போது தனது சிங்களச் சம்பந்திகளையும், பிள்ளைகள் - பேரப் பிள்ளைகளையும் அங்கு கூட்டிச் சென்றிருந்தார். அதனூடாகக் கொழும்பு மைய தமிழ் - சிங்கள உறவின் உள்ளடக்கத்தை ஆணித்தரமாகக் காட்டினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து விலகித் தனிக் கட்சி அமைத்து வடக்குக் கிழக்கில் 15க்கு மேற்பட்ட ஆசனங்களைக் கூட்டமைப்புக்கு மாற்று அரசியல் என்கிற பெயரில் கைப்பற்றுவோம் என்று கூறி வெறும் 21ஆயிரம் வாக்குகளுடன் தன்னந்தனியாக நாடாளுமன்றம் சென்றார். இத்தகைய குளறுபடியான ஒருவர் இலங்கை அரசுக்கு எதிராக பன்னாட்டுப் போர்க்குற்ற விசாரணைக்கு ஐ.நா. மனித உரிமைகள் பேரவை பரிந்துரைக்கவேண்டும் என்று கோரிக்கை வைக்கவேண்டும் என்று கூறியிருக்கிறார். இதனை எப்படி அவர் செய்து முடிப்பார் என்பதே இப்போதுள்ள கேள்வி. தமிழர் விடுதலைக் கூட்டணியின் தனித் தமிழீழக் கோரிக்கை போன்றதுதானா இந்தக் கோரிக்கையும் என்பது சில காலங்களில் வெட்டவெளிச்சமாகிவிடும்.

**ஆபிரகாம் சுமந்திரன்**

இவர் கொழும்பு மையச் சட்டத்தரணி. புலிகளின் போராட்டம் 2009 இல் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் 2010இல் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக அதன் தலைவர் சம்பந்தனால் தெரிவு செய்யப்பட்டு அம்பாறை மாவட்டத்துக்கு நியமிக்கப்பட்டவர். அவ்வப்போது கொழும்பில் இருந்து அம்பாறை சென்றுவந்த இவர் தனது கொழும்பு மைய சட்டத்தரணி தொழிலிலும் இன்றுவரை கவனத்தோடு இருப்பவர். 2020 பொதுத் தேர்தலில் யாழ்ப்பாண மக்களிடம் அவரது செல்வாக்குச் சரிந்தது என்பதைப் பொதுத் தேர்தல் காட்டியது. ஆனாலும் கிளிநொச்சியில் கிடைத்த ஆதரவின் மூலம் நாடாளுமன்றப் பதவியைத் தக்க வைத்துக்கொண்டார். இலங்கை அரசின் விசேட அதிரடிப்படையினரின் பாதுகாப்புடன் பயணம் செய்கின்ற ஒரேயொரு தமிழ்த் தேசிய அரசியல்வாதி இவரே.

ஆயுதப் போராட்டத்தைத் தனக்குப் பிடிக்காது என்றும் 5 வயதில் இருந்து சிங்களவருடன் நெருங்கி வாழ்பவர் என்றும் இறுதிப் போரில் இனப் படுகொலை நடந்தது என்பதை உலகம் ஏற்றுக்கொள்ளாது என்றும் தெரிவித்தவர். போர்க்குற்றங்கள் தொடர்பான பன்னாட்டு விசாரணை நடத்தி முடிக்கப்பட்டுவிட்டது என்பது இவரது புகழ்பெற்ற வாதம். இவரும் ஜெனீவாவுக்குக் கிளம்பியுள்ளார்.

**கஜேந்திரகுமார் பொன்னம்பலம்**

இவர் இலங்கையின் புகழ்பூத்த சட்டத்தரணிகளில் ஒருவரான ஜி.ஜி. பொன்னம்பலத்தின் பேரன். தமிழர் செல்லமாக ஜி.ஜி. பொன்னம்பலத்தின் திறமையை "பொன்னன் ஒரு வின்னன்" என்று சொல்துண்டு. ஜவகர்லால் நேரு, எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்க ஆகியோருடன் பிரிட்டனில் படித்தவர் ஜி.ஜி. பண்டாரநாயக்கா குடும்பத்துடன் மிக நெருங்கிய உறவை வைத்திருந்தவர். அந்த உறவின் நிமித்தம் இரண்டு குடும்பங்களும் அனுர பண்டாரநாயக்காவை சுது புத்தா (வெள்ளை மகன்) என்றும் குமார் பொன்னம்பலத்தை களு புத்தா (கறுப்பு மகன்) எனவும் அழைக்கும் உறவு இருந்தது. அந்த உறவு தற்போதும் கஜேந்திரகுமார் சந்திரிகாவை "அன்ரி"

(08 ஆம் பக்கம் பார்க்க)

> “ சிங்களவருடன் நெருங்கி வாழ்பவர் என்றும் இறுதிப் போரில் இனப் படுகொலை நடந்தது என்பதை உலகம் ஏற்றுக்கொள்ளாது என்றும் தெரிவித்தவர். போர்க்குற்றங்கள் தொடர்பான பன்னாட்டு விசாரணை நடத்தி முடிக்கப்பட்டு விட்டது என்பது இவரது புகழ்பெற்ற வாதம். ”

என்று அழைக்கும் நிலையில் உள்ளது.

குமார் பொன்னம்பலம் கொழும்பில் வசித்துக் கொண்டே சந்திரிகாவின் ஆட்சியை விமர்சித்தார். செம்மணிப் படுகொலை விடயத்தில் யாழ்ப்பாண நீதிமன்றில் முன்னிலையாக இருந்த காலத்தில் ஒருதடவை பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறாமல் விமானம் மூலம் யாழ்ப்பாணம் வரமுயன்றிருக்க, சுட்டுக்கொல்லப்பட்டார். பின்னர் புலிகளின் தலைவர் பிரபாகரன் அவருக்கு மாமனிதர் விருது வழங்கிக் கௌரவித்தார். தற்போதும் பொது மக்கள் முன்னணியின் நிறுவுனரான பசில் ராஜபக்சவுடன் தொடர்பில் இருப்பவர் கஜேந்திரகுமார்.

பிரிட்டனில் ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியில் கஜேந்திரகுமார் கலந்து கொண்டபோது "பத்து லட்சம் மலையக மக்களை மீண்டும் இந்தியாவுக்கு அனுப்பும் இலங்கை அரசின் முடிவுக்கு ஆதரவாக இலங்கை அரசின் பக்கம் நின்று வாதாடியவர் உங்களின் பேரனான ஜி.ஜி. பொன்னம்பலம் அல்லவா?" என்று ஒரு கேள்வியை மட்டக்களப்பைச் சேர்ந்த முன்னாள் புளொட் போராளி ஒருவர் எழுப்பியபோது திக்குமுக்காடிய கஜேந்திரகுமார் பதில்கூற முடியாது மௌனித்த நிலையில் நிகழ்ச்சியின் இடையில் மின்குமிழ்களை அணைத்து அந்த நிகழ்ச்சி முடிக்கப்பட்டது.

பாட்டன் செய்த தவறுக்காகப் பேரனான கஜேந்திரகுமார் பதிலளிப்பது சிரமமானதுதான். ஆனால் கஜேந்திரகுமார் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் என்ற பாட்டனால் உருவாக்கப்பட்ட கட்சியில் அரசியலில் ஈடுபடுவதால் அதற்காக மன்னிப்பு ஒன்றைக் கோரமுடியும். ஆனால் அவர் இதுவரையில் அப்படிச் செய்யவில்லை. பம்பலப்பிட்டி குயின்ஸ் வீதியில் அதிகம் பூர்வீக சொத்துகளை வைத்திருக்கும் கஜேந்திரகுமார் சிங்களவரைப் பகைத்துக் கொண்டு கொழும்பு மைய வாழ்க்கையைத் தொடரமுடியுமா என்று தெரியவில்லை. ஆனால் அவரும் ஜெனிவா போய்வருகிறார்.

இவர்கள் மூவரும் சேர்ந்து பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு, போர் வடுக்களைச் சுமந்து நிற்கும் தமிழர்களுக்கு ஐ.நாவிடமிருந்து எத்தகைய தீர்வைப் பெற்றுத் தரப்போகிறார்கள்? ■

## எந்நாளும் நலம் வாழ — மருத்துவம்



மருத்துவர் - கந்தையா சோதிதாசன்

### ஆஸ்துமா அகற்றும் ஆடாதோடை குடிநீர்

தற்போது மழைக்காலம். தொடர்ந்து வருகின்ற மாதங்கள் கடும் பனியும் இருக்கும். இந்தக் காலநிலையில்தான் அதிகமான மக்கள் சுவாச காசம் எனப்படுகின்ற (தொய்வு) நோயினால் பாதிக்கப்படுகிறார்கள்.

பொதுவாக இந்த நோய் காலநிலை சுற்றுச் சூழல் மற்றும் சில வகை உணவுப் பொருள்களின் ஒவ்வாமையினால் ஏற்படுகிறது. சிலருக்குப் பரம்பரை அலகுகளினாலும் கோபம் கவலை போன்ற உளவியல் காரணங்களினாலும் ஏற்படலாம் .

தொடர்ச்சியான தும்மல், இருமல், சுவாசிப்பதில் சிரமம், இளைப்பு என்பவற்றால் இந்த நோய்க்குள்ளானோர் அவதியுறுகிறார்கள்.

சித்த மருத்துவத்தில் இதற்குப் பல மருந்துகள் பரிந்துரைக்கப்பட்டாலும் சாதரண மக்கள் தாங்களே தயாரித்து அருந்த கூடிய மருந்தாக இருப்பது ஆடாதோடைக் குடிநீர் ஆகும்.

**ஆடாதோடைக் குடிநீர் தரிப்பது எப்படி:**


உலர்ந்த ஆடாதோடை இலை, அதிமதுரம், சிற்றரத்தை, தாளிசபத்திரி, திப்பிலி ஆகியவற்றை சம அளவெடுத்து சூரணம் (மாவாக இடித்தல்) செய்து கொள்ள வேண்டும்.

இந்த் சூரணத்தில் பத்து கிராம் அளவு எடுத்து நானூறு மில்லி லீற்றர் நீர் விட்டுக் கொதிக்க வைத்து நூறு மில்லி லீற்றர் அளவுக்கு அதை வற்ற வைத்து வடிகட்டி இளம் சூட்டில் தேன் கலந்து காலை, மதியம், இரவு ஆகிய மூன்று வேளைகளும் அருந்தி வர (சிறுவர்களுக்கு 15 மில்லி முதல் 20மில்லி வரை கொடுக்கலாம்) சளி, இழுப்பு சுவாசக் கஸ்டம், இருமல் போன்ற சுவாசகாசத்தின் தொல்லைகளில் இருந்து விடுபடலாம்.

இத்துடன் துணை மருந்தாக தாளிசாதி சூரணத்தையும் வைத்தியரின் ஆலோசனையின்படி பாவித்துப் பயன்பெறலாம்.

குளிர் நேரத்தில் வெளியே போகாதிருத்தல், சுற்று சூழலைச் சுத்தமாக வைத்திருத்தல் என்பவற்றில் கவனம்கொள்ளவேண்டும்.

மேலும் குளிரூட்டியில் வைத்த உணவுப் பொருள்கள் மற்றும் இறால், கணவாய் போன்ற கடல் உணவுகளையும் தவித்துக்கொள்ள வேண்டும்.சத்தான உணவுகள் மற்றும் ஓய்வு என்பவற்றோடு மேற்கூறிய ஆடா தோடைக் குடிநீரை அருந்தி சுவாசகாசத்தின் தொல்லையில் இருந்து விடுதலை பெறலாம்.



## மின்னலைப் பிடித்து... மின்னலைப் பிடித்து...

மருத்துவர் சி. எஸ். யமுனாநந்தா

ஐம்பூதங்களின் சேர்க்கையால் வானில் நிகழும் இயற்கை நிகழ்வே மின்னலாகும். மின்னல் உருவாகும்போது மழை முகில்கள் (நீர்) அருகில் வருகின்றன. இதன்போது மின்னேற்றம் பூமியை நோக்கிப் பாய்கின்றது. முகில்கள் மோதும்போது ஒலியுடன் மின்னேற்றப் பாய்ச்சலினால் காற்றில் தீப்பிழம்புகள் தோன்றுகின்றன. நிலம், நீர், காற்று, ஆகாயம், தீ என ஐம்பூதங்களும் ஒருங்கே நிகழ்த்தும் செயற்பாடே மின்னல் ஆகும்.

மின்னல் தாக்கத்தினால் பல நாடுகளின் இயற்கைக் காடுகள் எரிந்து அழிவடைகின்றன. கடலில் செல்லும் மீனவர்கள் பாதிக்கப்படுகின்றனர். வானூர்திகளும் சில வேளைகளில் பாதிக்கப்படுகின்றன.

தற்போது அறிவியலாளர்கள் மின்னல் தாக்கத்தைக் கட்டுப்படுத்த தாழ்ந்த வலுவுள்ள வான் நோக்கிய லேசர் கதிர்களைப் பயன்படுத்த முனைகின்றனர். வான் நோக்கிய லேசர் கதிர்கள் மூலம் மின்னல் தாக்கத்தை குறைக்கவும் மின்னலின் திசையைத் திருப்பவும் முடியும். இவற்றை மின்னல் கண்ணிகள் என அழைக்கலாம்.

மின்னல் கண்ணிகள் பயன்பாட்டிற்கு வரும்போது எமது பிரதேசத்தில் மழைக்காலத்தில் மின்னல் தாக்கத்தினால் ஏற்படும் உயிர் இழப்புக்களைத் தவிர்க்க முடியும். மேலும் இயற்கையாக காடுகள் மின்னலால் அழிவடைவதையும் குறைக்க முடியும்.

எழுத்தாளர்
மு.சிவநேசன்
எழுதும்
புதிய தொடர்



# நிலவைப் பார்த்து வானம் சொன்னது...

5

உலகெங்கும் கோவிட் தொற்று கள முனையில் வீட்டுக்குள் முங்காமல் நின்று போராட வேண்டிய இக்கட்டான கடமைகளை பலர் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தனித்து வைத்தியர்களும் படையினரும் அல்லர். அவர்களுக்கான விநியோக வழிகளை திறந்து வைத்திருந்த பலரும் இதற்குள் அடக்கம். களத்தில் நிற்பவர்களுக்கு ஆதல் முதலில் தடுப்பூசியை போடுங்கள் என்கிறது ஓர் அரசியல் பிரமுகரின் குரல். கொரோனாவா தடுப்பூசியா அதிகமாக ஆபத்தானது என்கின்ற கேள்விகள் மறுபக்கம். யாரிலே முதலில் பரிசீலிப்பது என்ற கேள்விகள் வேறு. முக நூலில் நீங்கள் தடுப்பு மருந்தொன்றை ஏற்ற/ பரிசீலிக்க/ (பலிக்கடாவாக) சம்மதமா என்கின்ற கருத்துக் கணிப்புகள் வேறு.

இங்கும் முடக்க நிலை மார்ச் மாதம் அறிவிக்கப்பட்டவேளை வீட்டுக்குள் முடங்கியவர்களைவிட ஏதோ ஒரு தேவை கருதி அனுமதி பெற்று வீதிக்கு வந்தவர்களே அதிகம். அனுமதிப் பத்திரம் இருக்கிறதே என்று நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு திரிகிறவர்கள் அது ஏதோ வைரசைத் தடை செய்யும் சக்தி வாய்ந்த பத்திரம் என்றும் நினைக்கிறார்கள். அனுமதி பெறாமல் ஒழுங்கைகள் ஊடாகத் திரிந்தோர் வேறு ஒரு தொகையினர். முழு முடக்கத்துக்குள்ளேயும் அதன் நோக்கம் அறியாது தமது பிள்ளைகளை இரகசிய வகுப்புக்களுக்கு ஏற்றி இறக்கிய பெற்றோரை என்னவென்பதோ.

உலக இயந்திர இயக்கம் கடுமையான முடக்க வேளையில் இயங்க உழைத்த சிலரை சர்வதேச ஊடகங்கள் சில கண்டுபிடித்து அம்பலப்படுத்தத் தவறவில்லை.

இந்தப் புன்னகை என்ன விலை?


அமெரிக்காவின் ஓஹியோ மாநில தலை நகரம் கொலம்பஸ் பேய் கூட நடமாடாத நகரமாக மாறிவிட்டது என்கிறார் அன்றீ ஏஞ்லின் என்ற பேருந்துச் சாரதி. காலை ஆறு மணிக்கு கடமைக்குப் புறப்பட்டால் பன்னிரண்டு மணிநேரம் ஓட்டம்தான். அத்தியாவசிய சேவைகளுக்காக வேலைக்குச் செல்பவர்கள், அவசர நோய்வாய்ப்பட்டு வைத்திய சாலைக்குச் செல்பவர்கள் என்று சிலரே பயணிக்கிறார்கள். உயிருக்கும் கொரோனாவுக்கும் அஞ்சினால் இந்தப் பணியை செய்ய முடியாது. நான் இராணுவத்தில் இருந்த காலங்களில் என்னால் எதிரியை சுலபமாக அடையாளம் காண முடிந்தது. ஆனால் இந்த தொற்று உள்ளவரை அடையாளம் காணவே இயல்வதில்லை.

அனைவரும் பேயறைந்த முகங்களாகவே தென்படும்வேளையில் ஒவ்வொருவரையும் ஒரு புன்னகையுடன் வரவேற்பது எனது பாணி. அது பலரை மகிழ்ச்சியில் ஆழ்த்தியதை யான் கண்டேன். ஒரு சிறு புன்னகையின் பெறுமதி இவ்வளவு என்று நான் இதுவரை வாழ்க்கையிலே உணர்ந்தேன் இல்லை. முகவுறை அணிந்திருந்தபோதும் எனது கண்களின் ஊடாக என் புன்சிரிப்பு வெளிப்பட்டது பற்றிய திருப்தியை பலர் அதே பாணியில் பகிர்ந்து கொண்டார்கள்.

இவ்வாறாக ஒரு வெறும் புன்னகையால் உலகை வெல்லலாம் என்பது எங்களில் பலருக்கு புரிவதில்லை.

சிரித்தால் மட்டும் என்ன கொரோனா கொன்றுவிடப் போகிறதா? இலவசமாக இந்த மகிழ்ச்சியை இந்த இக்கட்டான வேளையில் புதிய முகங்களுடனும் பகிரலாமே. இந்தப் புன்னகை மனப்பாங்கு எதிரில் வருகிறவரது மட்டுமல்ல தனது பணியில் ஏற்படுகின்ற அச்சம் மற்றும் மன அழுத்தத்தையும் கணிசமாக குறைக்கிறது என்கிறார் அவர்.

எங்களிலும் பலர் அப்படி இருக்கிறார்கள். மோட்டார் சைக்கிளில் மாஸ்க் மற்றும் ஹெல்மெட் சகிதம் வேகமாக வருபவர்கள் ஒருவரையொருவர் தப்பாகவோ சரியாகவோ அடை



யாளம் கண்டு தலையாட்டிவிட்டே செல்கிறார்கள். விபத்தில் சிக்காதவரை இது மகிழ்ச்சியே.

கொரோனாவைத் தொடர்ந்து முக்கியமாக வைத்தியர்களும் மருத்துவ பணியாளர்களும் அச்சத்துடனேயே காலங் கழிக்கிறார்கள். சரிவர முகக் கவசம் அணியாமலோ, நோய்களை மறைத்தோ வருகின்ற பொறுப்பற்றவர்களை கண்டால் அவர்கள் வெறுமனே ஒரு புன்னகையுடன் கடந்து செல்ல இயலாது. அடுத்தவரின் உயிரோடு விளையாட எவருக்கும் உரிமை கிடையாது. அவர்கள் நிச்சயமாக கண்டிக்கப்பட வேண்டியவர்களே.

எய்ட்ஸ் வந்துவிடுமோ என்ற அச்சத்தால் யாரும் பாலியல் குற்றங்களையோ ஈடுபாட்டையோ தவிர்ப்பதாக இல்லை. என்றாலும் எய்ட்ஸை குற்றவாளிகளுக்கான இயற்கையின் தண்டனை என்றுகூட ஒதுக்கிவிட முடியும். ஆனால் கோவிட் 19 அப்படி இல்லை. ஒரு குற்றவாளி ஒரு சமூகத்தையே கெடுக்க முடியும். மனித குலத்தையே கருவறுக்க முடியும்.

தனிமைப்படுத்தல் நிலையத்தில் இருந்து கொண்டே அங்கிருந்த இலத்திரனியல் சாதனங்களை திருடியதாக செய்தி வந்தது ஒரு பக்கம், தன்னை அக்கறையாக பரிசோதித்த வைத்தியரின் கைபேசியையே திருடிய மன சாட்சி, உதவி கேட்கப்போன இடங்களிலேயே உபத்திரவம் செய்யும் பிரகிருதிகள், முகமூடி

**நோயை ஒளிக்கிறார்கள், தனிமைப்படுத்தப் பட்டவர்கள் திரிகிறார்கள், மக்கள் பெரும்பாலும் முகக்கவசத்தை கையிலும் பையிலுமே கொண்டு திரிகிறார்கள், அதன் பயனை சமூகமே அனுபவிக்க தொடங்கிவிட்டது**

அணிந்து கொண்டு பாடசாலை விட்டு வரும் ஆசிரியையை தள்ளி விழுத்தி சங்கிலி அறுக்கும் பதினாறு வயது மாணவன், விசித்திரக் கொலைகள் என்றெல்லாம் விவகாரங்கள் மலிகின்ற பூமியாக இது மட்டுமல்ல நாம் புலம் பெயர்ந்த தேசங்களும்.

இவர்களுக்கெல்லாம் திருக்குறளா போதித்துக் கொண்டிருக்க முடியும்.

மக்கள் மிகவும் பொறுப்பில்லாமல் நடக்கிறார்கள், நாங்கள் இரவு பகல் ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் உழைக்கிறோம், இந்த நிலைமை மேலை நாடுகளிலோ கிழக்காசிய நாடுகளிலோ இல்லை என்கிறார்கள் இங்குள்ள சுகாதார அலுவலர்கள்.

நோயை ஒளிக்கிறார்கள், தனிமைப்படுத்தப்பட்டவர்கள் திரிகிறார்கள், மக்கள் பெரும்பாலும் முகக்கவசத்தை கையிலும் பையிலுமே கொண்டு திரிகிறார்கள், அதன் பயனை சமூகமே அனுபவிக்க தொடங்கிவிட்டது என்கிறார்கள்.

பருத்தித்துறையில் குடும்பமே கொரோனா பாதிப்பினால் வைத்திய சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட நிலையில் நோய்த் தொற்றுக்கும் அஞ்சாது வீடு புகுந்து களவு இடம்பெற்று இருக்கிறது என்கின்ற செய்தி எவ்வளவு பாரதூரமானது. அந்தத் திருடர்கள் தமது மனைவி பிள்ளைகளையும் ஆபத்தான கட்டத்துக்கு தள்ளுகிறார்களே. களவுக் கொத்தணி ஒன்று உருவாக இது போதுமானது.

இதேபோன்று போதைப்பொருள் கும்பல்களின் நடவடிக்கைகளும் ஆபத்தானவையே. கடத்தல், விற்பனை, பாவனை என்கின்ற பல ரக மட்டத்திலான சமுகப் பரவலுக்கு இது வழிகோலும்.

எங்களை அழிக்க பிற எதிரிகள் அவசியமில்லை. ■

## சீனப் பெரும்புள்ளி மாயம்!

சீனாவின் மிகப் பெரும் தொழிலதிபரான அலிபாபா இணையத் தள நிறுவுநரான சங் மாவைக் காணவில்லை என்கிற பரபரப்பான தேடல் மேற்குலக ஊடகங்களிலும் சமூக வலைத் தளங்களிலும் பெரும் பேசுபொருளாக மாறியிருக்கிறது. கடந்த ஐப்பசி மாதத்திற்குப் பின்னர் அவரைப் பொதுவெளியில் காண வில்லை என்று கூறப்படுவதே இந்தச் சந்தேகம் கிளம்பியதற்குக் காரணம். அண்மைக் காலமாக சீனாவின் பொருளாதாரத்தைவிட அலிபாபா நிறுவனத்தின் பொருளாதார வீச்சு மிகப் பெரியது என்கிற வாதம் அதிகரித்து வந்தது. இந்த நிலையில் சங் மாவின் நிறுவனங்களை இலக்கு வைத்து கடுமையான விசாரணை வளையம் அமைக்கப்பட்டது. கடைசியாக ஆவர் கலந்து கொண்ட கூட்டத்தில் சீன வங்கிகளின் நிதிக் கொள்கைகள் தொடர்பில் சங் மா அதிகம் விமர்சித்தார் என்றும் அதன் பின்னரே அவரைப் பொதுவெளிகளில் காணமுடியவில்லையாம். அவரது தரப்பிலிருந்தும் இதுவரையில் அதற்கான தெளிவுபடுத்தல்கள் எதுவும் வெளிவரவில்லை.

# பொங்கலைக் கொண்டாடுவோம்!




மருத்துவர்
என்.சிவயோகன்

பொங்கலைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தேன். நமது பிள்ளைகள் நத்தார் தினத்தினை கொண்டாடுவதுபோல பொங்கலை கொண்டாடுவதில்லை. உண்மையில் நத்தாருக்கு மரம் வாங்குதல் வீட்டை அலங்கரித்தல் என ஒரு மாதம் செலவிடுகிறார்கள். ஆனால் தமிழரின் முக்கிய பண்டிகையான பொங்கலை ஒரு நாள் மட்டும் கொண்டாடி விட்டு போகிறோம். சிலர் அதைக்கூடச் செய்வதில்லை. எனவே நாம் என்ன செய்யலாம்?

நாம் மார்கழி **15**ஆம் நாளின் பின் பாடசாலைகள் விடுமுறை தொடங்க, எமது பிள்ளைகளுக்கு பொங்கல் வருகிறது என ஆர்வமூட்டி, வீட்டின் ஒரு மூலையில் பொங்கலுக்கு வைக்கும் சாமான்களை அட்டையினால் செய்து அலங்கரிக்கச் சொல்ல வேண்டும். பொங்கல் பானை, அடுப்பு, சூரியன், கரும்பு, மாடு, மாவிலை, தோரணம், பட்டங்கள் போன்றவற்றைச் செய்து மின் விளக்குகள் பொருத்தி அதனை தைமாதம் முழுவதும் கொண்டாட வழி செய்யவேண்டும். அபபோதுதான் தைப்பொங்கலின் சிறப்பு பிள்ளைகளின் மனதில் பதியும்.

இந்தக் கருத்தை இம்முறை சொல்லி ஆரம்பிப்போமா? தைப் பொங்கலும் நத்தார் புதுவருடம் போன்று தைமாதம் முழுவதும் வீட்டு அலங்காரத்துடன் இருக்க வேண்டும். அப்போதுதான் வீட்டுக்கு வரும் ஏனைய இனத்தவருக்கும் பொங்கல் பற்றிய அறிவைக் கொடுக்கலாம். இது வெளிநாடுகளில் புலம் பெயர்ந்துள்ள தமிழர்க்கானது. ஊரில் என்றால் பட்டமேற்றுவதில் தொடங்கி ஒரு மாதத்திற்கு மேல் கொண்டாடுவார்கள்.



உங்கள் கருத்துக்களை கூறுங்கள். ஏற்றுக் கொண்டால் இம்முறையே அவ்வாறு தொடங்குங்கள். இதனைப் பகிர்ந்து உலகெங்கும் உள்ள தமிழர்களைச் சென்றடையச் செய்யுங்கள். பிள்ளைகளுக்கு பொங்கல் பற்றிய அறிவைக் கொடுங்கள். ■

# அசாஞ்சே எனும் ஆலகால விசம்!

ஜூலியன் அசாஞ்சே! ஒரு காலத்தில் அமெரிக்க வல்லரசையே தனியொரு ஆளாக நின்று கண்ணில் விரலைவிட்டு ஆட்டிய மனிதன். உள்ளும் புறமுமாக அமெரிக்காவின் மொத்த முகத்தையும் தூக்கி இணைய வெளியில் பஞ்சு பஞ்சாகப் பறக்க விட்டார் மனிதன். தொடக்கத்தில் கொஞ்சம் ஆடித்தான் போய்விட்டது அமெரிக்கா. என்றாலும் வல்லரசல்லவா சுதாகரித்துக்கொண்டு அசாஞ்சேவைக் குறிவைத்துத் தனது வேட்டையைத் தொடங்கியது. ஆனால் மனிதன் அதற்கும் அசராமல் தண்ணிகாட்டிக்கொண்டே வந்தார்.


இப்போது சட்ட நடவடிக்கைகளுக்காக அவரை அமெரிக்காவிற்கு நாடுகடத்துவதற்கு உத்தரவிட பிரிட்டிஷ் நீதிமன்றம் மறுத்துவிட்டது. அசாஞ்சேயின் தற்போதைய உளப்பாதிப்பு நிலையைக் காரணமாகக்காட்டி அமெரிக்காவின் நாடுகடத்தல் கோரிக்கையை நிராகரித்திருக்கிறது பிரிட்டிஷ் நீதிமன்றம். திங்கட்கிழமை இந்தத் தீர்ப்பு அறிவிக்கப்பட்டபோது நீதிமன்றக் கட்டடத்திற்கு வெளியே கூடியிருந்த ஆதரவாளர்கள் பலரும் அதனை வரவேற்றுக் கொண்டாடி மகிழ்ந்தார்கள்.

அமெரிக்காவின் நாடு கடத்தல் கோரிக்கை நிராகரிக்கப்பட்டிருப்பது கருத்துச் சுதந்திரத்திற்கான பலம் என்று ஊடக நிறுவனங்கள் பலவும் தொண்டு நிறுவனங்களும் மனித உரிமைகள் நிறுவனங்களும் கருதுகின்றன.

> **“சிவிலியன்களும் ஊடக வியலாளர்கள் இருவரும் கொல்லப்பட்ட காட்சியை 2010 இல் வீக்கிலீக்ஸ் இணையத்தளம் முதலில் வெளி உலகுக்குக் கசியவிட்டது. அன்று முதல் ஜூலியன் அசாஞ்சே உலக அளவில் பிரபலமானார்.”**

அசாஞ்சேதான் விக்கிலீக்ஸ் என்கிற பரபரப்பான இணையத்தளப் பக்கங்களை நிறுவியவர். அந்தப் பக்கங்களில் நிரம்பிக்கிடக்கும் அத்தனை ஆவணங்களிலும் பெரும்பாலானவை அமெரிக்க அரசின் இரகசிய ஆவணங்கள். தவிர வேறு சில நாடுகளின் இரகசிய அரச ஆவணங்களும் அவற்றுள் அடக்கம்.

அமெரிக்கப் படைகள் ஈராக்கின் பக்தாத் நகரில் நடத்திய ஒரு வான் தாக்குதலில் சிவிலியன்களும் ஊடகவியலாளர்கள் இருவரும் கொல்லப்பட்ட காட்சியை **2010** இல் வீக்கிலீக்ஸ் இணையத்தளம் முதலில் வெளி உலகுக்குக் கசியவிட்டது. அன்று முதல் ஜூலியன் அசாஞ்சே உலக அளவில் பிரபலமானார்.



பின்னர் அதே ஆண்டு ஜூலையில் ஆப்கானிஸ்தான் போர் தொடர்பான அமெரிக்க இராணுவத்தின் சுமார் **90** ஆயிரம் ரகசிய ஆவணங்களை வீக்கிலீக்ஸ் அம்பலப்படுத்தி அதிர்ச்சியை ஏற்படுத்தியது. மீண்டும் **2010** ஒக்ரோபரில் அமெரிக்க ராஜதந்திரிகளால் பரிமாறப்பட்ட பாதுகாப்புத் தொடர்பான ரகசிய ஆவணங்கள் அடங்கிய சுமார் **4**லட்சம் தொடர்பாடல்களை வெளியிட்டு உலகெங்கும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தினார் ஜூலியன் அசாஞ்சே.

நாளாந்தம் வீக்கிலீக்ஸ் வெளியிட்ட ரகசிய .ஆவணங்களில் இலங்கையின் இறுதிப்போரில் நடந்த குற்றங்கள் தொடர்பான அமெரிக்க ஆவணங்களும் அடங்கி இருந்தன.

போரின் இறுதியில் நிகழ்ந்த குற்றங்களில் அப்போதைய அதிபர் மகிந்த ராஜபக்சே மற்றும் அவரது சகோதரர்கள், மூத்த படை அதிகாரிகளது பெயர்களைக் குறிப்பிட்டு கொழும்புக்கான அமெரிக்கத் தூதர் அனுப்பிய தகவல்களும் அச்சமயம் பகிரங்கமாகிப் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தமை நினைவிருக்கலாம்.

ஆஸ்திரேலியப் பிரஜையான **49** வயதான ஜூலியன் அசாஞ்சே அமெரிக்காவுக்கு எதிராக உளவு பார்த்தார் என்று அமெரிக்காவால் குற்றஞ் சாட்டப்பட்டார். அவரைக்குறிவைத்துச் சட்ட நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டன.

பாதுகாப்பு ரகசியங்களைத் திருடி வெளியிட்டு பலரது உயிர்களுக்கு

(16ஆம் பக்கம் பார்க்க)

# பதிவு செய்தால் பயமில்லை பரவாதாம்

கதிரேசன் காத்தவராயன்

நானதிலை செல்லத்துரையர் வீட்டடிக்கொருக் காப் போவமெண்டு வெளிக்கிட வீட்டிலை சண்டையாகிப் போச்சுது. செல்லத்துரையர் சலரோககாறன். அவற்றை மனிசிக்குப் பிறசர் சலரோகம் முட்டு எண்டு கன வருத்தங்கள். கண்டபடி ஏன் அங்கை போய் உபத்திரவம் குடுக்கப்போறியள் எண்டுதான் மனிசியும் மேலும் எங்கட அரசியல்காறரைப் பாத்தோ என்னவோ கூட்டுக்கோசம் போட்டுதுகள். நானெண்டால் என்ன அரசியல் தெரியாதனானே? ஓமோமெண்டு சேந்து கதைச்சுப்போட்டு நேராய் செல்லத்துரையர் வீட்டைதான் போனன்.

அங்கை அவற்றை வீட்டுக்குக் கிட்டவாய்ப் போகேக்குள்ள பாத்தா அவற்றை வீட்டு வாசலிலை ஒரு ஏழெட்டு மோட்டச்சயிக்கிள், ரண்டு மூண்டு ஓட்டோக்கள், காருகள் எண்டு வலு அமளியாய்க் கிடந்துது. எடுத்த எடுப்பிலை பயந்து போனன். பதறிக் கொண்டு போனால் அங்கை கன பேர் கூடி நிண்டினம். கமறாக்காறத் தம்பியவை லைற்றுகளைப் போடுறதுக்கு வயர் முடியினம். எவ்வளவுதான் முன்னேறினாலும் வயரை வாயாலை கடிச்சுத்துப்பி முடிச்சுப் போட்டு சொப்பிங்பையாலை சுத்திற முறைபாட்டைக் கைவிடாத ஆக்கள்தான் நாங்கள் எண்டுறதை காட்டிக்கொண்டு நிண்டாங்கள்.

நான் என்ன ஏதெண்டு தெரியாமல் திகைச்சுப் போய் நிக்க செல்லத்துரையற்றை கடைசிப்பொடியன் என்னைக் கண்டிட்டான். கதிரேசங்கிள் நல்ல நேரம் வாறியள் வாங்கோ... உள்ளுக்கை வாங்கோ எண்டு கூப்பிட்டுது. அதை நிலத்திலை நிக்கிற கோலத்திலை பாக்கிறதுக்கு சந்தோசமாயிருந்துது. வழக்கமாய் பறக்கிற சீவன். தமையன்மாற்றை வெளிநாட்டுக் காசை பெற்றோலா எரிக்கிற தைத்தான் முழுநேர வேலையாய்ச் செய்கிறவனல்லே அவன். என்னடா தம்பி என்ன விசேசம்? எண்டபடி உள்ள போனன்.

'அப்பாக்குப் போனகிழமை எண்பதாவது பிறந்தநாள்... அம்மாவுக்கு வாறகிழமை எழுவத்தைஞ்சு... கொரோனாப் பிரச்சனையள் நெருக்கடியள்... அதாலை சேத்தபடி இண்டைக்குச் செய்யிறம்... வலு சுருக்கமாய்த்தான் செய்யிறம்..'' எண்டு நெளிஞ்சான்.

> "அண்ணை! கவனிச்சியளே? கை குடுக்கிறதே ஆபத்தெண்டு தெரிஞ்சு கொண்டும் கட்டிப் பிடிச்சுப் புழுியிறதை.. ஆம்பிளை பொம்பிளை வித்தியாசங்கூட இல்லை...."

அவனின்ரை நெளிவு நாடு முழுக்கச் செய்யேல்லை எண்டதோ என்னவோ தெரியேல்லை. வீட்டு கோலுக்குள்ள மணவறையை மாதிரியொண்டு... மின்னிமின்னி லைற்றுகள் பலனுகள்... வீடியோ அது இதுவெண்டு வலு அமர்க்களமாயிருந்துது. ஆக்களும் ஒரு இருநூறுக்கு மேலையாய் இருக்கும்.. நல்ல நல்ல உடுப்புகளோடை... நான் கசங்கின நீர்க்காவியேறின நாலுமுழ வேட்டியோடை அந்த இடத்துக்கு பொருத்தமேயில்லாமலுக்கு... செல்லத்துரையரை வெத்திலைக்காவி வாய் இல்லையெண்டால் கண்டே பிடிச்சிருக்கேலாமல் போயிருக்கும்... மஜிக் காட்டிறவங்கள் மாதிரி கோட்சூட் தொப்பியோடை...

''கதிரேசண்ணையே! வாங்கோ வாங்கோ!'' எண்ட குரல்...? ஆட தம்பர். தம்பற்றை ஒரு பெட்டை செல்லத்துரையற்றை மனிசியின்ரை தம்பியாரையல்லே செய்தது... '' தம்பு தெரியாத்தனமாயல்லே வந்து மாட்டுப்பட்டுப்போனன்'' எண்டபடி தம்பரடிக்குப் போயிருந்துகொண்டன். நான் தப்பினது அப்பதான் தெரிஞ்சுது... வாறவையை கட்டிப்பிடிச்சல்லே செல்லத்துரையற்றை பெடியும் பெட்டையளும் வரவேற்குதுகள். தம்பர் மெதுவாய்ச் சொன்னார் ''அண்ணை! கவனிச்சியளே? கை குடுக்கிறதே ஆபத்தெண்டு தெரிஞ்சு கொண்டும் கட்டிப் பிடிச்சுப் புழியிறதை.. ஆம்பிளை பொம்பிளை வித்தியாசங்கூட இல்லை....''

''ம்..ம்ம்.. தம்பு அதுதான்ராப்பா நாகரிகம்.. கட்டிப்பிடிக்கிறதை இப்ப வெள்ளைக்காறனே கைவிட்டிட்டான்... நாங்கள் தூக்கிவைச்சிருக்கிறம்... அதுகும் நாட்டு நடப்புகள் தெரியாமலுக்கு... இஞ்சார் இதுகள் பாக்கவேண்டியவைக்குத் தெரியாதோ?'' எண்டு தம்பற்றை பாணியிலை நான் கேட்டன். ''தெரியுமாம். நூறு பேரோடை செய்யச் சொல்லியிருக்காம். கை கழுவுறது, சமூக இடைவெளி பேணுறதோடை வாறவையின்ரை பேர், ஊர், ரெலிபோன் நம்பரைப் பதிஞ்சு வைச்சால் சரியாம்'' எண்டார் தம்பர்.

''இஞ்சார் தம்பு.. கையைக் கழுவிப்போட்டு கட்டிப்பிடிச்சால் கொரோனா தொத்தாதோ? அதோடையடா தம்பு நாங்கள் சரியான புத்திசாலியள் தான்... வெள்ளைக்காறனுகளுக்கு மூளையே இல்லை... உலகம் முழுதும் கொரோனாத் தடுப்பு ஊசிதான் காப்பாத்தும் எண்டகொண்டிருக்கு... நாங்கள் வலு கெட்டிக்காறர்தான்ராப்பா... பாத்தியே கொப்பியிலை பேர் ஊர் ரெலிபோன் நம்பரை எழுதினால் கொரோனா தொத்தாதெண்டு கண்டுபிடிச்சிட்டம் பாத்தியே.. அதுதான் நாங்கள். அதோடை நூறு பேர் மட்டும் இருந்தால், றோட்டுக் கரையிலை சந்தை கூடினால், கோயில் கொண்டாட்டங்களை ஆறரை ஏழு மணிக்குள்ள முடிச்சிட்டால் கொரோனா பரவாதெண்டுறதையும் கண்டுபிடிச்சல்லே போட்டம்...'' எண்டபடி சத்தமில்லாமல் வீட்டை வந்திட்டன்.

# தாய்மாரை வெளுத்து வாங்கிய பாடகி சின்மயி!



தமிழ்நாட்டிலிருந்து ஒளிபரப்பாகும் விஜய் தொலைக்காட்சி நிகழ்ச்சியான பிக்பாஸ் சீசன் 4 இறுதிக் கட்டத்தை எட்டியிருக்கிறது. இந்த நிலையில் வீட்டில் இருக்கும் போட்டியாளர்களைச் சந்திப்பதற்காக அவர்களது நெருங்கிய உறவினர்களை உள்ளே அனுப்பும் படலம் நடந்து வருகின்றது. இரண்டரை மாதங்களுக்கும் மேலாக வெளித் தொடர்பு ஏதுமின்றி ஒரே வீட்டுக்குள் அடைபட்டுக் கிடக்கும் போட்டியாளர்கள் தமது உறவினர்களைக் கண்டதும் உணர்ச்சிக் கொந்தளிப்பை வெளிப்படுத்துவது இயல்பாகவே நடக்கின்றது.

இந்த நிலையில் போட்டியாளரான ஷிவானி நாராயணனின் தாயார் உள்ளே வந்திருந்தார். அவர் தனது மகளை நிகழ்ச்சியில் கடுமையா கக் கடிந்து கொண்டார். மற்றொரு போட்டியாளரான பாலாஜியின் பின்னால் திரிவதை மட்டுமே செய்து வருகின்றார் என்றும் தனது தனித்துவத்தை ஷிவானி வெளிப்படுத்தவில்லை என்றும் அவர் பெரிதும் கடிந்துகொண்டார்.

ஷிவானியின் தாயார் இவ்வாறு அவரைக் கடிந்து கொண்டதை சமூக ஊடகங்களில் பலரும் வரவேற்றுள்ளனர். பார்வையாளர்கள் என்ன நினைத்தார்களோ அதையே ஷிவானியின் தாயாரும் வீட்டுக்குள் சென்று வெளிப்படுத்தியுள்ளார் என்று கொண்டாடி வருகின்றனர். ஆனால், தாயாரது செயலுக்குக் கடும் கண்டனங்களும்கூட வருகின்றன.



திரையிசைப் பாடகியான சின்மயி இந்த விடயத்தில் ஷிவானியின் தாயாரைக் கடிந்து கொண்டுள்ளார். மீ ரூ போன்ற சர்ச்சைகளில் பாடலாசிரியர் வைரமுத்துவின் மீது பாலியல் குற்றச்சாட்டுக்களை வைத்து பரபரப்பையும் சர்ச்சையையும் ஏற்படுத்தியவர் சின்மயி. அதனால் கடும் எதிர்ப்புக்களையும் சந்தித்தவர்.

இப்போது ஷிவானியின் தாயார் செய்திருப்பது தவறென்று தனக்குப்படுகின்றது எனத் தெரிவித்திருக்கும் சின்மயி இந்தியத் தாய்மார் தமது மகள்களுடன் பேசும் மொழி தொடர்பிலும் ஒரு பிடி பிடித்திருக்கிறார். உங்களுடைய நடத்தை குறித்து வெட்கப்படாத தாய் கிடைத்தால் அது உங்கள் அதிர்ஷ்டமே என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

> ஷிவானியின் தாயார் செய்திருப்பது தவறென்று தனக்குப்படுகின்றது எனத் தெரிவித்திருக்கும் சின்மயி இந்தியத் தாய்மார் தமது மகள்களுடன் பேசும் மொழி தொடர்பிலும் ஒரு பிடி பிடித் திருக்கிறார்.

''தமது பெண் பிள்ளைகள் தலைமுடியை அழகுபடுத்துதல், உதட்டுச் சாயம் பூசுதல் மிகச் சிறிய விடயங்களுக்காகக்கூட அவர்களை விபசாரிகள் என்ற நிலைக்கு மானபங்கப்படுத்திவிடும் மோசமான நோய் இந்தியப் பெற்றோரிடம் இருக்கின்றது. யார மயக்கப் பார்க்கிறாய், எவன் பின்னாடி சுத்திறாய் போன்ற மோசமான வார்த்தைகள் எல்லாம் சரியானவை என்று தாய்மார் நினைக்கிறார்கள். ஐந்து சதத்துக்குப் பெறுமதியில்லாத விடயத்துக்குக் கூடத் தமது பெண் பிள்ளைகளை மானபங்கப்படுத்த ஊரில நாலு பேர் என்ன சொல்லுவாங்களோ என்று காரணம் கூறுவது அதிலும் பார்க்கக் கேவலம்'' என்று வெளுத்து வாங்கியிருக்கிறார் சின்மயி.

அவரது கோபமும் நியாயமாகத்தான் தெரிகிறது. பெண் பிள்ளைகளுக்கு அவர்களது பெற்றோரே அதுவும் தாயாரே பக்க பலமாகவும் மன உரமாவும் நிற்கவில்லை என்றால் வேறு யார்தான் நிற்பார்கள்?

● பேர் அறிஞன்

# வளமிகு வாழ்விற்கான வழிகாட்டலின் நிலை...?

## 14

தனியன் ஒருவனது வாழ்வு என்பதை பிறனொருவன் தீர்மானிக்க முடியுமா? அத் தனியன் தனக்கான வாழ்க்கை முறையைத் தானாகத் தீர்மானிக்கும் வலு உள்ளதா? மனிதன் ஒரு சமூகப் பிராணி என்பதிலிருந்து எண்ணத் தொடங்கும் ஒருவன் மேலுள்ளன போன்ற வினாக்களுக்கான விடைகளை எவ்விதமாகப் பெற்றுக்கொள்வான்? இம்முரண்நிலைப்பட்ட புள்ளியிலிருந்து நாம் பயணப்பட வேண்டியுள்ளது.

மனிதன் ஒரு சமூகப் பிராணி எனும் புள்ளி பற்றியதாக எமது சிந்தனையை விரித்தால், அதற்குள்ளாக தர்க்க ரீதியாக விவாதித்தால் பயனுடையதாக அமையும். தனியன் ஒருவனுக்கு சமூகம் எவ்வளவு தவிர்க்க முடியாத ஒன்றோ மறுபுறமாக சமூகத்திற்கும் ஒவ்வொரு தனியனும் மிகமிகத் தவிர்க்க முடியாதவனே.

நாம் சமூகத்தினூடாகத் தனியனையும் தனியன்களுக்கூடாக சமூகத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. இக்கட்டுரைத் தொடரினது முன்பகுதிகளில் கூறப்பட்ட விதமாக தனியொருவன் மீதான அழுத்தம் அல்லது நெருக்கீடு சமூகத்தினது பட்டறிவு என்பதை விடவும் கற்பிதங்களினாலேயே அதிகமதிகம் பிரயோகிக்கப்படுகிறது.

அந்த நெருக்கீடுகள் அழுத்தங்கள் தனியனில் ஏற்படுத்தும் (சாதக மற்றும் பாதக) விளைவுகள் சமூகத்தின் இயல்புநிலையைப் பாதிக்கிறது. எனவேதான் சமூகம் வழிநடாத்த விளைகின்ற தனியன் தொடர்பான செயற்பாடுகளுக்குப் பிரத்தியேகமாகவும் சமாந்தரமாகவும் சமூகம் மீதான கவனிப்பையும் கண்டிப்பாக மேற்கொள்ள வேண்டியுள்ளது. ஆனால் கவனத்திற் கொள்ளப்படுகிறதா? முடிவெடுக்கின்ற ஆற்றல் ஒப்பீட்டளவில் நலிவாகவுள்ள பிள்ளைகளை இலக்கு வைத்துச் சடங்காக்கப்பட்ட வழிகாட்டுதல்களால் பயனேற்படுமா?

வழிகாட்டல் அல்லது ஆலோசனை ஒருவனுக்கு முறைப்படுத்தப்பட்ட விதமாக கிடைக்கும் தடவைகள் எதிர் சமூக செல்வாக்கு என்பது தொடர்பான யதார்த்தமான நிலைமையையாவது உணர்ந்துகொண்டுள்ளோமா? மீள வலியுறுத்தல், ஞாபகத்திறன், முன்னுதாரணம் போன்றன தொடர்பான அறிதல் புரிதலுடன் செயற்பாடுகள் உள்ளனவா? இங்கே ஒரு தனியனுக்கான செல்வாக்குச் செலுத்தும் விடயங்கள் தொடர்பாக முன்னர் பேசியிருக்கிறோம் என்பதால் எமது சிந்தனையை சமூகத்துக் கூடான தனியொருவனை நோக்கியதாக நகர்த்துவதே பயனுள்ள விளைவுகளைத் தரும் என்பதை கவனத்தில் கொள்ளுதல் அவசியமானது.

இதன் காரணமாகவே சமூகத்தைப் புரிந்துகொள்ளல் ஒரு வழிகாட்டுநனுக்கும் ஆலோசகனுக்கும் அவசியமாகிறது. அவ்வாறான அவசியம் உணர்ந்துகொள்ளப்படுகிறதா? எனும் ஒரு வினாவிற்கான யதார்த்தமான பதிலை கடந்த பகுதிகளில் பார்த்திருக்கிறோம். வழிகாட்டுநன் மற்றும் ஆலோசகனின் சமூகத்துடனான ஊடாட்டத்தினூடாகப் பெறுகின்ற பட்டறிவானது அவனுக்குள்ள கற்பிதங்கள் மற்றும் கோட்பாடுகளை மீள்பரிசீலனை செய்யத் தூண்ட வேண்டும். கடமை என்பதற்கப்பால் எண்ணங்களை விரிவாக்க வேண்டும்.

நடந்து கொண்டிருப்பது அதுவல்ல என்பதுதான் கசப்பான உண்மையாக இருக்கிறது. சமூகத்தின் எண்ண ஓட்டத்துடன் ஒத்து ஓடுதல் அல்லது இசைவாக ஓடுதல் என்பதுதான் நடக்கிறது என்பது எம் முன் உள்ள யதார்த்தமாயுள்ளது. சமூகத்தினது எண்ண ஓட்டத்தைப் புரிந்துகொண்டு சமூகத்திற்கான சரியான வழிகாட்டல் கிடைக்கவில்லை என்பதானது விளைவுகளாக எல்லோருமே கடைபோடுதல் எல்லோருமே ஒரே பயிரை நடுதல் போன்றனவற்றை குறிப்பிட முடியும்.

இவ்வாறான ஒத்த முயற்சிகளின் விளைவான நட்டத்தினை அனுபவிப்பது மட்டுமல்லாது அந்த முயற்சிகள் தொடர்பான நம்பிக்கையீனங்களையும் தோற்றுவிக்கிறது. இதனால் என்ன தொழில் செய்வது எப்படி வாழ்வது போன்ற விரக்தி நிலையை ஈடுபட்டவர் மட்டுமன்றி பார்ப் போரும் பெற்றுக்கொள்கின்றனர்.

தேவை மதிப்பீடு செய்யப்படுவதன் அவசியம் திட்டமிடல் நிலையில் ஏற்படுத்தப்படல் வேண்டுமெனும் சிந்தனை உருவாக்கப்படல் வேண்டும். அவ்வாறான சரியான திட்டம் பொருத்தமான முறையில் தொழில் வழிகாட்டல் எனும் பொறிமுறையினூடாகச் சமூகத்தினது சிந்தனைக்கு எடுத்துச்செல்லப்படுதல் வேண்டும். இதனையொத்ததாகவே பிள்ளைகளுக்கான பாடத் தெரிவுகளும் நெறிப்படுத்தப்படல் வேண்டும். ஆனால் தொழில் முயற்சியில் தடுமாறி வாழ்வாதார நெருக்குதலுக்கு முகங்கொடுக்கும் சமூகமே பிள்ளைகளிலும் செல்வாக்குச் செலுத்துகிறது. பிள்ளையைவிட அதிகம் வழிகாட்டல் ஆலோசனை தேவைப்படும் ஒரு தொகுதியாக சமூகத்தைத் தொடர்ந்தும் பேணப்போகிறோமா? (தொடரும்...)

**சமூகத்தினது எண்ண ஓட்டத்தைப் புரிந்து கொண்டு சமூகத்திற்கான சரியான வழிகாட்டல் கிடைக்கவில்லை என்பதானது விளைவுகளாக எல்லோருமே கடைபோடுதல் எல்லோருமே ஒரே பயிரை நடுதல் போன்றனவற்றை குறிப்பிட முடியும்.**

---

# சாதி ஒரு வியாதி!

■ சாம் - ரமேஸ்குமார்

தமிழர்கள் பல்லாயிரக்கணக்கான உயிர்களையும் உடமைகளையும் இழந்து, ஒரு போர்ச் சூழலைக் கடந்து, அதன் மூலம் எண்ணற்ற படிப்பினை பாடங்களை வாழ்வில் அனுபவங்களாக கற்றுணர்ந்த பிற்பாடும் அவர்கள் தங்கள் இனத்துக்கு இடையில் இருக்கும் சாதியெனும் பாகுபாட்டை ஒரு போதுமே கைவிடுவதாக இல்லை.

அரசாட்சி செய்யும் அரசியலில் இருந்து. மன அமைதி தரும் ஆன்மீக மையங்கள் வரை சாதியின் ஆதிக்கம் நீட்சியடைந்து செல்கின்றது.

வீட்டுக்கு ஒரு சாதி. தெருவுக்கு ஒரு சாதி. ஊருக்கு ஒரு சாதியென்று பல சாதி முத்திரைகள் ஒவ்வொருவர் முகத்திலும் மனிதத் தன்மையற்று விலங்குகள்போல் வலிந்து குத்தப்படுகின்றன.

தமிழர்களிடம் நவீன அறிவியல் வளர்கின்றதோ இல்லையோ சாதி உணர்வு மட்டும் அவர்களிடமிருந்து மாறுவதாக இல்லை. எக்காலத்திலும் சகித்துக்கொள்ள முடியாததாக அது இனியும் தொடர்வது வெட்கக்கேடு.

கல்வியும் அறிவும் சாதியைத் தமிழர்கள் கடக்க வைத்துவிடும் என்கிற எதிர்பார்ப்புப் பொய்த்துப் போனமை சாபக்கேடே! கல்விப்புலத்திலும், கல்வித்துறைப் பதவிகளிலும்கூட சாதியத்தின் ஆதிக்கம் துலக்கமாகவே தெரிகிறது. எல்லாவற்றையும் கடந்து ஆன்மீகத்தில் இருப்பவர்களும் சாதியைத் தூக்கிப் பிடிக்கவே செய்கிறார்கள் என்பது பெரும் சோதனை. அனைவருக்குள்ளும் வீற்றிருப்பது அந்தச் சிவபரம்பொருளே ஆவார் என்பதை எல்லோரும் எப்போது புரிந்துகொள்ளப் போகிறார்கள்?

மனிதனை இறைவனின் சாயலாகப் பார்ப்பதே சமயத்திலும், ஆன்மீகத்திலும் அதி கூடிய சிந்தனை ஆற்றலாகப் பார்க்கப்படுகின்றது. அப்படிப்பட்ட ஆன்மீகத்துக்குள் சாதியென்பது ஊடுறுப்பது பல ஆன்மீகவாதிகளின் ஞானத் தெளிவின்மையைத் தெளிவாகக் காட்டுகின்றது.

வேதாந்தமும், சிந்தாந்தமும் சாதியை ஒழிக்கவில்லை என்றால் அவற்றை ஓதுவதால் என்ன பயன். அது ஒவ்வொரு மனிதனையும் நீ உடலல்ல, மனமல்ல, புத்தியல்ல, சித்தமல்ல நீ "ஆன்மா" என்ற மேலான எண்ணத்தையே சித்தாந்தம் உரைக்கிறது. உன்னுடைய ஆன்மாவே எல்லோரிடத்திலும் இருக்கின்றது. எல்லோரிடத்திலும் இருக்கும் ஆன்மாவே உன்னிடத்திலும் இருக்கின்றது என்ற சிந்தனையை வலியுறுத்துகின்றது. இதில் எங்கே..? ஆனால் ஆலய நிர்வாகங்கள் பலவற்றையும் பாருங்கள் சாதியப் பிளவுகளால் சிதறுண்டும் சிக்கல்பட்டும் கிடக்கின்றன.

சிவபூமியில் தமிழரின் வாழ்வு வளமானதாக இருக்க வேண்டுமானால் அவர்கள் ஆன்மா ஆன்மீகத்தில் என்றும் பலமிக்கதாக இருக்க வேண்டும். இதுவே எம் ஈழத்துச் சித்தர்களின் முடிவற்ற ஆன்ம ஞானமாகும்.

# திருமணத்திற்குப் பின் பெண்ணின் முன்னுரிமை மாறுகிறது அது மாறவும் வேண்டும்!



சந்திப்பு விக்கி

## நடிகை சிம்ரன் மனம் திறப்பு

90களின் பிற்பகுதியில் தமிழ்த் திரையுலகை ஒரு கலக்குக் கலக்கியவர் சிம்ரன். அந்தக் கால இளசுகளின் கனவுக்கன்னி. பாவக் கதைகள் தொகுப்பில் இருந்த "வான் மகள்" படத்தில் நடுத்தர வயது மாதுவாக மீண்டும் ஒரு தடவை தமிழ் ரசிகர்களை மிரட்டியிருந்தார். ஹிந்தி நடிகையாக இருந்தாலும் நன்றாகத் தமிழ் பேசுவார் சிம்ரன்.

"பாவக் கதைகளில் எப்படித் திடீரென்று?"

"இயக்குநர் கௌதம் மேனன் தான் கேட்டார். என் வேடம் கனதியாக, படத்தின் அடிநாதமாக இருந்ததால் இணங்கினேன். ஆனா, கதை கேட்ட போது உச்சக் காட்சி (க்ளைமாக்ஸ்) வேற மாதிரி இருந்தது. பிறகு எல்லோரும் பேசி அதை மாற்றுவது என்று முடிவெடுத்தோம்."



"பெரிய திரையில் ஒரு காலத்தில் கனவுக் கன்னி நீங்கள். இப்போது இணையத் தளம் ஊடான சின்னத் திரையில் நடிக்க வருவதென்பது கடினமானதாகத் தெரியவில்லையா?"

"நானே சின்னத் திரையில் இருந்து வந்தவதானே! 90கள்ல அங்கேருந்துதான் பெரிய திரைக்குப் போனேன். படங்கள்ல நடிச்ச பிறகும், தொலைக் காட்சியில் ஜாக்பாட், டேக் இட் ஈஸினு நிறைய நிகழ்ச்சிகள் தொகுத்து வழங்கியிருக்கிறேன். எந்த ஊடகமா இருந்தாலும் ரசிகர்களை மகிழ்ச்சிப் படுத்தி பரசவப்படுத்துவதுதான் என் வேலை."

"பேட்ட" படத்துக்குப் பிறகு, மீண்டும் பெரிய திரைக்கு வருந்திருக்கிறீர்கள்ர். 'அந்தா துன்' ஹிந்தி படத்தின் தமிழ் பதிப்பில் தபுவின் வேடத்திற்கு உங்களைத்தான் கேட்டிருக்கிறார்களாமே?"

"இயக்குநர் ஃப்ரெட்ரிக்கும் நடிகர் பிரசாந்த்தும் தபுவினுடைய வேடத்தில் என்னை நடிக்கச் சொல்லிக் கேட்டார்கள். படத்தின் முழுக் கதையுமே தபுவையும் நாயகன் ஆயுஷ்மானையும் சுற்றித்தான் நகரும். நாயகனுக்கு நிகராக அவனுக்கு சவால் கொடுக்கும் பாத்திரம் அது. அதனால் உடனேயே ஒத்துக்கொண்டேன்"

"பயங்கர வில்லி பாத்திரம் என்பதால் பல முன்னணி நடிகைகளும் மறுத்த அந்த வேடத்தை ஏற்றுக்கொள்ளும் துணிவு எப்படி?"

"எந்த நடிகைகளைக் கேட்டு மறுத்தார்கள் என்று எனக்குத் தெரியாது. எனக்கு 'அந்தாதுன்' படமும் அதில் தபுவினுடைய பாத்திரமும் நிறைவே பிடித்தது. அவ்வளவு பெரிய நடிகையான தபுவே அந்தப் பாத்திரத்தில் நடிக்க யோசிக்கவேயில்லை. பிறகு நான் எதற்கு கவலைப் படவேண்டும். 'பார்த்தேன் ரசித்தேன்' லயே நான் வில்லி மாதிரி நடித்திருக்கிறேன். இத்தனை வருசத்துக்குப் பிறகு பிரசாந்த் - சிம்ரன் இணை மறுபடி அமைஞ்சிருக்கு. இந்தப் படத்தை ஏற்பதற்கு அதுவும் ஒரு காரணம்"

"இயக்குநர் கௌதம் மேனன் - நடிகர் கௌதம் மேனன்... யார் சிறப்பு?"

"ஒரு பாத்திரத்தை நடிகர், நடிகைக்குப் புரிய வைத்து அந்தப் பாத்திரத்தை அவர்களுக்குள் உள்ளிறக்கி நடிப்பை வாங்குவது என்பது அவ்வளவு இலகுவானதில்லை. கதையை, பாத்திரத்தை ஒரு இயக்குநர் உணர்வுபூவமாக விவரிக்கும் இடத் திலதான் அந்த மாதிரி நடக்கும். ஒரு டைரக்டரா கௌதம் அதுல நிபுணர். அப்படிப்பட்ட ஒரு இயக்குநருக்கு நடிப்பு பெரிய சாவலில்லை. ஆர்ப் பாட்டமில்லாத, அமைதியான அவ ருடைய நடிப்பு 'பாவக்கதைகள்' படத்திற்குப் பெரிய பலம்"



"தமிழ்த் திரைப்படங்களில் நாயகர்களுக்கு வயது ஒரு தடையாக இருந்ததில்லை. கதாநாயகிகளுக்கு அது பெரிய சவால். திருமணமாகி, குழந்தை பெற்ற நடிகைகள் கதாநாயகி என்கிற தகுதியை இழப்பது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?"

"நடிகைகளுக்கு மட்டுல்ல, மருத்துவர், பொறியியலாளர், பத்திரிகையாளர் என்று எந்தத் துறையாக இருந்தாலும் பெண்கள் இந்தச் சவாலைத் தாண்டிதான் வரவேண்டும். எவ்வளவு பெரிய பொறுப்புல இருக்குற பெண்ணா இருந்தாலும் குழந்தை பெற்றதற்குப் பின்னர் அவளுக்குத் தன் குழந்தைதான் முக்கியமாகப்படுகிறது. திருமணத்திற்குப் பின்னர் பெண்களுக்கு முன்னுரிமை மாறுது. ஆனா, ஆண்களுக்கு அது மாறுவதே இல்லை. பெண்களுடைய முன்னுரிமை மாறுவதென்பதும் தப்பே இல்லை. இன்னும் சொல்லப்போனால், அது மாறியே ஆக வேண்டும். அதுதான் நல்லது. என்னைப் பொறுத்த வரை கல்யாணமான, குழந்தை பெற்ற நடிகைகளை திரைத் துறையில் யாரும் ஒதுக்குவதில்லை. தனக்கு என்ன வேண்டும், தான் எப்படி இருக்க வேண்டும் என்பதெல்லாம் அந்த நடிகையின் தனிப்பட்ட தெரிவுதான்." அழகாகச் சிரிக்கிறார் சிம்ரன். ■



## புதிய ஆண்டில் புதிய சவால்!

2020 எல்லோருக்குமே ஏதோ ஒருவிதத்தில் பாதிப்பைத் தந்துவிட்டுப்போக, 2021ஐ உற்சாகத்தோடு வரவேற்று வருகின்றார்கள். கபாலி திரைப்பட நடிகை சாய் டஷிகா அந்த வகையில் இந்த ஆண்டை 48 நாட்களுக்கும் தவறாமல் நாளாந்தக் கருமங்களை இடைவிடாது ஆற்றுவதான சவால் ஒன்றை ஏற்றுள்ளார். தனது இந்தச் சவாலை அவர் செவ்வாய்க்கிழமை சமூக வலைத் தளங்களில் பதிவிட்டார். அத்தோடு நின்றுவிடாது தன்னுடைய ரசிகர்களையும் இதுபோன்று செயற்படுமாறும் தூண்டியுள்ளார். அதாவது ஒரு நாளில் குறிப்பிட்ட ஒரு மணித்தியாலத்தில் ஏதாவது ஒரு காரியத்தைச் செய்தால் அதனை அதே இடத்தில் அதே நேரத்தில் தொடர்ந்து 48 நாட்களுக்குச் செய்யவேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார். காலை 5 மணிக்கு எழுந்து தனது அன்றாடக் கடமைகளை முடிப்பது என்பதையே தனது இலக்காகக் கொண்டிருக்கிறார் என்றும் அவர் பகிர்ந்துள்ளார்.

# சிகப்பு வட்ட மர்மம்

முன்னுரை

பத்தொன்பது மற்றும் இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற ஆங்கில எழுத்தாளர் சர் ஆர்தர் கானன் டாயில் என்று சொன்னால் மிகையாகாது. 1911ஆம் ஆண்டு "The Strand Magazine" என்னும் ஆங்கில இதழில் வெளியான அவரது ஒரு சிறுகதை இது. வாடகைக்கு விடப்பட்ட தன் வீட்டின் குத்தகைதாரர் பற்றிய ஒரு பெண்ணின் புகாரை ஹோல்ம்ஸ் விசாரிப்பது பற்றிய சிறு கதை.

சிறு கதை 4

நாங்கள் அனைவரும் அவரை நோக்கினோம் அந்த வார்த்தைகளை அவர் உதிர்த்தபோது. அங்கே வாசல்கதவில் உயர்ந்த அழகான ஒரு பெண் நின்று கொண்டிருந்தாள். அவள்தான் ப்ளூம்ஸ்பர்ரியின் மர்மமான பெண். அவள் மெதுவாக முன்னே வந்தாள். அவளது முகம் வெளிறிப் போய் இருந்தது. பயத்தால் விரிந்து இருந்தது. அவளது கண்களின் பயந்த பார்வை தரையில் இருந்த அந்தக் கறுத்த உடலின் மேல் பதிந்திருந்தது.

"நீங்கள் அவனைக் கொன்று விட்டீர்கள்" என்று முணுமுணுத்தாள். "கடவுளே, நீங்கள் அவனைக் கொன்று விட்டீர்கள்!" பின் அவள் அழுத்தமாக வேகமாக மூச்சை உள்ளிழுத்தாள். அதன் பின் வில்லில் இருந்து புறப்படும் அம்பு போல் தரையிலிருந்து ஆனந்தத்தில் குதித்தாள். அந்த அறையில் சுற்றிச் சுற்றிப் பம்பரம் போல நடனமாடினாள். அவள் கைகளை விட்டு விட்டுத் தட்டிக் கொண்டே ஆடினாள். அவளது கரிய விழிகள் ஆச்சரியத்தில் மின்னின. அவளது உதடுகளில் இருந்து ஆயிரமாயிரம் இத்தாலிய உணர்ச்சிகள் கொப்பளித்துக் கொண்டே இருந்தன. இப்படியொரு நேரத்தில் இப்படியொரு பெண் ஆனந்தத்தில் ஆடுவதைக் காணச் சகிக்கவில்லை. சட்டென்று நிறுத்திய அவள் கேள்வி கேட்பது போல் எங்களைப் பார்த்தாள்.

"ஆனால் நீங்கள் காவல் துறை இல்லையா? நீங்கள் கியோசேப்பி கோர்கியானோவைக் கொன்று விட்டீர்கள். இல்லையா?"

"நாங்கள் காவலர்கள்தான்"

அவள் நிழல் படிந்த அறை முழுவதும் சுற்றிப் பார்த்தாள்.

"ஆனால், கென்னரோ எங்கே?" என்று கேட்டாள். "அவர் என் கணவர், கென்னரோ. என் பெயர் எமிலியா லூக்கா. நாங்கள் இருவரும் நியூயார்க்கில் இருந்து வருகிறோம். கென்னரோ எங்கே? இப்பொழுதுதான் அவர் என்னைக் கூப்பிட்டார். நான் வேகமாக ஓடி வந்தேன்."

"நான்தான் உங்களைக் கூப்பிட்டேன்." என்றார் ஹோல்ம்ஸ்.

"நீங்களா. நீங்கள் எப்படி என்னை அழைத்திருக்க முடியும்"

"உங்கள் சங்கேத மொழி அவ்வளவு கடினம் இல்லை. நீங்கள் இங்கு வந்தது நல்லது. எனக்கு நன்றாகத் தெரியும், 'வீ ஐ ஈ என் ஐ' என்று சைகை அனுப்பினால் போதும் நீங்கள் இங்கு வந்து விடுவீர்கள் என்று."

அந்த அழகான இத்தாலியப் பெண், எங்களது நண்பரை ஆச்சர்யத்தோடு பார்த்தாள்.

"உங்களுக்கு இதெல்லாம் எப்படித் தெரியும் என்று எனக்கு ஒன்றும் விளங்கவில்லை." என்றாள் அவள். "கியூசெப்பி கோர்கியானோ - எப்படி?" என்று சொல்லி நிறுத்தினாள். அதன் பின் அவளது முகம் மின்னியது ஆனந்தத்திலும் பெருமிதத்திலும். "இப்பொழுது புரிந்துவிட்டது. என் கென்னரோ! எனதருமை கென்னரோ இதுவரை எல்லாத் தீமைகளில் இருந்தும் என்னைக் காப்பாற்றிய கென்னரோதான் அவரது வலிமையான கைகளால் இந்த அரக்கனைக் கொன்றிருக்கிறார்! ஓ கென்னரோ. எவ்வளவு அருமையானவன் நீ. உன்னை அடைவதற்கு நான் எவ்வளவு கொடுத்து வைத்திருக்க வேண்டும்."

"நன்று. திருமதி லூக்கா." என்று அவளது கையைப் பிடித்து எந்தவித உணர்ச்சியும் இல்லாமல் நாட்டிங் மலைத் திருடனிடம் பேசுவதைப் போல் கவி நயம் இல்லாத க்ரெக்சன் பேச ஆரம்பித்தார். "நீங்கள் யார் என்னவென்று எனக்கு இன்னும் தெரியவில்லை. ஆனால் நீங்கள் இவ்வளவு பேசியதில் இருந்து நீங்கள் யார்டு காவல் நிலையத்தில் நிச்சயம் தேவைப் படுவீர்கள் என்று புரிகிறது"

"ஒரு நிமிடம் க்ரெக்சன்" என்றார் ஹோல்ம்ஸ். "இந்தப் பெண்மணி சொல்வதைப் பார்த்தால் நாம் கேள்வி கேட்பதில் எவ்வளவு ஆர்வமாக இருக்கிறோமோ அந்தளவு ஆர்வம் அவர்களுக்குப் பேசுவதில் இருப்பது போல் தெரிகிறது. உங்களது கணவர் இங்கு கொலையுண்டு கிடைக்கும் மனிதரின் கொலைக் குற்றத்திற்காக விசாரிக்கப் படுவார் என்பது உங்களுக்குப் புரியும் என்று நினைக்கிறேன். நீங்கள் சொல்வதெல்லாம் சாட்சியங்களாக மாறும். ஆனால் அவர் குற்றம் புரிய வேண்டும் என்ற நோக்கம் இல்லாமல் இந்தக் காரியத்தைச் செய்திருப்பதாக நீங்கள் நினைத்தால் தயவு செய்து முழுக் கதையையும் சொல்ல வேண்டும்."




"கோர்கியானோ இப்பொழுது இறந்து விட்டதால் இனி எந்தவிதக் கவலையும் எனக்கில்லை." என்றாள் அந்தப் பெண். "அவன் ஒரு அரக்கன், சாத்தான். அவனைக் கொன்றதால் உலகில் எந்த நீதிபதியும் என் கணவருக்குத் தண்டனை தரப் போவதில்லை."

"அப்படி இருக்கையில்" என்றார் ஹோல்ம்ஸ். "எனது வேண்டுகோள் என்னவென்றால், நாம் இந்த அறையைத் தாளிட்டு இந்தப் பெண்ணின் அறைக்குச் செல்வோம். அவள் சொல்வதைக் கேட்டுவிட்டு நமது கருத்தைப் பதிவு செய்வோம்."

அரை மணி நேரம் கழித்து நாங்கள் நால்வரும் அவளது வீட்டில் உள்ள ஒரு சிறிய அறையில் அமர்ந்தோம். அவளது அருமையான கதை சொல்லும் திறமையில் லயித்து அவள் விவரித்த அந்தக் கொடுமையான நிகழ்வுகளைக் கேட்டுக் கொண்டிருந்தோம். அதன் முடிவைத்தான் இப்பொழுது நாங்கள் கண்டிருக்கிறோம். அவள் வேகமான நடையில் தங்கு தடை இல்லாமல் ஆங்கிலம் பேசினாள். ஆனால் வழக்கத்திற்கு மாறான ஆங்கில மொழியாய் இருந்தது அது. தெளிவாய்ப் புரிய வேண்டும் என்பதற்காக நான் அதை இலக்கணப் பிழை இல்லாமல் தருகிறேன்.

"நேபிள்ஸ் அருகில் உள்ள பொசிலிப்போ என்னும் ஊரில் நான் பிறந்தேன்." என்றாள் அவள். "அகஸ்டோ பாரெல்லி என்பவரின் மகள். அவர் தலைமை நீதிபதியாக இருந்தார். முன்னொரு முறை அவர் அந்தப் பகுதியில் உதவி கலெக்டர் ஆகவும் பணியாற்றியவர். கென்னரோ எனது அப்பாவின் அலுவலகத்தில் வேலை பார்த்தார். அவரை நான் காதலித்தேன். எந்தப் பெண்ணுக்கும் அவர் மேல் ஆசை வரும். எனக்கு வந்ததில் வியப்பேதுமில்லை. அவரிடம் பணமும் இல்லை பதவியும் இல்லை. அவரது அழகும் திறமையும் வலிமையையும் தவிர அவரிடம் வேறொன்றும் இல்லை. அதனாலேயே எனது அப்பாவிற்கு அவரைப் பிடிக்கவில்லை. அதனால் நாங்கள் இருவரும் ஓடிப்போய் பாரி என்ற ஊரில் திருமணம் செய்துகொண்டோம். எனது நகைகளை விற்று அமெரிக்கா செல்வதற்குப் பணம் தயார் செய்தோம். இது நடந்து நான்கு வருடங்களாயிற்று. அன்று முதல் நாங்கள் நியூயார்க்கில்தான் வசிக்கிறோம்.

"விதி எங்களுக்கு முதலில் நன்றாக இருந்தது. ஒரு இத்தாலியரிடம் கென்னரோ வேலை பார்த்தார். போவெரி என்னும் ஊரில் சில கயவர்களிடம் இருந்து என் கணவர் அவரைக் காப்பாற்றினார். அதனால் அவர்களிருவரும் நெருக்கமான நண்பர்களாயினர். அவரது பெயர் டிட்டோ காஸ்டலோட்டே. அவர் காஸ்டலோட்டே சாம்பா என்னும் பெரிய நிறுவனத்தில் மூத்த பங்குதாரராக இருந்தார். அவர்கள் நிறுவனம் பழங்கள் இறக்குமதி செய்வதில் நியூயார்க்கில் தலை சிறந்த நிறுவனமாக விளங்கியது. திரு சாம்பா அவர்கள் அங்கு மதிப்பில்லாமல் போய் விட்டார். நமது புதிய நண்பர் காஸ்டலோட்டேவுக்கு முழு அதிகாரமும் வந்துவிட்டது. அந்த நிறுவனத்தில் முன்னூறு பணியாளர்களுக்கு மேல் வேலை செய்கிறார்கள். அங்கு எனது கணவரை ஒரு துறையின் தலைமைப் பணிக்கு அமர்த்தினார். தினமும் அவர் என் கணவரை நல்ல விதமாகவே நடத்தினார். திரு காஸ்டலோட்டே திருமணம் செய்யவில்லை. அதனால் கென்னரோவைத் தன் மகனைப் போலவே நினைத்தார். நாங்கள் இருவரும் அவரை எங்கள் தந்தை போலவே நினைத்துப் பழகி வந்தோம். புரூக்ளின் என்னும் ஊரில் நாங்கள் ஒரு சிறு வீட்டை எடுத்து வசித்து வந்தோம். அதன் பின் எங்களது எதிர்காலம் உறுதி அளிக்கப்பட்டது போல் இருந்தது. திடீரென்று ஒரு நாள் அந்தக் கார்மேகம் எங்களது வானை மறைத்து இருளைப் பரப்பும் வரை.

ஒரு நாள் இரவு கென்னரோ பணியில் இருந்து திரும்பும்போது எங்கள் ஊர்க்காரன் ஒருவனை உடன் அழைத்து வந்தார். அவன் தான் கோர்கியானோ. அவனும் பொசிலிப்போவில் இருந்துதான் வந்திருக்கிறான். அவன் மிகவும் உடல் பருத்தவன் நீங்கள் இப்பொழுது பார்ப்பது போல். அவன் உடல் மட்டுமல்ல, அவன் சம்பந்தப்பட்டது அனைத்துமே விகாரமாய் பெரிதாய் பயமுறுத்துவது போலவே இருக்கும். அவனது குரல் எங்களது சிறிய வீட்டில் இடி போல் கேட்கும். அவன் கைகளை வீசிப் பேசும்போது அந்தச் சிறிய வீட்டில் இடமே பத்தாது. அவனது எண்ணங்கள் உணர்ச்சிகள் பொழுது போக்குகள் எல்லாமே பெரிதும் மிகைப்படுத்தப்பட்டவை மிகவும் பிரமாண்டமானவை. அவன் அவ்வளவு ஆற்றலோடு பேசும்போது, இல்லை உறுமும்போது, மற்றவர்களுக்கு வெறுமனே அந்த வலிமையான வார்த்தைப் பிரவாகங்களைக் கேட்டுப் பயந்து அமர்ந்து கேட் கத்தான் தோன்றும். அவனது கண்கள் தீப்பொறி போல் பிரகாசிக்கும். அதைக் கண்டு மயங்கி நீங்கள் அவன் சொல்வதைக் கேட்கும் அடிமை யாகிப் போவீர்கள். அவன் மிகவும் பயங்கரமாக இருந்தாலும் ஆச்சர்யப்படத்தகுந்த மனிதன். அவன் இறந்ததை எண்ணிக் கடவுளுக்கு நன்றி சொல்லிக் கொள்கிறேன்.

அவன் மீண்டும் மீண்டும் வந்தான். ஆனால் கென்னரோவுக்கு அவன் வருவது பிடிக்கவில்லை என்பதை நான் அறிந்து கொண்டேன். என் கணவர் பாவம் முகம் வெளிறிப் போய் அலட்சியமாய் அமர்ந்திருப்பார்.

எங்களது விருந்தினரின் உரையாடல்களில் இருக்கும் அரசியல் பற்றி சமுதாயக் கோபங்கள் பற்றி அவனது முடிவில்லா பிதற்றல்களை கேட்டுக் கொண்டிருப்பார். கென்னரோ எதுவும் பேசவில்லை. இருந்தாலும் எனக்கு என் கென்னரோவைப் பற்றி நன்றாகத் தெரியும். அதனால் அவர் முகத்தில் இதுவரை காணாத உணர்ச்சியை நான் கண்டேன். முதலில் அது ஒரு வெறுப்புதான் என்று நினைத்தேன். ஆனால் மெதுவாக அது வெறுப்பையும் தாண்டிய ஒரு உணர்ச்சி என்று புரிந்தது. அது பயம் - ஆழமான மர்மமான மனதை அழுத்துகின்ற ஒரு பயம். அன்றைய இரவு - அவரது பயத்தை உணர்ந்த அன்றிரவு - நான் அவரிடம் கெஞ்சிக் கேட்டேன் என்னிடம் எதையும் மறைக்க வேண்டாம் என்று. என் மேல் வைத்திருந்த காதல் உண்மையானால் அந்தப் பிரமாண்டமான மனிதன் ஏன் உங்களைப் பரிதவிக்க வைக்கிறான் என்பதை ஒளிக்காமல் சொல்லுங்கள் என்றேன்.

அவர் சொல்லச் சொல்ல எனது இதயமும் இறுகி பனிக்கட்டி போலாகி விட்டது. எனது கென்னரோ கட்டிளம் காளை போல் துள்ளித் திரிந்த தனது இளமைக் காலத்தில் உலகமே தனக்கு எதிராக இருந்த நேரத்தில் வாழ்வில் தனக்கு நேர்ந்த கொடுமைகளால் மனம் வெம்பிப் போய் இருந்த நேரத்தில் நியோபாலிடன் சங்கமான சிவப்பு வட்டத்தில் சேர்ந்திருந்தார். அது பழைய கார்போனேரி சங்கத்துடன் தொடர்பில் இருந்தது. அவர்களுடைய உறுதி மொழிகளும் மர்மங்களும் மிகவும் பயங்கரமானவை. ஒரு முறை உள்ளே சென்று விட்டால் வெளியேறுவது கனவிலும் முடியாதது. நாங்கள் நியூயார்க் சென்றபோது அனைத்தையும் உதறி விட்டோம் என்றுதான் கென்னரோ நினைத்திருந்தார். நேபிள்ஸ் நகரில் என் கணவரை அறிமுகப்படுத்திய அதே மனிதனை நியூயார்க் நகர வீதியில் ஒரு மாலைப் பொழுது காணும் பொழுது அவர் முகம் பேயறைந்தது போலாகி விட்டது. தென் இத்தாலியில் அந்த அரக்கன் கோர்கியானோவின் பட்டப் பெயர் 'மரணம்' என்பதாகும். இத்தாலியக் காவல் துறையிடம் இருந்து தப்பிக்கவே அவன் நியூயார்க் வந்தான். ஆனால் இங்கு வந்ததும் தனது அச்சமூட்டும் மர்ம சங்கத்தின் கிளையை பரப்பி வைத்து விட்டான். இதெல்லாம் சொல்லி விட்டு அதே நாளில் அவருக்கு வந்த அழைப்பாணையையும் காண்பித்தார். அதன் முகப்பில் சிவப்பு வட்டம் இருந்தது. அதன் பொருள் என்னவென்றால் ஒரு வாடகை இடம் ஒரு குறிப்பிட்ட நாளில் எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் நிச்சயம் வர வேண்டும் என்றும் ஆணையிடப்பட்டிருந்தது.

அதுவே மிகவும் துயரமானது என்று நினைத்திருந்தோம். ஆனால் அதைவிடக் கொடுமை இனிமேல் தான் வரப்போகிறது என்பதை நாங்கள் அறியவில்லை. நான் சில நேரங்களில் கவனித்ததுண்டு. அவன் எங்கள் வீட்டுக்கு அடிக்கடி வருவான். வரும்போதெல்லாம் என்னிடம் அதிகமாகப் பேச்சுக் கொடுத்தான். என் கணவரிடம் பேசும் சமயத்திலும் அவனது கோரமான பளீரிடும் முறைத்துப் பார்க்கும் காட்டு விலங்கின் கண்கள் என்னை நோக்கியே இருந்தன. ஒரு நாள் இரவு அந்த மர்மமும் வெளியே வந்துவிட்டது. நான் அவனுக்குள் இருந்த அவன் சொன்ன காதலை - ஒரு காட்டுமிராண்டியின் காதலை - உசுப்பி விட்டிருக்கிறேன். கென்னரோ அவன் வரும்போது வீட்டில் இல்லை. கதவைத் திறக்குமுன் தள்ளிவிட்டு உள்ளே நுழைந்தான். அவன் என்னைத் தன் பிரமாண்டமான கரங்களில் எடுத்துக் கரடி போன்ற தன் உடல் மேல் அணைத்தான். என்னை முத்தங்களால் நிறைத்தான். தன்னுடன் வந்து விடுமாறு கெஞ்சினான். நான் போராடிக் கொண்டு அலறிக் கொண்டிருக்கும்போது கென்னரோ உள்ளே நுழைந்தார். அவனைத் தாக்கினார். அவன் கென்னரோவை அடித்து மயக்கமடையச் செய்து விட்டு வெளியேறியவன் பின் என்றுமே வரவில்லை. அந்த இரவு நாங்கள் ஒரு கொடூர எதிரியைச் சம்பாதித்து விட்டோம்.

சில நாட்கள் கழித்து அந்தச் சந்திப்பு வந்தது. கென்னரோ அதில் இருந்து திரும்பி வந்ததும் அவர் முகத்தில் இருந்தே எதோ மிக பயங்கரமான விஷயம் நடந்திருக்கிறது என்பது தெரிந்து விட்டது. நாங்கள் நினைத்ததைவிட அது மிகவும் பயங்கரமானதாகவே இருந்தது. அந்தச் சங்கத்திற்குத் தேவையான பணம் அனைத்தும் அமெரிக்காவில் உள்ள இத்தாலிய பணக்காரர்களை மிரட்டியே வாங்கப்பட்டன. எங்களது நண்பரான காஸ்டலோட்டேவும் இதே போல் ஒருமுறை சங்கத்தால் அணுகப்பட்டார். அவர் மிரட்டலுக்குப் பணியவில்லை. அவர் அந்தத் தகவலை காவல்துறையிடம் பகிர்ந்து விட்டார். இதேபோல் இனி நடந்து விடக் கூடாது என்றும் இது போல் யாரும் நம்மை எதிர்க்கத் துணியக் கூடாது என்றும் முடிவெடுக்கப்பட்டது. அதனால் அவரது வீட்டோடு சேர்த்து அவரையும் வெடி குண்டுகளால் தகர்ப்பது என்று முடிவாயிற்று. அந்தச் செயலை யார் நடத்துவது என்று தீர்மானிக்க குலுக்கல் முறையில் தேர்வு நடந்தது. கென்னரோ தனது எதிரியின் குரூர கண்களைக் கவனித்தார் அவன் தன் கையை அந்தப் பைக்குள் விடும்போது. ஏதோ ஒரு விதத்தில் அது முன்பே தீர்மானிக்கப்பட்டுவிட்டது என்பது நன்றாகப் புரிந்து விட்டது. ஏனெனில் அவன் எடுத்தது மரண சாசனமான சிவப்பு வட்டம் பொறிக்கப்பட்ட அந்தத் தட்டேதான். கொலை ஆணை, அவரது கைகளில் விழுந்தது. தனது உற்ற நண்பனைக் கொலை செய்ய வேண்டும். அல்லது தனது கூட்டாளிகளின் கோபத்திற்கு ஆளாக நேரிடும். இது அவர்களது குரூர சதித் திட்டத்தின் ஒரு பங்கு. அவர்களுக்குப் பிடிக்காத நபரைப் பழி வாங்க அந்த நபர்களை மட்டுமல்லாது அவர்கள் விரும்புபவர்களையும் சேர்த்துத் தாக்குவதுதான் அவர்களது வழக்கம். இது தெரிந்ததால் தான் அது ஒரு பயங்கரமாக அவர் தலைக்கு மேல் தொங்கியது. பீதியினால் அவருக்குப் பைத்தியம் பிடித்தது போலாகி விட்டது.

அன்று இரவு முழுவதும் நாங்கள் கட்டிப்பிடித்துக் கொண்டே அமர்ந்திருந்தோம். ஒருவரை ஒருவர் பிரச்சினைகள் வரும்போது தைரியமாய் இருக்க வேண்டும் என்று தேற்றிக் கொண்டிருந்தோம். மறு நாள் இரவே நாள் குறித்தாயிற்று அந்தக் காரியத்தை முடிக்க. நண்பகல் நானும் எனது கணவரும் லண்டன் புறப்பட ஆயத்தமானோம். எங்கள் நண்பருக்கும் இந்த ஆபத்தைப் பற்றி முன்னெச்சரிக்கை கொடுத்து விட்டுச் சென்றோம். அதே போல் காவல் துறைக்கும் ஒரு செய்தியை அனுப்பி விட்டோம் இனிமேல் எந்தவித சிக்கலும் அவருக்கு வராத வண்ணம்.

மீதி அனைத்தும் உங்களுக்கே தெரியும். எங்களுக்கு நன்றாகத் தெரியும் எங்கள் எதிரிகள் எங்கள் நிழல்களைப் போலவே எங்களைச் சுற்றுவார்கள் என்று. கோர்கியானோவுக்கு எங்கள் மேல் தனிப்பட்ட விரோதமும் காரணமாய் இருந்தது. என்ன இருந்தாலும் அவன் எவ்வளவு கொடூரமானவனாய் குள்ள நரியாய் களைப்பே இல்லாமல் இருப்பான் என்றும் தெரியும். அமெரிக்காவும் இத்தாலியும் அவனது கொடூரங்களைக் கதை கதையைச் சொல்லும். இப்பொழுதுதான் அவர்கள் நிம்மதி அடைந்திருப்பார்கள். எனக்கு எந்தவிதத் தொந்தரவும் நேராதவண்ணம் என்னவர் ஒரு இடத்தைத் தேர்வு செய்து தங்க வைத்தார். எங்களுக்குக் கிடைத்த சில நாட்களில். அமெரிக்க இத்தாலியக் காவல்துறைகளுக்குத் நேரம் கிடைக்கும் போது தகவல் சொல்ல விரும்பினார். அவர் எங்கிருக்கிறார் என்று எனக்கே தெரியாது. எனக்குத் தெரிந்ததெல்லாம் தினசரி செய்தித்தாள் மூலம் வரும் செய்திகள் மட்டுமே. ஒரு நாள் நான் சாளரத்தில் இருந்து பார்க்கும்போது இரு இத்தாலியர்கள் என் வீட்டை வேவு பார்ப்பதைக் கண்டேன். எப்படியோ கோர்கியானோ எனது இருப்பிடத்தைக் கண்டுபிடித்துவிட்டதை அறிந்தேன். இறுதியில் கென்னரோ ஒரு குறிப்பிட்ட இடத்தில இருந்து சைகை செய்வதாக செய்தித்தாள் மூலம் சொன்னார். அந்தச் சைகைகள் வெறும் எச்சரிக்கைகளாக மட்டுமே இருந்தன. அதுவும் திடீரென்று நிறுத்தப்பட்டுவிட்டது. இப்பொழுது எனக்குத் தெளிவாகத் தெரிகிறது கோர்கியானோ தன்னை நெருங்கி விட்டதை அவர் தெரிந்துகொண்டு விட்டார். அதனால், கடவுளே, நல்ல வேளை அவன் வரும்போது தயாராக இருந்திருக்கிறார். இப்பொழுது சொல்லுங்கள், நாங்கள் சட்டத்திற்கு எதுவும் பயப்பட வேண்டுமா? இவ்வுலகில் உள்ள எதாவது ஒரு நீதிபதி கென்னரோ செய்த குற்றத்திற்குத் தண்டனை எதுவும் அளித்து விடுவாரா?

திரு க்ரெக்சன் என்று ஆரம்பித்த அமெரிக்கன் அந்த அதிகாரியைப் பார்த்து "எனக்கு ஆங்கிலச் சட்டத்தின் பார்வை பற்றித் தெரியாது. ஆனால் நியூயார்க்கில் இவரது கணவர் செய்த செயலுக்கு நன்றி மட்டுமே தெரிவிப்பார்கள்."

"இந்தப் பெண் வந்து எனது உயர் அதிகாரியைச் சந்திக்க வேண்டியிருக்கும்" என்றார் க்ரெக்சன். "இவள் சொன்னதை உறுதிப்படுத்திவிட்டால் இவளுக்கும் இவளது கணவருக்கும் எந்தவித தண்டனையும் கிடைக்காது. ஆனால் எனக்குத் தலையும் புரியவில்லை வாலும் புரியவில்லை ஹோல்ம்ஸ், இந்த வழக்கில் நீங்கள் எப்படி உள்ளே வந்தீர்கள் என்று"

"படிப்பு, க்ரெக்சன், படிப்பு. இன்றும் நான் பழைய பல்கலைக்கழகத்தில் அறிவைத் தேடிக் கொண்டிருக்கிறேன். வாட்சன், உங்களது கொடூரமான விகாரமான சேகரிப்பில் சேர்ப்பதற்கு இன்னுமொரு மாதிரி கிடைத்து விட்டது. இப்பொழுது மணி எட்டுகூட ஆகவில்லை. கோவென்ட் தோட்டத்தில் வாக்னர் இரவு நடக்கிறது. இப்பொழுது கிளம்பினாலும் இரண்டாவது காட்சியைக் காண நேரம் இருக்கிறது."

(முற்றும்)

# வேதாளம் மீண்டும் முருங்கை ஏறியது!

உலகை தன் கொடூரப் பிடிக்குள் திணறவைத்துக்கொண்டிருக்கும் கொரோனா எனப்படும் கொவிட் - 19 வைரஸ் எங்கிருந்து உருவாகியது? ஒரு வருடம் கடந்தும் விடை தெரியாத இந்தக் கேள்விக்கு விடை கண்டுபிடிக்கும் முயற்சியில் மீண்டும் ஒரு சறுக்கல் ஏற்பட்டிருக்கிறது. இந்த விசாரணைகளுக்காக சீனாவிற்குச் செல்லவிருந்த உலக சுகாதார அமைப்பின் இரு அறிவியலாளர்களின் பயணத்தை திடீரென நிறுத்தியிருக்கிறது சீனா.


இதனால் கடுப்பாகியிருக்கும் உலக சுகாதார அமைப்பின் பணிப்பாளர் நாயகம் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ், கடைசி வரைக்கும் இந்தப் பயணத்திற்கு இணக்கம் தெரிவித்துவிட்டு ஆய்வியல் அறிஞர்கள் தங்களது நாடுகளில் இருந்து இந்தப் பயணத்திற்காகப் புறப்பட்ட பின்னர், இந்தப் பயணத்திற்குத் தாம் முறைப்படியான அனுமதியை இன்னும் வழங்கவில்லை என்று தெரிவித்து மறித்திருக்ககிறார்கள் சீன அதிகாரிகள் என்று குற்றஞ்சாட்டினார்.

நான் அவர்களோடு கடைசி வரைக்கும் தொடர்பில் இருந்து பயண ஏற்பாடுகளை எல்லாம் செய்த பின்னர் அவர்கள் இப்படிச் செய்திருப்பது கடுமையான வருத்தத்தை தந்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.


சீனாவின் வுகான் நகரத்தில்தான் கொரோனா முதன் முதலில் கண்டறியப்பட்டது. அதனால் அங்குள்ள உயிர்ச் சந்தையில் விற்கப்பட்ட வௌவால்களில் இருந்து இந்த வைரஸ் பரவியிருக்கக்கூடும் என்கிற சந்தேகம் எழுந்தது. ஆனால், தமது ஆய்வுகளின்படி அதற்கான சாத்தியங்கள் ஏதுமில்லை என்று சீன ஆய்வாளர்கள் கூறுகின்றனர். வுகானில் இருந்து கிருமி பரவவில்லை என்றும் அது ஏற்கனவே வேறு நாடுகளில் இருந்தது என்றும் அவர்கள் கூறுகின்றார்.

ஆனால், மேற்குலக நாடுகளோ சீனாதான் இந்த வைரஸை உற்பத்தி செய்து அதனை உலகிற்குக் கொடுத்து உலகத்தை இப்படி பக்கவாதமாக்கி விட்டது என்று குற்றஞ்சாட்டுகின்றன. அதனால் கொரோனா எங்கிருந்து வந்தது என்று கண்டறியப்பட வேண்டும் என்று ஒற்றைக்காலில் நிற்கின்றன.

இந்த விசாரணை உலக சுகாதார அமைப்புக்கும் உலக சமூகத்திற்கும் எவ்வளவு முக்கியம் என்பதைச் சீனா உணர்ந்துகொள்ளவேண்டும், விரைவில் இந்தப் பணயத்திற்கான முறையான அனுமதி கிடைக்கும் என்று நம்புகின்றேன் என்று தெரிவித்திருக்கிறார் டெட்ரோஸ்.



# மூன்று குரங்குகள்



2008ஆம் ஆண்டில் வெளியாகிய துருக்கிய நாட்டுத் திரைப்படம் இது. ஆங்கிலத்தில் ''திறி மங்கீஸ்'' என்ற தலைப் பிடலில் வெளியானது. நூரி பில்கே செலான் என்பவர் இந்தப் படத்தை இயக்கியிருக்கிறார். இதை இயக்கியதற்காகக் கேன்ஸ் திரைப்படவிழாவில் இவருக்குச் சிறந்த இயக்குநருக்கான விருது வழங்கப்பட்டது. ஏமாற்றுதல், ஏமாறுதல், பழிவாங்குதல்கள் எனக் குழம்பிய - குரங்குத் தன்மையுடன் ஒப்பிடப் படுகின்ற மனித உளவியலை நவீன தொழில் நுட்பங்களின் மூலம் புதியவகைக் கதைப் புனைவுடன் இணைத்துப் படமாக்கிப் புதிய சாத்தியங்களை நிகழ்த்திய படம் இது.


81ஆவது ஒஸ்கார் விருது விழாவில் சிறந்த வெளிநாட்டு மொழித் திரைப்படத்துக்கான ஒஸ்கார் விருதுக்காகத் துருக்கியின் சார்பில் அதிகாரபூர்வமாகச் சமர்ப்பிக்கப்பட்ட பெருமைக்குரியது.

**கதை**

தகாத சொற்களைக் கேட்கக்கூடாது என்பதால் தனது காதுகளைப் பொத்திக் கொள்கின்றது ஒரு குரங்கு. தீயவற்றைப் பார்க்கக் கூடாது என்று தனது கண்களை மூடிக்கொள்கின்றது மற்றொரு குரங்கு. தீய சொற்களைப் பேசக்கூடாது என்று தனது வாயை மூடிக் கொள்கிறது மூன்றாவது குரங்கு. இவ்வாறான குரங்குப் பொம்மைகளை அலுவலகங்கள் பலதிலும் காட்சிப்படுத்தியிருப்பார்கள். இந்த 3 குரங்குப் பொம்மைகளையும்போலதான் இந்தப் படத்தின் கதையும் இருக்கிறது.

தேர்தல் ஒன்று நடக்கவுள்ளது. அதற்காக ஓய்வில்லாமல் பரப்புரையில் ஈடுபடுகிறார் கோடீஸ்வரத் தொழிலதிபரான செர்வெத். தேர்தல் நெருங்கிய சமயத்தில் வீதியில் அவர் தனது காரைச் செலுத்திச் செல்லும் ஒரு சமயத்தில் அந்தக்கார் விபத்துக்குள்ளாகிறது. இதனால் பொலிஸாரிடம் மாட்டிக் கொள்ளப் போகிறார் அவர். அன்று காரைச் செலுத்தவில்லை என்றாலும் அந்தக் குற்றத்தைச் செய்ததது தான்தான் என்று பொறுப்பேற்றுத் தனது முதலாளியைக் காப்பாற்ற வேண்டிய சூழ்நிலைக்குள்ளாகிறான் ஐயூப் என்ற அவருடைய கார் ஓட்டுநர்.

முடிவில் தனது முதலாளிக்காக அவன் சிறைத் தண்டனைக்கு உள்ளாகிறான். அவன் சிறைசென்ற கையோடு அவனது சொந்த விடயங்களில் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. அவனது வாழ்க்கையில் ஏகப்பட்ட சிக்கல்கள் ஏற்பட்டுவிடுகின்றன. அதற்குக் காரணம் செர்வத் என்ற அந்தப் பணக்காரன். யாரோ செய்த தவறுக்காகத் தான் இவ்வளவு காலமும் சிறைக்குள் மாட்டிக்கொண்டது தானே இவை எல்லாவற்றுக்கும் காரணம் எனக் குமுறுகிறான் ஐயூப்.




அவன் சிறையிலிருந்து விடுதலையாகி வீட்டுக்குத் திரும்பும்போது அவனது குடும்பச் சூழ்நிலை முற்றிலுமாக மாறித் தலைகீழாகியிருக்கிறது. வீட்டில் நடக்கின்ற தவறுகள் எதையும் அவனால் தடுக்கமுடியாது போக அந்த இயலாமை உணர்வு அவனை வாட்டுகிறது.

இவ்வாறிருக்க ஒரு நாள் இரவு அந்தப் பணக்காரன் செர்வெத் கொலை செய்யப்படுகிறார். ஐயூப் மற்றும் அவனது மகன் இஸ்மாயில் ஆகியோரின் மீது காவல்துறையின் பார்வை விழுகிறது. அதைத் தொடர்ந்து இருவரையும் காவல்துறையினர் கைது செய்து அழைத்துச் செல்கின்றனர்.

செர்வெத்தைக் கொலை செய்தது மகன் இஸ்மாயில்தான். ஆனால் அவன் சிறை செல்ல விரும்பவில்லை. சிறைவாசத்திலிருந்தும் இந்த வழக்கிலிருந்தும் தப்பவேண்டுமே என எண்ணுகிறான் ஐயூப். ஒருமுறை சிறைவாசம் அனுபவித்ததற்கே குடும்பம் பல சிக்கல்களில் மாட்டிக்கொண்டது. தான் மறுபடியும் சிறைக்குப் போனால் குடும்பத்தையும் குழந்தைகளையும் மறந்துவிடவேண்டியது தான் என நினைக்கிறான். அதற்குப் பதிலாக தேநீர்க் கடையோரம் படுத்துக்கிடக்கும் ஒரு வனைக் கண்டுபிடிக்கிறான். அவனையே சிறைக்கு அனுப்பத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்கிறான்.



**மனிதர்களின் மாற்றம்**

தான் மற்றவருக்காகச் சிறைசென்றதால் தனக்கு எவ்வளவு பிரச்சினைகள் நேர்ந்தன என்பதை நன்குணர்ந்த ஐயூப், தனக்கு ஒன்று என்றவுடன் இன்னொருவனைச் சிறைக்கு அனுப்பிவைக்கிறான். இப்படியாகச் சூழ்நிலை மனிதர்களை எப்படிப் புரட்டிப்போடுகிறது என்பதை இந்தத் திரைப்படம் சாதாரணமாகச் சொல்லிச் செல்கிறது.

தேவையற்ற பூதாகார காட்சிப்படுத்தல்களும் நாடகத்தனமும் இன்றிய காட்சியமைப்புகள் - ஒளிப்பதிவு கதையைத் திரையில் சரிவரக் காட்சிப்படுத்திப் படத்துக்குப் பலமளித்துள்ளது. ■

# அசாஞ்சே....

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)
ஆபத்தை ஏற்படுத்தி விட்டார் என்று அசாஞ்சே மீது அமெரிக்கச் சட்டம் பாய்ந்தது.


சுமார் 175 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கக் கூடிய குற்றங்கள் அவருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டன.

சுவீடனில் அவர் சம்மந்தப்பட்ட பழைய பாலியல் குற்றச்சாட்டுத் தொடர்பான வழக்கில் அவரைக் கைது செய்வதற்கு சர்வதேச பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

கைதாவதில் இருந்து தப்புவதற்காக 2012 ஆம் ஆண்டில் அசாஞ்சே லண்டனில் உள்ள ஈக்குவடோர் (Ecuador) நாட்டின் தூதரகத்தினுள் சென்று ஒளிந்து கொண்டு அரசியல் புகலிடம் கோரினார். பல ஆண்டுகள் தூதரகத்தின் உள்ளேயே வாழ்ந்த அவர் மனநிலை பாதிக்கப்பட்டிருந்தார். 2019 இல் அவருக்கு எதிரான பாலியல் வழக்கை சுவீடன் கைவிட்டதை அடுத்து தூதரகத்தை விட்டு வெளியே வந்தார். பின்னர் பிரிட்டிஷ் பொலிஸாரால் கைதுசெய்யப் பட்டு இன்றுவரை லண்டன் சிறை ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இன்றைய நீதிமன்றத் தீர்ப்பு அவர் பிணையில் வெளியே வர வழிவகுக்குமா என்பது இனிமேல்தான் தெரிய வரும்.

இதேவேளை, ஜூலியன் அசாஞ்சே அவர்களுக்கு அரசியல் புகலிடம் வழங் கத் தயார் என்று மெக்ஸிக்கோ அறிவித்திருக்கிறது. ■



# திருக்கணித பஞ்சாங்கத்தின் துல்லியக் கணிப்பு...!




**சோதிடர் எஸ். கமலநாதன்**
*மட்டக்களப்பு*

எமது முன்னோர்கள் சோதிடம் சம்பந்தமாகக் கூறிய மெஞ்ஞானம் எவ்வளவு துல்லியமான அறிவியல் உண்மைகள் என்பதைக் காலத்துக்குக் காலம் வான மண்டலத்தில் நிகழ்கின்ற அற்புதங்கள் பறை சாற்றுகின்றன.

நடந்து முடிந்த 2020ஆம் ஆண்டு மார்கழி மாதம் 21ஆம் திகதியன்று நிகழ்ந்த சனி - வியாழன் இணைவானது இதற்கு மேலும் வலுச் சேர்ப்பதாக அமைகிறது. வான் மண்டலத்தில் சூரியனைச் சுற்றி நீள்வட்டப் பாதையில் கிரகங்கள் பயணிக்கின்றன. இதில் பூமிக்கும் வியாழனுக்கும் இடையில் சுமார் 88.6கோடிக் கிலோ மீற்றர் தூரம் இருக்கிறது. பூமிக்கும் சனிக்கும் இடையில் 162 கோடிக் கிலோ மீற்றர் தூரமுள்ளது. சனிக்கும் வியாழனுக்கும் இடையில் 74 கிலோ மீற்றரையும்விட அதிக தூரமுள்ளது. வான மண்டலத்தில் சந்திரன், செவ்வாய், வியாழன், வெள்ளி ஆகிய கிரகங்களை எளிதில் காண முடியும். ஆனால் வியாழனுக்கு அப்பால் 74 கோடி கிலோ மீற்றர்களுக்கும் அதிக தூரத்தில் உள்ள சனியைப் பூமியிலுள்ள எம்மால் பார்க்க முடிவதில்லை. கிரகங்கள் நேர் கோட்டில் சஞ்சரிக்கும் காலத்தில் பூமியிலிருந்து பார்க்கும் எங்களுக்கு அவை இணைந்திருப்பதாகத் தோற்றமளிக்கும்.

**சனி - வியாழன் இணைப்பு அறிவிப்பு**

கடந்த மார்கழியில் நிகழ்ந்த சனி - வியாழன் இணைவை அன்று மாலை 5.30 மணிக்கும் 7.30 மணிக்கும் இடையில் பூமியிலுள்ளவர்களால் பார்வையிட முடியும் என்று ஆர்தர் சி கிளாக் என்ற விண்வெளி ஆய்வு மையம் தெரிவித்திருந்தது. இந்தச் செய்தியை - காட்சியை உள்ளூர் வானொலிகள், தொலைக்காட்சி ஊடகங்கள் பலவும் வெளியிட்டிருந்தன.

இந்த நிகழ்வு 20 வருடங்களுக்கு ஒரு முறை நிகழும் அரிய வாய்ப்பு என்றும் சனிக்கும் வியாழனுக்கும் இடையில் 400 மில்லியன் மைல் இடைவெளியில் இதைக் காண முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. இதற்கு முதலில் இப்படியொரு நிகழ்வு 2000ஆம் ஆண்டு மே மாதத்தில் நிகழ்ந்தது என்றும் சர்வதேச விண்வெளி ஆய்வாளர்கள் தெரிவித்தனர். அதன் பின்னர் தற்போது 2020ஆம் ஆண்டு மார்கழியில் நிகழ்ந்த இந்த அற்புதக் காட்சியை நீங்களும் கண்டிருப்பீர்கள்.

**துல்லியமற்ற வாக்கிய பஞ்சாங்கக் கணிப்பு**

இந்த நிகழ்வு எம்மத்தியில் பாவனையிலுள்ள இரண்டு வகைப் பஞ்சாங்களின் கணிப்பின் துல்லியத்தை வெளிப்படுத்திச் சென்றுள்ளது. அதாவது 2020 மார்கழி 21ஆம் திகதியன்று சனி தனுசு ராசியிலும் வியாழன் மகர ராசியிலும் உள்ளது என்கிறது வாக்கிய பஞ்சாங்கக் கணிப்பு. வாக்கிய பஞ்சாங்கங்களின் கணிப்பு இவ்வாறிருக்கும்போது நாம் கண்ணால் கண்ட இந்த அற்புத இணைவு எப்படிச் சாத்தியமானது...? இருவேறு ராசிகளில் நிற்கும் கிரகங்கள் எவ்வாறு இணைய முடியும்...? சிந்தியுங்கள்...! ஆனால் திருக்கணித பஞ்சாங்கக் கணிப்பின்படி 2020 மார்கழி 21ஆம் திகதியன்று மேற்குறித்த நேரத்தில் சனியும் வியாழனும் மகர ராசியில் சஞ்சரிப்பது குறித்தும், சனி ஆறு பாகை 24 கலையிலும் வியாழன் 6 பாகை 23 கலையிலும் சஞ்சரிப்பது குறித்தும் குறிப்பிடப்பட்டிருப்பதை அவதானிக்க முடியும்.

**பலவித பஞ்சாங்கங்கள்**

இலங்கையில் தமிழர்கள் மத்தியில் வாக்கியம், திருக்கணிதம், மாரியம்மன் சுத்த திருக்கணிதம் என 3 பஞ்சாங்கங்களும் சிங்களவர்கள் மத்தியில் ஏப்பா, ஆர்.எச். வில்லியம்ஸ், லங்கா என 3 பஞ்சாங்கங்களும் பயன்பாட்டில் உள்ளன. இதில் வாக்கியப் பஞ்சாங்கத்தைத் தவிர ஏனைய 5 பஞ்சாங்கங்களும் ஒரே விதமான கணிப்பு முறையையே கொண்டுள்ளன. அத்தோடு இந்தியாவிலிருந்து வெளிவரும் இந்திய அரசினர் பஞ்சாங்கம், லாகிரி பஞ்சாங்கம், கும்பகோண மடத்துப் பஞ்சாங்கம், பாரத் கணித பஞ்சாங்கம், கே.பி பஞ்சாங்கம், ராசி சுத்த திருக்கணித பஞ்சாங்கம் ஆகிய இன்னும் பல பஞ்சாங்கங்களும் பிரிட்டனில் இருந்து வெளியாகும் ரபேல் எபமேரீஸ், அமெரிக்கன் நாட்டிக்கல் அல்மனக் போன்ற பிரபல்யமான பஞ்சாங்கங்களின் கணிப்பின்படி கிரக மாற்றங்கள் மற்றும் இரத பஞ்சாங்க விடயங்கள் திருக்கணித பஞ்சாங்கத்துடன் சரி ஒத்திருப்பதை நாம் அவதானிக்கலாம். இதை நாசாபோன்ற சர்வதேச விண்வெளி ஆய்வு மையங்களும் உறுதிப்படுத்துகின்றன.

> “நாம் ஜாதகத்தைக் கணிப்பதற்குப் பயன்படுத்துகின்ற பஞ்சாங்கத்தின் கணிப்பு சரியானதும் துல்லிய மானதுமாக இருப்பது அவசியம்.”


**பிறப்பைக் கணிக்கும் பஞ்சாங்கத்தில் கவனம் தேவை**

பிரம்ம ரகசியம் எனும் மனிதப் பிறப்பில் 85,90 வீதமான பிறப்பு இரகசியங்களைப் பிறப்பு ஜாதகத்தின் மூலம் நாம் அறிந்துகொள்கின்றோம். இந்தப் பிறப்பு ஜாதகத்தைக் கணித்துக் கொள்வதற்குப் பஞ்சாங்கங்களைப் பயன்படுத்துகின்றோம்.

இவ்வாறாக நாம் ஜாதகத்தைக் கணிப்பதற்குப் பயன்படுத்துகின்ற பஞ்சாங்கத்தின் கணிப்பு சரியானதும் துல்லியமானதுமாக இருப்பது அவசியம். அவ்வாறு இல்லாதவிடத்து எவ்வாறு நாம் ஜாதகத்தின் மூலம் நமது பிறப்பு உண்மைகளை அறிந்துகொள்ள முடியும்? பஞ்சாங்கங்களின் கணிப்பு விடயம் அதன் துல்லியம் பற்றிய ஆய்வு இல்லாத சோதிடர்கள் ஏராளமாக எம் மத்தியில் உள்ளனர்.

இலங்கையில் ஏராளம் பஞ்சாங்கங்கள் வெளிவருகின்றன. இவற்றின் கணிப்பின் உண்மைத் தன்மை குறித்து அறிந்து செயற்படுவது சிறந்தது. சர்வதேச ரீதியில் திருக்கணித முறையிலான பஞ்சாங்கங்களே கணிப்பில் துல்லியமானவை. அதிலும் சோதிட பேராசிரியர் சோதிட மார்த்தாண்டர் கே.எஸ் கிருஷ்ணமூர்த்தி கண்டுபிடித்த அயனாம்ஷத்தின் அடிப்படையில் வெளிவரும் கிருஷ்ணமூர்த்தி பத்ததி மூலமான கே.பி. பஞ்சாங்கமானது தற்காலத்தில் சிறந்ததாகும். ■

## மரத்தில் செயற்கைக்கோள்...!



இந்த 21ஆம் நூற்றாண்டில் விண்கலன்கள் மற்றும் செயற்கைக்கோள்களை நாடுகள் பலவும் போட்டி போட்டுக்கொண்டு ஏவி வருகின்றன. விண்ணில் செலுத்தப்படுகின்ற இந்த இயந்திர சாதனங்கள் விபத்துக்குள்ளாவதாலும் அவை வெளியிடுகின்ற கழிவாலும் விண்வெளியில் குப்பைகள் சேர்வது அதிகரித்துள்ளது. விண்வெளியில் மிதக்கின்ற இந்தக் குப்பைகளால் பூமியின் சுற்றுச் சூழல் பாதிக்கப்படுவதுபோக விண்ணில் ஏவப்படுகின்ற விண்பொருள்கள் விபத்துக்குள்ளாகும் வாய்ப்புகளும் அதிகரித்துள்ளன என்று ஆராய்ச்சியாளர்கள் எச்சரிக்கின்றனர்.

இதனால் விண்வெளிப் பயணங்கள் மாத்திரமன்றித் தகவல் தொடர்பு, தொலைக்காட்சி, வழி செலுத்தல் மற்றும் வானிலை முன்னறிவிப்புக்குப் பயன்படுத்தப்படுகின்ற செயற்கைக்கோள்களுக்கும் பாதிப்பு ஏற்படலாம் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. விண்வெளிக் குப்பைகளை அகற்றவும் குறைக்கவும் விண்வெளி வல்லுநர்களும் ஆராய்ச்சியாளர்களும் பல்வேறு வழிகளை ஆராய்ந்து வருகின்றனர்.

விண்வெளிக் குப்பைகள் விண்ணில் மணிக்கு 35ஆயிரம் கிலோ மீற்றர் வேகத்தில் பயணிப்பதால், அவை தாக்கும் எந்தவொரு பொருளும் பெரும் சேதத்துக்கு முகம் கொடுக்கும். எனவே இதற்குத் தீர்வு காண்பதற்கு ஜப்பானைச் சேர்ந்த நிறுவனம் ஒன்றும் கியோட்டோ பல்கலைக்கழகமும் இணைந்து மரத்தால் செய்யப்பட்ட செயற்கைக்கோள்களைத் தயாரிப்பதற்குத் தயாராகியுள்ளன.

இந்தச் செயற்கைக் கோள்கள் உலகில் மரத்தால் செய்யப்படுகின்ற முதலாவது தயாரிப்புகள் என்றும் இவற்றை 2023ஆம் ஆண்டுக்குள் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த மரத்தாலான செயற்கைக் கோள்கள் வெடித்தாலும், அவை தீங்கு விளைவிக்கும் பொருள்களையோ கழிவுகளையோ வெளியேற்றாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. விண்வெளியில் ஒவ்வோர் ஆண்டும், செயற்கைக் கோள்கள் செலுத்தப்படுவது அதிகரிப்பதும் அதனால் விண்வெளிக் குப்பைகள் என அழைக்கப்படும் விண்வெளிக் கழிவுகள் அதிகரிப்பதும் பெரும் பிரச்சினையே...!

# பாலைவனத்து ஊற்றடி நீ எனக்கு!

2

● கலியுக பித்தன்

**இளசுகளைக் கிறங்க வைக்கும் புதிய காதல் தொடர்**

வருண், மாநிறம், அஞ்சரை அடி உயர்ந்து, விரிந்த உடலுக்குச் சொந்தமானவன். நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவன். எல்லாத்திலையும் அவரேஜா இருக்கிற வருண் படிப்பிலையும் அதே மாதிரிதான். அவன் எல்லா விசயத்துலையும் அவரேஜா இருக்கிறதால ஒரு ஆல்ரவுன்டரா இருந்தான்.

"டேய் வருண் எழும்பு. நேரம் ஆறரையாச்சு. கம்பசுக்குப் போகேலையோ..."

"கொஞ்சம் தூங்கிட்டு ஏழு மணிக்கு எழும்பிறன் பா..."

வருண் சின்ன வயசா இருக்கும் போதே அவங்க அம்மா இறந்து போய்விட்டா. அவனுக்கு அம்மா, அப்பா, சகோதரம், சொந்த பந்தங்கள் எல்லாமே அவனோட அப்பா தான். அவருக்கும் இவன்தான் எல்லாமே.

வருண், வேகம் வேகமாக எழும்பி தன்னோட வேலைகளை எல்லாம் முடிச்சு கொண்டு கம்பசுக்குப் போக ரெடி ஆனான்.

"யெப்பா தம்பி! என்னோட சைக்கிள் காத்து போயிட்டுதுபா. என்னை ஸ்கூல் வரைக்கும் விட்டுட்டு போறியா? "

வருணோட அப்பா ஸ்கூல்ல டீச்சர். எப்பவுமே நெற்றியில் ஒரு பட்டை, சுருக்கங்கள் இல்லாத , தினம் சவரம் செய்யப்பட்ட முகம், வெள்ளைகள் ஆங்காங்கே எட்டி பார்க்கும் தலைமுடி, அலட்டிக் கொள்ளாத நடை, மிருதுவான பேச்சு, சாந்தமான பார்வை, ஆத்மார்த்த மான செயல்கள், நேர்த்தியான உடை இது அவரோட அடையாளங்கள்.

"சரிப்பா... வாங்க "

வருண் அப்பாவை ஸ்கூல் அடில இறக்கி விட்டுட்டுப் போறான்.

இவன் போறதுக்கு முதலே மிச்ச நாலு பேரும் அங்க நிக்கிறாங்கள்.

"வாடா மச்சி, என்ன இன்டைக்கு லேட் ஆயிட்டு "

"அப்பாவை ஸ்கூல் ல இறக்கிட்டு வந்தன்டா" கார்த்திக் ஓட கேள்விக்குப் பதில் சொல்லிட்டுத் தன்னுடைய பார்வையை ரித்து மேல பரப்பினான் வருண்.

அவள் ஏதோ ஒரு குழப்பத்தில் இருப்பது அவனுக்கு விளங்க, "என்ன ஜெனி, உங்க ப்ரண்ட்க்கு என்னாச்சு? அப்செட்டாவே இருக்காங்க போல" குறும்பாகக் கேட்டான்.

அங்க போய் கேக்கோணும்" நக்கலா கேட்டான் ஜெய்.

"வாய மூடுடா குரங்கு" ரித்து உரிமையோட அதட்ட ஜெய் சிரிச்சு கொண்டே "சரி சரி, இங்க ஏறி விழாம அதான் ஐயா கேக்கிறா ரெல்ல அங்க உங்கட பஞ்சாயத்தை வைக்கலாம்" சொல்லி கொண்டே பைக் மேல இருந்த தன்னோட பாக்கை எடுத்து தோளில குறுக்கா போட்டாள் ரித்து...

"எனக்கும் சரியா பசிக்குது... வாங்க வாங்க சாப்பிடுவம்" வெள்ளந்தியா பதில் சொன்னான் கார்த்திக்.

அஞ்சு பேரும் கன்டீனை நோக்கி நடந்து போனார்கள்.

வருண் கேட்ட கேள்விக்கு ரித்து விடம் இருந்து எந்தப் பதிலும் வரவில்லை. அவனுக்கு அது மனசுக்குள் பெரிய உறுத்தலாகவே இருந்தது.

"ராத்திரி பேசும் போது ஒழுங்கா பேசிப்போட்டு தானே வைச்சாள். இப்போ என்ன நடந்திட்டுது." அவளின் நடத்தைகளை வைத்து கொண்டு அவனால் எந்த முடிவுக்கும் வர முடியவில்லை.

மீண்டும் அவன் மனதுக்குள் நேற்று மாலை நடந்த சம்பவங்கள் ஓடத் தொடங்கின.


"கார்த்திக் விளையாட்டா தான் சொன்னவனா?"

"ரித்து என்னட்ட ஏதோ ஒன்டை சொல்ல தயங்கிறாளா?"

"எதுக்கு என்னட்ட சொல்ல தயங்கோனும்? நானும் ப்ரண்ட்தானே?"

"அது என்ன விஷயமா இருக்கும்?"

தனக்குள் எவ்வளவு தான் ஆழமாய் போனாலும் விடை கிடைக்காத வினாக்களோடு போராடி கொண்டிருந்தான் வருண்.



"ஏன் சேர், நீங்க போனலதான் அவங்களோட கதைப்பீங்களோ" ஜெனி கேட்க வருண் வாய்க்குள்ள சிரிச்சு கொண்டே, "ஏய் ரித்து என்னாச்சுடி? ஏன் ஒரு மாதிரியாவே இருக்கிறாய்?" ரித்துக்கு கிட்டவா போய்க் கேட்டான்.

"மிஸ்டர் வருண் இதை நீங்க இதுல நின்டே கேட்டிருக்கலாமே, எதுக்கு பதிலை சொல்லுமா" சொல்லி சமாளிக்கிறான் ஜெய்.

"அழுவாத டா ஜெய், யாரு நம்ம ப்ரண்ட் ரித்துதானே உன்னை திட்டினா, அதுக்கு எதுக்கு பா அழுற" ஜெனி கலாய்க்க மற்றவர்கள் எல்லாம் விழுந்து விழுந்து சித்தார்கள்.

"ச்சோ... போதும்பா.... எனக்கு சரியா பசிக்குது வாங்க சாப்பிட்டு

"டேய் வாடா..." கார்த்திக்கின் அழைப்போடு அவன் நினைவுக்கு வந்தவனாய் மெதுவாக ஓடி சென்று அவர்களோடு இணைந்து கொண்டான். அவன் மனம் மட்டும் ஏனோ வேறு எங்கோ சஞ்சாரித்து கொண்டிருந்தது.

(தொடரும்....)

## கடந்த ஆண்டைக் கலக்கிய புயல்கள்...!

நெல்லை விதைத்துவிட்டு மழையில்லை... மழையில்லை என்றிருந்தபோது நிவர், புரவி என்று அடுத்தடுத்து வந்த தாழமுக்கப் புயல்களால் பெருமளவு மழைகொட்டித் தீர்த்தது. பின்னர் காலம் தவறினாலும் பருவமழை பெய்கிறது. இதனால் நிலத்தடி நீர் தேங்கிமுடிய நிலம் சேறும் சகதியுமாக மாறத் தொடங்கியிருக்கிறது. பல இடங்களில் குளங்கள் வான் பாய்கின்றன. தை பிறந்தும் மழை தொடர்ந்த வண்ணமேயிருக்கிறது.

இந்த நிலையில் அண்மைய சில ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் 2020ஆம் ஆண்டில் அதிகளவில் புயல்கள் உருவாகியுள்ளமை தெரியவந்திருக்கிறது. கடந்த வருடத்தில் இந்து சமுத்திரத்தில் 5 புயல்கள் உருவாகியுள்ளன. இதில் அம்பன், காத்தி, நிசர்கா, ஆகிய புயல்கள் இந்தியாவைத் தாக்கினவே தவிர இலங்கையில் இவற்றால் எவ்வித பாதிப்புகளும் ஏற்படவில்லை. நிவர் புயல் இந்தியாவைத் தாக்கியிருந்தாலும் குறிப்பிடத்தக்க மழைவீழ்ச்சியும் பாதிப்பும் இலங்கைக்கும் ஏற்பட்டது. இறுதியாகப் புரவிப் புயலால் இலங்கைக்கு அதிகளவு மழைவீழ்ச்சியும் பாதிப்புகளும் ஏற்பட்டன.

அம்பான் புயலால் மேற்கு வங்கத்தில் 90 பேர் இறந்தனர். 4 ஆயிரம் கால்நடைகளும் இறந்தன. நிவர் புயலாலும் புரவிப் புயலாலும் தமிழகத்தில் 21 பேர் உயிரிழந்தனர். 10ஆயிரத்துக்கு மேற்பட்ட கால்நடைகள் இறந்தன. எது எப்படியிருப்பினும் கடந்த ஆண்டைக் கலக்கியது கொரோனா மட்டுமல்ல இந்து சமுத்திரத்தில் தோன்றிய இந்த ஐந்து புயல்களும்கூடத்தான்...!

# பரீட்சையில் வினாவான பரியேறும் பெருமாள்...!


2018ஆம் ஆண்டில் தென்னிந்தியத் திரைப்பட இயக்குநர் மாரி செல்வராஜ் இயக்கி பா.ரஞ்சித்தால் தயாரிக்கப்பட்டு, கதிர், ஆனந்தி ஆகியோர் நடிப்பில் வெளியாகிய திரைப்படம் பரியேறும் பெருமாள். அந்தத் திரைப்படம் பற்றிய கேள்வி ஒன்று இந்தியாவின் தமிழ்நாடு அரச பணியாளர் தேர்வாணையகத்தால் நடத்தப்படுகின்ற பரீட்சை ஒன்றில் இடம்பெற்றது.

அரச பணியாளர் வெற்றிடங்களை நிரப்பும் வகையில் நடத்தப்பட்ட குறித்த பரீட்சையில் 'தலைசிறந்த படைப்பான 'பரியேறும் பெருமாள்' என்ற தமிழ்த் திரைப்படம் பற்றிய விமர்சனம் குறித்த கீழ்க்காணும் கூற்றுகளில் சரியானவற்றைத் தெரிவு செய்யவும்' என்று கூறி ஏ.பி.சி.




ஆகிய சிறிய ஆங்கில எழுத்துகளின் தெரிவாக 3 விடைகளும், (ஏ - இந்தப் படம் சாதியக் கட்டமைப்பின் கொடிய விளைவுகளைக் காட்டுகிறது. பி - இந்தப் படம் மிகச் சிறந்த படம் என்ற வரிசையில் பிலிம்பேர் விருதைப் பெற்றது. சி - இந்தப் படம் திரு.மாரி செல்வராஜால் இயக்கப்பட்டு நீலம் தயாரிப்புக் குழுமத்தால் வெளியிடப்பட்டது) அதன் கீழே மிகச் சரியான விடைகள் எவை என்கிற தெரிவும் (ஆங்கில எழுத்து ஏ மட்டும், ஏ மற்றும் பி மற்றும் சி, ஏ மற்றும் பி, சி மட்டும், விடை தெரியவில்லை எனப் பதில்களும் வழங்கப்பட்டிருந்தன.

பரீட்சை ஒன்றில் பரியேறும் பெருமாள் திரைப்படம் கேள்வியாக உள்வாங்கப்பட்டமை குறித்து கருத்துத் தெரிவித்த அந்தத் திரைப்படத்தின் இயக்குநர் மாரி செல்வராஜ், 'பரியேறும் பெருமாள் என்கிற படைப்பின் நோக்கம் முழுமையடைந்தது. இது மானுட சமூகத்தின் பிரதி' என்று தனது கீச்சகப் பக்கத்தில் பதிவு ஒன்றையும் இட்டார்.


(b) It won the Film Fare Award under the 'Best film' category

(c) It was a movie directed by Thiru Mari Selvaraj and produced by Neelam productions.

(A) (a) only (B) (a) and (b) only

(C) (a), (b) and (c) . (D) (c) only

(E) Answer not known

தலைசிறந்த படைப்பான "பரியேறும் பெருமாள்" என்ற தமிழ் திரைபடம் பற்றிய விமர்சனம் குறித்த கீழ்காணும் கூற்றுகளில்/கூற்றில் சரியானவற்றை தேர்வு செய்யவும்

(a) இப்படம் சாதிய கட்டமைப்பின் கொடிய விளைவுகளை சுட்டிக்காட்டுகிறது

(b) இப்படம் 'மிகச்சிறந்த படம்' என்ற வரிசையில் பிலிம்பேர் விருது பெற்றது

(c) இப்படம் திரு. மாரி செல்வராஜால் இயக்கப்பட்டு. நீலம் தயாரிப்பு குழுமத்தால் வெளியிடப்பட்டது

(A) (a) மட்டும் (B) (a) மற்றும் (b) மட்டும்

(C) (a), (b) மற்றும் (c) (D) (c) மட்டும்

(E) விடை தெரியவில்லை

# கரும்புச் சாற்றுப் பொங்கல்...!




பொங்கல் பண்டிகையையொட்டிய உணவுகள், பலகாரங்கள் என ஈழத்தவர் வீடுகளில் உணவு வகைகள் நிறைந்து வழிவது வழமை. உறவினர், நண்பர்களின் வீட்டுக்குச் சென்று பொங்கலன்று உணவு சுவைத்து மகிழ்வது தமிழர் தம் பண்பாடும்கூட.

அந்த வகையில் நெல்லை அறுவடை செய்த உழவர்கள் அதில் பொங்கல் செய்து கதிரவனுக்குப் படைப்பர். பின்னர் அதைப் பகிர்ந்துண்பர். உறவினர், ஊரவர், நண்பர்கள் இணைகின்ற இந்தப் பொங்கல் பண்டிகையில் வீட்டுக்கு வருகின்றவர்களுக்குப் பிடித்தமான வித்தியாசமான சுவையுணவுகளைச் செய்ய விரும்புவோருக்கு இந்தக் கரும்புச் சாற்றுப் பொங்கல் ஏற்றதாக அமையும். பொங்கலையொட்டிய காலத்தில் கடைத் தெருக்களில் கரும்பும் இலகுவாகக் கிடைத்துவிடுவதால் இந்தக் கரும்பும் பொங்கலை ஒருதடவை செய்து சுவைத்துத்தான் பார்ப்போமே...


**என்னென்ன பொருள்கள் தேவை....?**

கரும்புச்சாறு - 500 மில்லி லீற்றர் அளவு, சவ்வரிசி - 150 கிராம், தேங்காய்ப் பால் - 200 மில்லி லீற்றர், முந்திரி - 20, உலர்திராட்சை - 20, பாதாம் பருப்பு - 20, ஏலக்காய் - 4 (தூளாக்கிக் கொள்ளுங்கள்), நெய் - 75 மில்லி லீற்றர் அளவு, பயத்தம்பருப்பு - 50 கிராம்.

**எப்படிச் செய்வது...?**

சட்டி ஒன்றில் 2 தேக்கரண்டியளவு நெய்யை விட்டு அதில் சவ்வரிசியைப் போட்டு வறுத்து எடுத்துக்கொள்ளுங்கள். பின்னர் அதே சட்டியில் பயத்தம் பருப்பைப் போட்டு வறுங்கள். அது பொன்னிறமாக வரும்வரை வறுத்துப் பின்னர் எடுங்கள். பின்னர் ஒரு டீஸ்பூன் அளவில் .நெய்விட்டு உடைத்த முந்திரி, உலர்திராட்சை, உடைத்த பாதாம் பருப்பு ஆகியவற்றைச் சேர்த்து வறுத்து எடுத்துக்கொள்ளுங்கள். பின்னர் பானை ஒன்றை அடுப்பில் வைத்து அதில் பால், கரும்புச்சாறு ஆகியவற்றைச் சேர்த்துக் கொதிக்க விடுங்கள். நன்கு கொதித்ததும் வறுத்து வைத்துள்ள பயத்தம் பருப்பையும் சவ்வரிசியையும் சேர்த்து நன்கு கிளறிவிட்டுத் தீயைச் சற்றுக் குறைத்துவிட்டுப் பானையை மூடிக் கொள்ளுங்கள்.

கிட்டத்தட்ட ஏழு நிமிடங்கள் ஆனதும் வறுத்து வைத்துள்ள முந்திரி, பாதாம், திராட்சை, ஏலக்காய்ப் பொடி ஆகியவற்றை அதனுடன் கலந்து கொள்ளுங்கள். மீதமுள்ள நெய்யையும் அதனுள் விட்டு மூடி வேகவைத்து இறக்குங்கள். சுவையான கரும்புச்சாறுச் சைவ்வரிசிப் பொங்கல் தயார். கற்கண்டு அல்லது சர்க்கரை அல்லது சீனி சேர்த்துச் செய்யும் வழமையான பொங்கலைவிடக் கரும்புச்சாறில் நீங்கள் பொங்கியெடுத்த இந்தப் பொங்கல் அதிக சுவையுடன் இருப்பதை உண்டுணருங்கள்.



# உங்கள் அழகுக்குத் தக்காளி!

தக்காளி பார்க்க எத்தனை அழகா இருக்கிறதோ அத்தனை ஆரோக்கிய மற்றும் அழகுக்கான கூறுகளைத் தனது குண்டு உடம்பிற்குள் ஒளித்து வைத்திருக்கிறது. தக்காளியில் இருக்கும் லைகோ பீன் உடல் நலத்திற்கு மிகவும் நன்மையளிக்கக் கூடியது. அதே லைகோபின் உங்கள் சருமம் முதிர்ச்சியடையாமல் காக்கிறது.

தக்காளியில் உள்ள புரதம், மினரல் மற்றும் நார்ச்சத்துக்கள் சரும மற்றும் கூந்தல் அழகிற்கு அவசியாமனதாகிறது. தக்காளியை எப்படி உங்கள் அழகை மேம்படுத்த பயன்படுத்தலாம் என பார்க்கலாம்.

சாதாரணமாக சருமத்தின் வைட்டமின் குறைவினால் ஏற்படும் சுருக்கம், அதோடு மிகவும் வெயிலில் அலைவ தால் ஏற்படும் சருமப் பிரச்சனைகளையும் தக்காளி தீர்க்கிறது என்று பரிந்துரைக்கப்படுகின்றது. சருமம் இளமையாக இருப்பதற்கு உதவுகிறது. சூரிய ஒளியினால் ஏற்படும் தாக்குதல்களிலிருந்தும் சருமத்தைக் காக்கிறது.

சருமத்துளைகள் சுருங்கும் சிலருக்கு முகத்தில் மேடு பள்ளங்கள் அதிகம் இருக்கும். இது ஒருவரின் முகத்தை மிகவும் அசிங்க மாக வெளிக்காட்டும். இதனைத் தவிர்க்க தினமும் தக்காளியை துண்டாக்கி முகத்தில் தேய்த்து 10 நிமிடம் ஊற வைத்து, பின் கழுவ வேண்டும். இதனால் விரிவடைந்த சருமத் துளைகள் சுருங்கும். இப்படி தக்காளியை உங்கள் சருமத்தின் பொலிவை அதிகரிக்க பலவகைகளில் பயன்படுத்தலாம்.



# அற்றவைகளால் நிரம்பியவள்...!

■ மாதவி

பெண்கள் பற்றிய கதைகளால் பின்னப்பட்ட நாவல் அற்றவைகளால் நிரம்பியவள்! பிரியா விஜயராகவன் என்கிற பெண் எழுத்தாளரால் (2018இல்) எழுதப்பட்டது. பெண்ணைப் பொருள் அல்லது விநோதம் என்று ஆண்கள் கட்டமைத்து வைத்திருப்பதைக் கேள்விக்குள்ளாக்குகிறது. நாவலின் பிரதான பாத்திரம் அஞ்சனா. அஞ்சனா ஒரு மருத்துவர். நாவலாசிரியரும் மருத்துவர். இதில் ஐம்பதுக்கும் கூடுதலான பெண்கள் பற்றிய கதைகள் பதிவாகியுள்ளன.

கடின உழைப்பாளியான அஞ்சனாவின் பாட்டி, மகளுக்காக உருகும் தாய், தோழிகள், அவசர சிகிச்சைப் பிரிவு ஊழியர்கள், ஆபிரிக்காவின் மடகஸ்கார் தீவுக்கு அருகேயுள்ள செஷல்ஸ் தீவில் அஞ்சனா குடியிருக்கும் வீட்டு உரிமையாளர் ஜெனிஸ், மலையுச்சியில் பாறையைக் குடைந்து வீடு கட்டியிருக்கும் மிராண்டா, போதைப் பிடியில் சிக்கி, சிதைக்கப்பட்டு, மீளத் துடிக்கும் செஷல்ஸ் சகோதரிகளான க்ரிஸ்டியானா, ஃபெமினா, ஆதிக்கச் சாதியினரால் வன்புணரப்பட்ட கண்மணி, பாலியல் தொழிலாளியான நண்பி எஸ்.ஜே., லண்டனின் ஈஸ்ட் ஹாமின் இருண்ட குடியிருப்பில் தங்கியிருக்கும் பல்வேறு நாட்டுப் பெண்கள் எனப் பல பெண்களின் கதைகள் இருக்கின்றன.

**ஈழப் பெண்களின் அவலம்**

வெவ்வேறு நாட்டுப் பெண்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளை நுட்பத்துடன் பதிவுசெய்துள்ளார் ஆசிரியர். குறிப்பாக ஈழத்துத் தமிழ்ப் பெண்களான அமிர்தினியும் வான்மதியும் படையினரால் தொடர்ச்சியாக வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டதுடன், சித்திரவதைக்குள்ளான சம்பவங்களை இயன்றளவில் திறம்படக் கோர்த்துள்ளார். அவை கொடூரமானவை.

பெண்ணின் இயல்பான காமத்தை நசுக்குவதற்காகச் சோமாலியாவில் ஏழு வயதில் பெண்ணுறுப்பைச் சிதைக்கும் பாதகச் செயல் மதத்தின் பெயரால் நடைபெறுகிறது. இளம் பெண்ணான ரஷ்யாவைச் சேர்ந்த வோல்கா ஒரு மாபியா கும்பலால் பாலியல் தொழிலுக்காகக் கடத்தப்பட்டு விற்பனை செய்யப்படுவது மிகச் சாதாரணமாக நிகழ்கிறது. மத அடிப்படைவாதிகளின் கொடுமையால் பாதிக்கப்பட்டு லண்டனுக்குத் தப்பியோடுகின்ற ஈரானியப் பெண் ரோக்ஸானா உறவினர்களால் வெறுக்கப்படுகிறாள். பாகிஸ்தான் பெண்கள் ஃப்தீலா, சாய்னர் பிலிப்பினோ பெண்கள் யானா, வனேசர் லத்வியப் பெண் காஷகா என நாவலில் பதிவாகியிருக்கும் ஒவ்வொருவரின் வாழ்க்கையும் வலிகள் நிரம்பியவையாக இருக்கின்றன.

**அதிர்வை ஏற்படுத்தும் உடல்கள்**

மருத்துவமனையில் அஞ்சனாவின் கண்ணுக்கு முன்னால் நிகழ்ந்த இறந்த, சடலமாகிப்போன உடல்கள், உயிர்மாய்த்துக்கொண்ட பெண்ணின் உடலைக் கத்தியால் கிழித்துப் பரிசோதனை செய்வதைப் பார்க்கும் மருத்துவக் கல்லூரி மாணவர்கள், லண்டன் நகரில் சடலத்தைப் பதப்படுத்தும் பகுதியில் இறந்த உடலைக் கையாளும் முறை என உடல்களை முன்வைத்து உருவாக்கும் பேச்சுகள் முக்கியமானவை.

எழுத்தாளர் மருத்துவர் என்பதால் நாவலில் சித்தரிக்கப்படும் உடல்கள் பற்றிய விவரிப்புகள் அதிர்வை ஏற்படுத்துகின்றன. இந்தியா - தமிழ்நாட்டின் சிறு நகர மொன்றில்




ஆரம்பித்துச் சிறு சிறு தீவுக் கூட்டங்கள் எனப் பரந்து விரிந்து ஒட்டுமொத்த உலகையும் ஈர்த்துப் புனையப்பட்டுள்ளது. ஆபிரிக்காவின் மடகாஸ்கர் தீவின் அருகே, பூகோள வரைபடத்தில் புள்ளிகளாய் சிதறிக் கிடக்கும் செஷல்ஸ் தீவுக்கூட்டம் வரை நகர்கிறது. நாவலின் குவிமையம் பெண்ணுடல் மீதான வன்முறைகள் மற்றும் சாதியாதிக்கத்தின் அரசியலையே பேசுகிறது.

**காதல் செய்யும் ஆண்கள்**

மருத்துவம் படித்துக் கண்டம் விட்டுக் கண்டம் பயணிக்கும் அஞ்சனா எதிர்கொள்ளும் எல்லா நிகழ்வுகளும், உள்ளூரிலோ அல்லது குடும்ப மருத்துவமனையிலோ வேலை செய்யும் பாதுகாப்பான வட்டத்திற்குள் இல்லாமல் சென்னை, கேரளா, செஷல்ஸ் தீவுக்கூட்டம், லண்டன் என தொழில் நிமித்தம் பயணப்படுகிறாள். தன்னைக் கடந்து செல்லும் முன்பின் தெரியாத ஆண்கள் எல்லோரும் சொல்லிவைத்தாற் போல் படுக்கைக்கு அழைக்கும், ஆனால் விருப்பமில்லாவிட்டால் தொந்தரவு செய்யாத வித்தியாசமான கலாச்சாரப் பிண்ணனி கொண்டது செஷல்ஸ் தீவு.

உடல் சார்ந்த மருத்துவ தகவல்கள் ஏராளமானவை, மருத்துவத் துறைக்கேயுரிய தனிச் சொற்களுடன், எளிய மொழியில் சுவாரசியமாய் சொல்லிச் செல்கிறார் நாவலாசிரியர். கதையில் 10க்கும் மேற்பட்ட ஆண்கள் வருகிறார்கள். எல்லோரும் அஞ்சனாவைக் காதலிக்கிறார்கள். சிலர் குடிக்கிறார்கள். உழைக்கிறார்கள். தத்துவம் பேசுகிறார்கள். புரட்சி செய்கிறார்கள். கைதாகிறார்கள்.

> ஈழத்துத் தமிழ்ப் பெண்களான அமிர்தினியும் வாண்மதியும் படையினரால் தொடர்ச்சியாக வன்புணர்வுக்கு உள்ளாக் கப்பட்டதுடன், சித்திர வதைக்குள்ளான சம்பவங்களை இயன்றளவில் திறம் படக் கோர்த்துள்ளார். அவை கொடூரமானவை.

வெவ்வேறு கிராமங்கள், வெவ்வேறு நகரங்கள், வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்ட பெண்கள் கதைக்குள் இருக்கிறார்கள். ஒவ்வொருவருமே ஏதாவது ஒரு வகையில் துன்பங்களை அனுபவிக்கிறார்கள். சிலர் செத்துப் போகிறார்கள். பலர், வாழ வேண்டும் என்கிற விருப்பத்தில், துன்பங்களைக் கடந்து எழுந்து நிற்கிறார்கள். சிரிக்கிறார்கள். வாழ்வின் மகிழ்ச்சியைத் துய்க்கிறார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக, அடுத்தவர் மீதான அன்பை விட்டுவிடாதிருக்கிறார்கள்.

**எழுந்து நிற்கும் பெண் எழுத்து...**

நாவலைத் தாங்கி நிற்கும் பெண்கள், புவிப் பந்தின் வெவ்வேறு முனைகளில் இருந்து துரத்தியடிக்கப்பட்டு, அஞ்சனாவின் பாதையில் இணைந்து கொண்டவர்கள். சமூக ஒடுக்குமுறைக்கும், வன்புணர்வுகளுக்கும் தமது உடலைக் கொடுத்தவர்கள். எஞ்சி நிற்கும் நம்பிக்கையைப் பற்றிப் பிடித்துக் கொண்டிருப்பவர்கள். தேசம், மொழி, பண்பாடு எனப் பல வேறுபாடுகளைக் கொண்டிருந்தாலும், அவர்தம் துயர்மிகு பாடுகளும், வாழ்க்கை மீதான பிடிப்பும் சொல்லப்படுகிறது.

தன்னுடல் குறித்த பெண்ணெழுத்து, தமிழ் கூறும் நல்லுலகில் பெரிதாக வரவேற்புப் பெறுவதில்லை. மாறாக, அருவருப்பு சாயம் பூசி, ஒட்டு மொத்தமாய் புறக்கணிக்கப்படுகிறது.

பெண்ணுடல் குறித்த எழுத்தையும் இங்கு ஆண்களே வரையறுத்து வைத்துள்ளனர். அவர்களால் வகுக்கப்பட்ட எல்லையைத் தாண்டி, பெண்ணெழுத்துக்கள் பயணப்பட்டால் கொடூரமாக நசுக்கப்படுகின்றன. ஆனாலும் அவை அனைத்திலு மிருந்து எழுந்து நிற்கிறது இந்தப் பெண்ணின் எழுத்து...!

## தரைப் படையில் விவசாயப் பிரிவு!



இலங்கைத் தரைப்படையில் புதிதாக விவசாய மற்றும் கால்நடைப் பிரிவு ஒன்று வியாழக்கிழமை தொடங்கப்பட்டுள்ளது. அதிபர் கோட்டாபய ராஜபக்சவின் அறிவுறுத்தலுக்கு அமைய இந்தப் பிரிவு தொடங்கப்பட்டுள்ளதாக தரைப் படைத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார். தமிழீழ விடுதலைப் புலிகளுடனான போர் முடிவுக்கு வந்ததில் இருந்தே இலங்கைப் படையினர் உணவு விடுதிகளை நடத்துதல், சொகுசு விடுதிகளை நடத்துதல் மற்றும் விவசாயத்தில் ஈடுபடுதல் ஆகியவற்றை வடக்கு, கிழக்கின் பல பகுதிகளிலும் நாட்டின் வேறு சில பகுதிகளிலும் மேற்கொண்டு வந்தார்கள். இப்போது அதற்கெனத் தனியான பிரிவு ஒன்றே தரைப் படையில் உருவாக்கப்பட்டுள்ளது. நாட்டில் விவசாயத்திற்காக விவசாயத் திணைக்களம், கமநலத் திணைக்களம், விவசாய மற்றும் கால்நடை அமைப்பு என்பன இருக்கத்தக்க வகையில் படையணி ஒன்று அமைக்கப்படுவதற்கான தேவை என்ன என்பது குறித்து அதிபரிடமிருந்து எந்தவித விளக்கங்களும் இதுவரை மக்களுக்கு வழங்கப்படவில்லை.

# மாஸ்டருக்கும் ஈஸ்வரனுக்கும் போட்டி?

பொங்கலையொட்டி வெளியாகும் என்ற எதிர்பார்ப்புடன் இருக்கின்ற படங்கள் மாஸ்டர் மற்றும் ஈஸ்வரன். விஜய்யின் நடிப்பில் உருவாகியிருக்கின்ற மாஸ்டரும் சிம்புவின் நடிப்பில் உருவாகியிருக்கின்ற ஈஸ்வரனும் பொங்கலன்று போட்டி வெளியீடுகளாக வரும் என்று விடப்பட்ட அறிவிப்புகள் இரசிகர்கள் மத்தியில் அந்தப் படங்கள் மீது அதிக எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்தன. ஆனால், இப்போது பொங்கலுக்கு வருவதாக அறிவிக்கப்பட்ட 'மாஸ்டர்' படம் வெளியாவதில் குழப்பம் ஏற்பட்டுள்ளது. கொரோனாத் தொற்றுக் காரணமாக மூடப்பட்டிருந்த இந்தியத் திரையரங்குகளுக்கு இப்போது 50 சதவீத இருக்கைகளுக்கு மட்டுமே அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. ஆனால், தற்போது முழு இருக்கைகளிலும் இரசிகர்களை அமர்த்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டுவருகிறது. அரைவாசி இருக்கைகளில் மாத்திரம் இரசிகர்களை அமர்த்தினால், 'மாஸ்டர்' படத்தின் வியாபாரத் தொகையைப் பெற முடியாது என்பதால் அந்தப் பட வெளியீடு குறித்துப் படத்தரப்பினர் இதுவரை எவ்வித அறிவிப்பையும் விடாமல் இருக்கிறார்கள் என்கிறது ஒரு தரப்பு. ஆனால், ஈஸ்வரன் பொங்கலுக்கு நிச்சயம் வெளியாகும் என்று அதைத் தயாரித்த நிறுவனம் கூறுகிறது. தமது படத்தை இதுவரை 200 திரையரங்குகளில் திரையிடுவதற்கு ஒப்பந்தம் செய்துள்ளதாகவும் 100சதவீத இருக்கை அறிவிப்பை நிறுத்தினாலும் படத்தை வெளியிடத் தாம் தயார் என்கிறது தயாரிப்பு நிறுவனம். பொங்கலையொட்டிய திரையரங்க முன்பதிவுகள் இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் கிட்டத்தட்ட முடிவுக்கு வந்துள்ள நிலையில் 'மாஸ்டர்' பட வெளியீடு நிலை என்ன என்பது அரசின் இருக்கை குறித்த முழுமையும் இறுதியுமான அறிவிப்புக்குப் பிறகே தெரிய வரும் என்கிறார்கள் அந்தப் படம் பற்றிய விவரம் அறிந்தவர்கள்.








## ஆட்டம் 5

| | | | |
|---|---|---|---|
| இ | பு | ள் | பொ |
| ப் | ரு | க் | ரு |
| றை | கு | தி | ணி |
| த | ரு | கா | நீ |

மேலே பெட்டிகளில் தரப்பட்டுள்ள எழுத்துக்களைப் பயன்படுத்தி 2 முதல் 7 எழுத்துக்களில் உள்ள சொற்களைக் கண்டு பிடிக்க வேண்டும். குறைந்தது 18 சொற்களைக் கண்டு பிடிப்பவர்கள் வெற்றியாளர்கள். அதற்கு மேலும் கண்டுபிடிப்பவர்கள் சாதனையாளர்கள். முக்கியமான நிபந்தனை, உருவாக்கப்படும் சொற்கள் அனைத்தும் தூய தமிழ்ச் சொற்களாக இருந்தல் வேண்டும். பிற மொழிச் சொற்களைத் தமிழில் எழுதுவதாக இருத்தல் கூடாது. சொற்கள் அனைத்தும் 2 நிமிட நேரத்திற்குள் கண்டு பிடிக்கப்படுதல் வேண்டும். சரியான விடையை எழுதியனுப்புவர்களில் வெற்றியாளர்கள் ஐவரின் பெயர்கள் பத்திரிகையில் வெளியிடப்படும்.

## கார்ட்டூன்




## செம்மண் வாரமலருக்கு...

- கவிதை
- கட்டுரை
- சிறுகதை
- நெடுங்கதை
- குறுங்கதை
- நிமிடக்கதை
- நாவல்(தொடர்)
- சிரிப்புத் துணுக்குகள்

ஆகியவற்றை எழுத விரும்புபவர்கள் அவற்றைப் பின்வரும் முகவரிகளுக்கு அனுப்பி வைக்கலாம்!

அஞ்சல் /தபால்
செம்மண் வாரமலர்
551A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

மின்னஞ்சல்
shemman.redsoil@gmail.com
தொடர்புக்கு: 021 492 7781

எந்தவொரு ஆக்கத்துக்கும் தெளிவான முழுப் பெயர், முகவரி புனைபெயர் (இருந்தால்), தொடர்பு எண் என்பன குறிப்பிடப்பட வேண்டும். இந்த விவரங்கள் இல்லாத ஆக்கங்கள் எவ்வளவு தரமானவையாக இருந்தாலும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.

## இந்த வார சுடோக்கு - 24

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | | | 3 | 2 | | |
| 9 | | | | | | 1 | 7 | |
| 8 | 4 | | | 1 | | 6 | | 9 |
| | | | | 2 | 5 | | | |
| 2 | 6 | | | | | | 8 | 3 |
| | | | 7 | 6 | | | | |
| 1 | | 3 | | 7 | | | 2 | 4 |
| | 9 | 7 | | | | | | 6 |
| | | 8 | 4 | | | 9 | | |

இந்த சுடோக்கு விளையாட்டு தர்க்க ரீதியாக எண்களை ஒரொழுங்கில் அடுக்குவதற்கானது. நேராகவும் கிடையாகவும் 9 பெட்டிகளைக் கொண்டுள்ள இந்தச் சதுரத்தினுள் ஒவ்வொரு சிறிய பெட்டியினுள்ளும் 1 முதல் 9 வரையான ஒரு எண் இடப்பட வேண்டும். பெரிய பெட்டியின் கிடை மற்றும் நேர் வகிடுகளிலும் இரண்டாவது மற்றும் மூன்றாவது நிலைப் பெட்டிகளின் நேர் மற்றும் கிடை வகிடுகளிலும்கூட ஒரு எண் இரட்டிப்பாகக்கூடாது என்பதே விதி. முயற்சி செய்து பாருங்கள். சரியாக நிரப்பி விட்டீர்களானால் அதனை அப்படியே வெட்டி

**செம்மண்**
சுடோக்கு,
551 A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

என்னும் முகவரிக்கு, உங்கள் முழுப் பெயர், வயது, தபால் முகவரி, தொடர்பு எண் என்பவற்றுடன் அனுப்பி வையுங்கள். சரியாக எழுதி வெற்றிபெறும் ஒரு அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250 பரிசாக வழங்கப்படும். விடையும் வெற்றிபெற்றவரின் விவரங்களும் அடுத்தவார பத்திரிகையில் வெளியாகும். வெற்றிபெற்றவர் பரிசுத் தொகையை செம்மண் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கடந்த வாரம் வெளியாகிய சுடோக்கிற்கான விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 4 | 3 | 9 | 1 | 7 | 2 | 6 | 8 |
| 9 | 8 | 6 | 5 | 3 | 2 | 1 | 7 | 4 |
| 7 | 1 | 2 | 8 | 6 | 4 | 9 | 5 | 3 |
| 3 | 2 | 5 | 6 | 4 | 1 | 7 | 8 | 9 |
| 1 | 6 | 8 | 7 | 5 | 9 | 3 | 4 | 2 |
| 4 | 9 | 7 | 2 | 8 | 3 | 6 | 1 | 5 |
| 2 | 7 | 4 | 1 | 9 | 5 | 8 | 3 | 6 |
| 6 | 3 | 9 | 4 | 7 | 8 | 5 | 2 | 1 |
| 8 | 5 | 1 | 3 | 2 | 6 | 4 | 9 | 7 |

குறிப்பு:
கிறீன் மீடியா கவுஸ் நிறுவனத்தின் ஊழியர்கள் மற்றும் சக நிறுவன ஊழியர்கள் இப் போட்டியில் கலந்துகொள்ள முடியாது.

# அமெரிக்காவின் அவமானம்...!




பொன்வண்டு

நல்லதோர் அரசர் தனது நாட்டுக் குடிமக்களுக்கு நல்லறிவைப் புகட்டி அவர்களை நல்வழியில் ஒழுக வைக்கவே முற்படுவார். ஆனால், அமெரிக்காவின் அதிபர் அவ்வாறில்லை என்பதுதான் இப்போதைய பேசுபொருள். இன்னும் பத்துநாள்கள் வரையிலேயே தனது பதவிக்காலம் இருக்கும் நிலையில் தனது மக்களை - அதுவும் தன்மீது தீராத அன்புகொண்ட தனது ஆதரவாளர்களை வழிப்படுத்தத் தவறிவிட்டார் என்று அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் மீது அவதூறுகள் விழ ஆரம்பித்துவிட்டன. அந்த அவதூறுகளுக்குப் பொருத்தமானவராகவும் ட்ரம்ப் இருப்பதுதான் இங்கு கவலைக்குரிய விடயமாக இருக்கிறது. உலகின் வல்லரசு நாடு என்றும் பெரும் ஜனநாயக நாடு என்றும் போற்றப்படுகின்ற அமெரிக்காவின் நாடாளுமன்றம் சின்னாபின்னமாக்கப்பட்டமை அந்த நாட்டின் ஆட்சி அதிகாரத்தை மாத்திரமன்றி ஜனநாயகத்தையும் கேலிப் படுத்தியிருக்கிறது.

**நடந்தது என்ன...?**

2021ஆம் ஆண்டுக்கான புதிய அதிபரைத் தெரிவுசெய்வதற்காக அமெரிக்காவில் தேர்தல் நடந்தது தற்போதைய அதிபர் ட்ரம்ப் தோல்வியுற்றிருந்தார். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜோ பிடென் வெற்றிபெற்றிருந்தார். ஆனால் தனது தோல்வியை ஏற்க மறுக்கின்ற ட்ரம்ப், பிடெனின் வெற்றி மோசடி மிக்கது என்று கூறிவருகிறார். ஆனால், அதற்குரிய எந்தவொரு ஆதாரத்தையும் இதுவரை அவர் சமர்ப்பிக்கவில்லை. இந்த நிலையில் தேர்தலில் வெற்றியீட்டிய பிடெனை அதிபராக அதிகாரபூர்வமாக அறிவிப்பதற்குரிய ஏற்பாடுகளை அந்த நாட்டு நாடாளுமன்றம் செய்தது. அப்போது அந்த நாடாளுமன்றத்துக்குள் புகுந்த ட்ரம்ப் ஆதரவாளர்கள் அங்கு பெரும் கலகத்தை ஏற்படுத்தி நாடாளுமன்றைக் கலைத்துள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆளுக்கொரு திசையில் பதறியடித்து ஓடும் வகையில் இவர்கள் முன்னெடுத்த கலகத்தால் 4பேர் வரையில் இறந்துமுள்ளனர். கடந்த புதன்கிழமை நடந்த சம்பவம் இது. இதனால் ட்ரம்ப்பின் பதவிக்காலம் முடிவதற்கு இன்னமும் சொற்ப நாள்களே இருந்தாலும் அவரைப் பதவி நீக்க வேண்டும் என்று ஜனநாயகக் கட்சியினர் வலியுறுத்துகின்றனர். எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சிதான் இவ்வாறு வலியுறுத்துகிறது என்று பார்த்தால் ட்ரம்பின் சொந்தக் கட்சியினரும் இவ்வாறு கூற ஆரம்பித்துவிட்டனர். இதனால் ட்ரம்ப் அரசியலில் இருந்து ஒதுக்கப்படும் அளவுக்கு நிலமை மாறியுள்ளது.


**தேர்தலும் ஆட்சி அறிவிப்பும்**

கடந்த ஆண்டு கார்த்திகையில் நடந்தது அமெரிக்கத் தேர்தல். அங்கு நடக்கின்ற தேர்தலில் மக்கள் நேரடியாக அதிபரைத் தெரிவு செய்வதில்லை. அமெரிக்காவின் மாநிலங்களுக்குக் குறிப்பிட்ட எண்ணிக்கையில் ஒதுக்கப்பட்டுள்ள தேர்தல் சபை உறுப்பினர்களுக்குத்தான் மக்கள் வாக்களிக்கிறார்கள். இந்த உறுப்பினர்களை அதிகளவில் பெறுபவர்தான் அதிபராவார். இதன்படி இந்தத் தேர்தல் சபை உறுப்பினர்கள் கடந்த ஆண்டு மார்கழி மாதத்தில் தங்கள் வாக்குகளை சீலிட்ட உறையில் குறித்து அஞ்சலில் நாடாளுமன்றத்துக்கு அனுப்பி வைத்தனர். தேர்தல் முடிந்து வாக்குகளை எண்ணிய அந்த நாட்டுத் தேர்தல் சபை ஜோ பிடெனை அதிபராகத் தெரிவு செய்தாலும் இந்த உறுப்பினர்கள் அனுப்புகின்ற வாக்குச்சீட்டுகளை நாடாளுமன்றக் கூட்டத்தில் எண்ணிப்பார்த்த பின்னர்தான் பிடெனின் வெற்றியை நாடாளுமன்றம் உறுதி செய்யும். இவ்வாறு உறுப்பினர்கள் அனுப்பிய வாக்குகளைப் பிரித்து எண்ணிக் கொண்டிருந்தபோதுதான் ட்ரம்ப்பின் ஆதரவாளர்கள் நாடாளுமன்றுக்குள் புகுந்து அதை ரணகளமாக்கியுள்ளனர். பிடென் வெற்றி பெற்றார் என்ற முடிவை மாற்றவேண்டும் என்றும், அவர் வெற்றி பெற்றதாக நாடாளுமன்றம் சான்றளிக்கக் கூடாது என்றும் வலியுறுத்தவே அவர்கள் நாடாளுமன்றத்துக்குள் புகுந்துள்ளனர்.



**தப்பியோடிய உறுப்பினர்கள்**

நாடாளுமன்றுக்குள் புகுந்து இவ்வாறு கலகத்தில் ஈடுபட்ட ட்ரம்ப் ஆதரவாளர்களின் அடாவடியைத் தாங்க முடியாமல் நாடாளுமன்றக் கூட்டத்தில் பங்கேற்ற உறுப்பினர்கள் தப்பி ஓடினர். சபைத் தலைவரின் இருக்கையில் கலகக்காரரில் ஒருவர் காலுக்கு மேல் கால் போட்டபடி அமர்ந்து ஒளிப்படம் எடுப்பவர்களுக்கு அட்டகாசமகக் காட்சி கொடுத்தார். மட்டுமன்றி நாடாளுமன்றத்தில் உரைநிகழ்த்துவதற்கு ஒலிவாங்கி பொருத்தப்பட்டிருந்த மரத்தால் ஆன சிறிய மேடையை கலகக்காரரில் ஒருவர் தூக்கிச் சென்றார்.



ஹொலிவூட் படங்களில் விறுவிறுப்பான சண்டைக்காட்சிகளில் வருகின்ற நாயகர்கள் மற்றும் வில்லன்களைப்போல நாடாளுமன்றத்தின் உள் மற்றும் வெளிச் சுவர்களில் கலவரக் கும்பல் தாவி ஏறிப் பெரும் குழப்பங்களுக்கு வழிகோலினர். இதனால் சிதைந்து சின்னாபின்னமாகியது அமெரிக்காவின் நாடாளுமன்றம்.

> “பிடென் வெற்றி பெற்றார் என்ற முடிவை மாற்றவேண்டும் என்றும், அவர் வெற்றி பெற்றதாக நாடாளுமன்றம் சான்றளிக்கக் கூடாது என்றும் வலியுறுத்தவே அவர்கள் நாடாளு மன்றத்துக்குள் புகுந்துள்ளனர்.”

**ட்ரம்ப் மீது பாய்ச்சல்**

தனது ஆதரவாளர்களைத் தூண்டும் வகையில் பேசி இந்தக் கலவரத்துக்குக் காரணமானார் என்று ட்ரம்ப் மீது பலரும் பாயத் தொடங்கினர். இதனால் இந்த கலவரத்துக்கு அவரே பொறுப்பு என்று அவரது சொந்தக் கட்சியினரே குற்றம் சாட்டுகின்றனர். நடந்து முடிந்த இந்தக் கலவரத்தால் ட்ரம்ப் ஆதரவாளர்கள் எதை வலியுறுத்த முனைந்தார்களோ அதற்கு நேரதிரான சம்பவங்களுக்கே கலகம் வழிவகுத்தது. பிடென் வெற்றியை ஏற்பதற்குத் தயக்கம் காட்டி வந்த ட்ரம்பின் கட்சியை நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர், இந்தக் கலவரத்துக்குப் பிறகு வெளிப்படையாகவே பிடெனின் வெற்றியை ஏற்றுள்ளர். ட்ரம்ப் உடனடியாகப் பதவி நீக்கப்படவேண்டும்’ என்று ஜனநாயகக் கட்சி செனட் சபை உறுப்பினர் சக் ஷுமர் குறிப்பிட அவ்வாறு பதவி நீக்கப்படாவிட்டால், அவர் மீது கண்டனத் தீர்மானம் கொண்டுவர முடியும் என்று சபைத் தலைவர் நான்சி பெலோசி கூறினார். பதவி நீக்கம் செய்யவேண்டுமானால் அதற்கு குடியரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவும் தேவை. இந்த நிலையில்தான் சில குடியரசுக் கட்சி உறுப்பினர்களும் இதற்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். ட்ரம்பின் அரசியல் எதிர்காலத்தை இருள் சூழ்ந்துள்ளது என்பதே இப்போதுவரை வெளிச்சமாகத் தெரிகிறது. “அரசன் எவ்வழியோ மக்களும் அவ்வழியில்தான் போவார்கள்” என்று ட்ரம்ப்பையும் கலகத்தில் ஈடுபட்ட அவரது ஆதரவாளர்களையும் தூற்றுவதும் வெளிப்படையாகத் தெரிகிறது. ■




"வழக்கம் போல இண்டைக்கும் ஏதாவது அரசியல் பேசிப் போட்டுப் போவன் எண்டு நினையாதீங்கோ... இண்டைக்கு கொஞ்சம் வேற கதை சொல்லப் போறன்...."

"என்னண்ணை... என்னண்ணை...." எண்டபடி வந்து வாய் பிளந்தான் கந்தன்.

"நாட்டில ஆள் - தகுதி - பால் - வயசு வேறுபாடில்லாமல் கொரோனா ஒரு பிடி பிடிச்சுக் கொண்டு இருக்குது... என்ன கடவுள் புண்ணியமோ தெரியாது... எங்கட இடத்தில கண்டபடி பரவினாலும்... எங்கட சனத்தின்ர எதிர்ப்பு சக்தியோ என்னமோ... வீரியம் கொஞ்சம் குறைவாத்தான் இருக்குது..."

"அதுக்காக.... நாங்கள் கவனமில்லாம இருக்கேலுமே அண்ணை? இங்க கடையடியில இருந்து கதைக்கேக்ககூட நாங்கள் எவ்வளவு கவனமா... மாஸ்க் போட்டபடி கதைக்கிறம் பாருங்கோவன்...." இது அப்பன்.

"ஓமடாம்பி... அப்பாவிச் சனம் என்னவோ... கவனமாத்தான் இருக்குதுகள்... ஆனா.. பெரியவைதான் ஒரு மார்க்கமா நிக்கினம்...."

"அதெப்பிடி அண்ணை...? பிடிக்கிற வருத்தம் சின்னவை, பெரியவை எண்டு பாத்தே தொத்தப்போகுது...?"

"அது உனக்கும், எனக்கும் விளங்குது... ஆனா கதிரையில இருக்கிறவைக்கு அது விளங்குதில்லையே....!

அங்க அமைச்சரவையில இருக்கிற ஒரு அமைச்சருக்கே கொரோனாவாம்... ஆனா இங்க வாற அமைச்சர்மாரைப் பற்றி ஆரும் கதைக்கப்படாது எண்டு கடும் உத்தரவு பாருங்கோ....

கொழும்பில திடீரெண்டு லொக் டவுணைப் போட இங்க அமைச்சர் மார் எல்லாரும் அள்ளுப்பட்டுக் கொண்டு வந்தவையெல்லே... அவையள்ள ஒருத்தரும் மாவட்டம் விட்டு மாவட்டம் வந்ததா தனிமைப்படுத்தப்படவுமில்லை... கோவிட்டுக்குச் சோதிக்கவுமில்லை...

ஆனா உள்ளூரில .... ஒரு ஊரை விட்டு மறு ஊருக்குப் போய் மேசன் வேலை செய்த ஏழை, பாளையளை வீட்டுக்குள்ள இருக்கவேணும், சோதனை செய்யவேணும் எண்டா அதுகள் எங்க போறது...? எங்கட எம்.ஓ.எச். மாருக்கு கொஞ்சமும் மனச்சாட்சி இல்லாத மாதிரி நடந்து கொள்ளினம் பாருங்கோ.... அவையளும் என்ன செய்யுறது... அவையளின்ற மேலிடம் சொல்லுறததானே செய்யினம்.

இப்பிடி அன்றாடம் காய்ச்சியள ஆட்டிப்படைக்கிற சுகாதாரப் பகுதி... மாவட்டம் விட்டு மாவட்டம் போய் வாற ஆக்களைக் கண்டு கொள்ளினமே இல்லை.. கேட்டா.. அது மேலிடத்து உத்தரவாம்...

இப்பிடித்தான் அங்க... பெரிய பள்ளிக்கூடத்தில படிக்கிறவையளும், படிப்பிக்கிறவையளும் கிழமை தவறாமல் ஊருகளுக்குப் போய் வருகினம்... அதுகும் சொந்த வாகனத்தில இல்லை.... பொதுப் போக்குவரத்தில....

நிதியைக் கையாளுற அலுவலகத்தில அதிகாரத்தில இருக்கிற ரெண்டு அம்மணிமாரும்... ஒரு ஐயாவும் இப்பிடித்தான் போய் வருகினம் எண்டு அந்தப் பகுதி எம்.ஓ.எச். சிட்ட சொல்ல, அவர் நான் என்ன செய்யுறது.. பெரிய இடத்தில இருந்து சொல்லுப்பட்டுக் கிடக்குது... அவையளப் பாக்க வேணாமெண்டு...

அப்ப அரச உத்தியோத்தருக்குக் கிருமி அண்டாதோ? இது தான் இப்பிடி எண்டா... கோப்பாய் பிரதேச எம்.ஓ.எச். ஏற்கனவே சண்டிலிப்பாயில வைச்சு பி.சி.ஆர். செய்து தொற்றில்லை எண்டு வந்த ரெண்டு பிள்ளையளுக்கு, அடுத்த நாளே கோப்பாயில வைச்சு சோதிச்சுத்தான் ஆக வேணுமெண்டு நிண்டு கொண்டாராம்....

அந்தப் பிள்ளையள் ரெண்டும் தொழில் பயிற்சி அதிகார சபையால நடத்திற ஒரு லட்சம் வேலை வாய்ப்புப் பயிற்சியில கலந்து கொண்டது எண்டு சண்டிலிப்பாயில பி.சி.ஆர். செய்து அதில தொற்று இல்ல எண்டு சொல்லுப்பட்டு அறிக்கையும் அச்சடிச்சுக் குடுத்திருக்கினம்.... அடுத்த நாள் கோப்பாய் கோயிலடியில வைச்சு செக் பண்ணேக்க அவை ரெண்டு பேரையும் சோதிச்சுப் பாத்தா அண்டைக்கும் ஒண்டுமில்லயாம்...."

"அண்ணை தெரியாமத்தான் கேக்கிறன்! ஒராளுக்கு செக் பண்ண எவ்வளவு முடியும்?"

"தம்பி கிட்டத்தட்ட ஒராளுக்கு பத்தாயிரம் முடியுமாம்....! அரசாங்கக் காசுதானே! போனால் போகட்டும் விடு....."

- ஆதிரன்.

# லசந்த கொல்லப்பட்டு 12ஆண்டுகள்...!

■ தர்மீகன்

2009ஆம் ஆண்டு போர் முடிவுக்குக் கொண்டு வரப்படும் தறுவாயில் மௌனிக்கச் செய்யப்பட்ட பத்திரிகையாளர் லசந்த விக்கிரமதுங்க. போர் இறுதிக் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருந்தபோது அப்போதிருந்த மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசின் அடக்குமுறைகள், போர் விதி மீறல்கள், மனித உரிமை மீறல்கள் எனப் பலதையும் வெளிப்படையாகப் பேசியும் எழுதியும் துணிவுடன் விமர்சித்தும் வந்த சிங்களப் பத்திரிகையாளரான லசந்த விக்கிரமதுங்கவின் உயிர், போர் முடிவுக்கு வரும் முன்னரே முடிவுறுத்தப்பட்டது. அவர் கொல்லப்பட்டு இன்றைக்குப் 12ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனாலும் இறுதிப்போர்க் குற்றங்களால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் நீதிகோரி ஐ.நாவுக்கும் நீதிமன்றங்களுக்கும் அலைவதைப்போலவே கொல்லப்பட்ட பத்திரிகையாளரான லசந்த விக்கிரமதுங்கவின் குடும்பமும் அலைகிறது. ஆட்சி மாறினாலும் ஆட்கள் மாறாமல் இருப்பது இவர்களுக்கான நீதியைப் பின்தள்ளிக்கொண்டேயிருக்கிறது. பாதிக்கப்பட்டவர்களின் போராட்டம் தொடர்ந்தவண்ணமே இருக்கிறது. தைமாதம் 8ஆம் திகதியன்று காலை 9.30மணியளவில் தலைநகர் கொழும்பில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்ட லசந்த விக்கிரமதுங்க இலங்கை அரசுக்கெதிராகவும் பல அரசியல்வாதிகள் தொடர்பாகவும் ஆயுதக் குழுக்கள் தொடர்பாகவும் மிக நீண்ட காலமாகக் மிகக் காராசாரமான கட்டுரைகளை 'சண்டே லீடர்', மோர்னிங் லீடர் மற்றும் ஞாயிறு சிங்களப் பத்திரிகையான 'இருதின' என்பனவற்றில் எழுதி வந்தவர். சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியரான இவரைக் கொல்வதற்கு பலதடவைகள் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் 2009இலேயே அவர் கொல்லப்பட்டார். இந்தச் சம்பவங்களில் ஏதாவது ஒன்றுகுறித்துக் கூடப் பொலிஸார் விசாரணைகளை நடத்திச் சம்பந்தப்பட்டவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தவில்லை - தண்டிக்கவில்லை. அவர் கொல்லப்பட்ட கையோடு நடந்த கண்டன ஆர்ப்பாட்டப் பேரணியை அடுத்து அமெரிக்கா, பிரிட்டன், சீனா, ஐரோப்பிய ஒன்றியம், உலக வங்கி, உலக சமாதான சபை எனப் பல தரப்பும் அவரது கொலையைக் கண்டித்து அறிக்கைகள் வெளியிட்டன. ஆனால், அந்த அறிக்கைகளால் இதுவரை அவரது கொலைக்கு எவ்வித நீதியும் கிடைக்கவில்லை.

அவரது கொலை குறித்து கொழும்பு பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு நுவரெலியாவைச் சேர்ந்த வாகனம் திருத்தும் நிலையம் ஒன்றின் உரிமையாளரையும், இராணுவப் புலனாய்வுப் பிரிவு உறுப்பினர் ஒருவரையும் கைது செய்தது. இவர்களில் முதலாமவர் சிறையிலேயே உயிரிழந்தார். இராணுவப் புலனாய்வுப் பிரிவு உறுப்பினர் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்த நிலையில், இவர் மீதான வழக்கு 2013 செப்ரெம்பர் 6 இல் கல்கிசை நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது பிரதம நீதிபதி ரங்க விமலசேன சட்டமா அதிபரின் ஆலோசனைக்கமைய அவரை விடுதலை செய்தார். தன்னிடம் புலனாய்வுப் பிரிவினர் கட்டாய வாக்குமூலம் வாங்கியதாக இக்கைதி முன்னர் தெரிவித்திருந்தார். இப்படியாக 12ஆண்டுகளைக் கடந்துள்ளது இந்தப் பெரும் பத்திரிகையாளனின் கொலையாண்டு. தை மாதம் 8ஆம் திகதி கொல்லப்பட்ட லசந்த, தை மாதம் 11ஆம் திகதி வெளியாக வேண்டிய 'சண்டே லீடர்' பத்திரிகைக்கு முற்கூட்டியே 'மரணத்தின் பாதையை நான் அறிவேன்' என்ற தலைப்பில் ஒரு பத்தியை எழுதினார். அவர் கொல்லப்பட்ட பின்னர் அது வெளியாகியது.



"என் மரணத்தின் பாதையை நான் அறிவேன். நீ போலியான சத்தத்தை எழுப்பிக்கொண்டு, பொலிஸை அழைத்து வேகமாக விசாரணை மேற்கொள்வாய். கடந்த காலங்களில் நீ உத்தரவிட்ட விசாரணைகளைப் போலவே, இப்போதும் நடக்கும். ஆனால், ஒன்றும் வெளியே வராது. நம் இருவருக்கும் தெரியும், என் மரணத்துக்குப் பின்னால் யார் இருக்கிறார்கள் என்று. ஆனால், துணிந்து அவர் பெயரைச் சொல்ல முடியாது உன்னால். என் வாழ்க்கையில் மட்டுமல்ல, உன்னைப் பொறுத்து இது தான் உனக்கும். உன் காலத்தில் தான் என் மரணம் நடந்தது என்பதை எந்த நேரத்திலும் உன்னால் மறக்க முடியாது!

என் மறைவு, சுதந்திரத்தை வீழ்த்தாது. இதற்காகப் போராடுபவர்கள் தொடர்ந்து பணியாற்ற ஊக்கமாக அமையும். நமது தாய் நாட்டின் மனித சுதந்திரத்துக்கு ஒரு தொடக்கமாக அமையும். தேசப்பற்று என்ற பெயரால் பலர் தங்களது உயிரைத் துறக்கும் உண்மையை ஜனாதிபதி தெரிந்துகொள்ள இது உதவும். மனித நேயம் வளம் பெறும். எத்தனை ராஜபக்சாக்கள் இணைந்தாலும் அதை அழிக்க முடியாது"

# பாரதியாருடன் ஒரு செல்பி...!

பாரம்பரிய மற்றும் பழங்காலப் பொருள்களைக் கொண்டமைந்த அருங்காட்சியகத்தில் உள்ள விலங்குகள், மனிதர்கள், பறவைகள், மற்றும் இயந்திர சாதனங்கள் என அனைத்துச் சடப்பொருள்களுக்கும் இரவானதும் உயிர் வந்துவிடுகின்றது. இது ஆங்கிலத் திரைப்படங்கள் பலவற்றில் காட்சியாக்கப்பட்டுள்ளது. இதனால் அந்தத் திரைப்படங்களுக்குக் கிடைத்த வரவேற்புக் காரணமாக அடுத்தடுத்த பாகங்களாகக்கூட அவை வெளியாகின. மறு பாகங்களில் மாயாஜால வித்தைகள் புனையப்பட்டு மெருகூட்டப்பட்டுத் திரைகளில் சக்கைப்போடு போட்டன. இந்த வகை அனுபவத்தை விரும்புபவர்களும் அதிகம். அதனால்தான் இத்தகைய விநோத அருங்காட்சியங்களை



அமைப்பதில் பலர் முண்டியடிக்கிறார்கள். "மெடிக்கல் மிராக்கல்" என்றழைக்கத்தக்க இந்தப் புதிய வகைக் காட்சியகத்தைத் தந்திரக் கலைக் காட்சியகம் என்கிறார்கள். இந்த வகைக் காட்சியகங்களில் முப்பரிமாணத் தன்மையில் அமைந்த ஓவியங்களை வடித்து அதன் அருகில் நின்று பார்வையாளர்கள் தங்களைப் படம் பிடித்துக் கொள்ளும் புதுவித அனுபவத்தை ஏற்படுத்துகிறார்கள். உயிரோட்டம் மிக்க அந்த ஓவியங்களுடன் இணைந்து ஏதாவதொரு செயலைச் செய்வதாகவும், அந்த ஓவியத்துடன் பொருந்திப் போகத்தக்க விதத்தில் காட்சி கொடுப்பதாகவும் பார்வையாளர்கள் தம்மைப் படம்பிடிப்பது புதுவித அனுபவத்தை அவர்களுக்குள் பாய்ச்சுகிறது. அவர்கள் பூரிக்கிறார்கள். இரு பரிமாணத்தில் வரையப்பட்டிருக்கும் ஓர் ஓவியத்தை முப்பரிமாண ஓவியமாக மாற்றிக்காட்டும் மாய வித்தைதான் இந்தத் தந்திரக்கலை. கிரேக்க, உரோமானிய காலத்தில் உருவானது இது. உலகம் முழுவதும் பல நாடுகளில் இந்தத் தந்திரக்கலை அருங்காட்சியகங்கள் உள்ளன. ஹொங்கொங், சிங்கப்பூர், இந்தியா உள்ளிட்ட நாடுகளிலும் இந்த வகைக் காட்சியகங்கள் உள்ளன. இந்தியாவின் சென்னையில் அமைந்துள்ள 'கிளிக் ஆர்ட்' அருங்காட்சியகத்தில் தம்படம்





எடுக்கும் சிம்பன்சி, வெனிஸ் படகுப் பயணம், புருஸ்லியிடம் அடி வாங்குவது, ஆதாமிடம் அப்பிள் வாங்குவது, ஓஸ்கர் விருது பொம்மையிடமே ஓஸ்கர் விருது வாங்குவது, பொம்மலாட்டம் ஆடுவது, தம்படம் எடுக்கும் பாரதியார் எனப் பல சுவாரசியமான ஓவியங்கள் உள்ளன. இந்த ஓவியங்களுடன் தன்னை இணைத்துப் படம் எடுத்துக் கொள்பவர் அந்த ஓவியங்களின் ஒரு பகுதியாக மாறிவிடுகிறார்.




இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ, கஸ்தூரியர் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.01.2021 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு: 0214927781